# கண் சிமிட்டும் நேரத்தில்



ஆர்.மணிமாலா

வரட்டுமா, வரட்டுமா? என்று கண்ணாமூச்சிக் காட்டிக் கொண்டிருந்தது மழை! அந்த பயத்திலேயே இருண்டுப் போயிருந்தது மேகங்கள். அருமையான இளைமேட்டை ரசித்தபடி... பறவைகள் ஒரே சீராய் பறந்துக் கொண்டிருந்தன.

எங்கிருந்தோ வந்த தும்பிகள், கூட்டம் கூட்டமாய் இங்குமங்கும் ரீங்கரித்துக் கொண்டே வானிலை அறிக்கையை வாசித்துக் கொண்டிருந்தது.

தளர்வான நிறத்தில் உதட்டிற்கு லிப்ஸ்டிக் போட்டு, இரு உதடுகளையும் ஒட்டி சரிப் பண்ணி கண்ணாடியில் பார்த்தாள்... நிவேதிதா.

சசிதரன் நிச்சயம் 'ஹே' வென்று ஆச்சர்யமாய் பார்ப்பான்.



# கண் சிமிட்டும் நேரத்தில்...!



- ஆர்.மணிமாலா

இன்றைக்கு மட்டுமல்ல, நேற்றைக்கும், நாளைக்கும் கூட அவள், அவனுக்கு ஆச்சர்யமும் ஆனந்தமும் தரும் இதமான அழகிதான்!



கண்டிஷனருக்கு கட்டுப்பட்ட பளபளப்பான கேசம்! எப்படி கலைத்து விட்டுக் கொண்டாலும், கலையாத... சிநேகா போன்ற கேசம். உதடுகளில் நிரந்தரப் புன்னகை. வலது கண்ணை விட இடது கண்ணின் கருவிழி சற்று விலகியிருக்க.. அந்த மாறுகண்தான் நிவேதிதாவின் விசேஷம். பார்க்கும் பார்வையிலேயே அத்தனை வசிகரமிருக்கும். கூர்மையான நாசியில் புத்திசாலித்தனம் மிளிரும். வெள்ளையில் சிவப்பு நிற த்ரெட் ஒர்க் செய்யப்பட்ட புல்ஹாண்ட் டாப்ஸ். சிவப்பு நிற பட்டியாலாவில் அழகும், கம்பீரமுமாய் கண்களை நிறைத்தாள்.

வாட்ச் அணிந்தபடி ஜன்னலருகே வந்து நின்றவள்... சில கணங்கள் தன்னை மறந்து ரசித்தாள்.

சூடாய்... ஏலம் மணக்க டீ குடிக்கத் தூண்டும் இதமான க்ளைமேட். மாநாடு நடத்திக் கொண்டிருந்த தும்பிகள். சில்லென்று தலையாட்டிக் கொண்டிருந்த மரங்கள். குளிரைக் கலந்து ஊசியாய் மேனியைத் துளைத்த தென்றல் சோம்பேறித் தனத்தை இன்ஸ்டன்டாய் உற்பத்தி செய்தது.



உடனே தன் செல்போன் கேமராவில் அக்காட்சிகளை படம் பிடித்தாள்.

"நேரமாச்சே... இன்னும் கெளம்பலையா நிவி?" அறைக்குள் நுழைந்தாள் சுபத்ரா.

"ஏம்மா விரட்டறே? அஞ்சு நிமிஷம் லேட்டாப் போனாதான் என்னவாம்?"

"அது சரி.. நீ அஞ்சுநாள் லீவுப் போட்டாலும் சந்தோஷப்படற முத ஆள் நான்தான். கேமராவும், மைக்குமா நேரம் காலம் தெரியாம நீ அலையற பொழைப்பு எனக்கு அப்பவிருந்தேப் பிடிக்கலே!"

"தெரியும்... அதனாலேயே எனக்கு இந்த வேலை ரொம்ப பிடிச்சிருக்கு."

"நான் எதைச் சொன்னாலும் எதிர்வாதம் பண்றதே வேலையாப் போச்சு!"

"என் வேலை அப்படிம்மா..."

"சரி... உனக்கு சமமா வாதம் பண்ற சாமர்த்தியம் எனக்கில்லே... டிபன் ரெடியாயிருக்கு... சாப்பிட வா!"

"சிலபேருக்கு அதிர்ஷ்டம் ரெயில்ல வருமுன்னாடியே, துரதிர்ஷ்டம் டெலிகிராம்ல வருமாம். என் கஷ்டகாலம் இந்த வீட்டு கிச்சன்ல டிபன் ரூபத்துல இருக்கு!"

"ஏண்டி பேசமாட்டே? சமையலை சப்புக் கொட்டி சாப்பிட்டுட்டு பெருமையா உன் பிரண்ட்ஸ்களையும் வீட்டுக்கு வரவைப்பியே... அதெல்லாம் மறந்துப் போச்சா?"

"ஏன் சுபத்ரா கோவிச்சுக்கறே? சும்மா விளையாடினேன்!"

"......?!"

"ஏம்மா... எனக்கு உன்னை விட்டா வேற யாரு இருக்கா? உன் புருஷன் லடாக்ல எந்த கிச்சன்ல, எந்த சிக்கனை சுட்டுட்டு.. முறைக்காதே, முறைக்காதே, எந்த தீவிரவாதியை சுட்டுக்கிட்டிருக்காரோ? மிஸ்டர் கர்னல் கருணாகரனுக்கு, சென்னை அடையாறுல அழகா, அம்சமா சுபத்ராங்கற வொய்ப் இருக்கறதோ, படு சுட்டியா இருபத்திரெண்டு வயசுல ஒரு பொண்ணு இருக்கறதோ, பொண்ணு அளவுக்கு இல்லேன்னாலும், சுமாரா படிக்கிற ஒரு பையன் இருக்கறதோ ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறைதானே ஞாபகத்துக்கே வருது? உன் மக்குப் பையனை ஊட்டி கான்வென்ட்டுக்கு அனுப்பி படிக்க வைக்கறே! நீயும், நானும் மட்டுமே இருக்கற வீட்ல... எந்நேரமும் கொஞ்சிக்கிட்டா இருக்க முடியும்? போர் அடிக்காது? அதுவும் நீ சிரிச்சுக்கிட்டு இருக்கப்பவிட இப்படி உம்முனு இருக்கும் போதுதான் பார்க்க கொஞ்சமாவது சுமாராயிருக்கே!"

"ஐய்யோ... பேசியேக் கொல்லாதே நிவி... நேரமாச்சுன்னு சாப்பிடாம ஓடிடாதே... வா!"

"அதுக்குள்ளே எப்படிம்மா சமாதான மாயிட்டே? கொஞ்சம் கூட சூடு சொரணையே இல்லையா?" அம்மாவை மேலும் சீண்டினாள் நிவேதிதா.

"எப்படி இருக்கும்... நான் உன்னோட அம்மாவாச்சே?"

"போட்டுத் தாக்கறியேம்மா!" அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு சிரித்தாள்.

X X X

'சிட்டிஸன்' சேனல் அலுவலகம். ஹைடெக் அலுவலகத்துக்குரிய அத்தனை தகுதிகளும் நிறைந்து ததும்பின. சாரல் மழையில் நீலநிறக் கண்ணாடிகள் குளித்துக் கொண்டிருந்தன.

அம்மா எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் காரில் செல்லாமல், வழக்கம்போல் டூவீலரில் தான் அலுவலகம் வந்தாள். உடையலங்காரம் கலைந்து விடக்கூடாதே என்று ரெய்ன்கோட் மட்டும் பெரிய மனதுப் பண்ணி அணிந்து வந்தாள்.

இவளைப் பார்த்ததும் வாட்ச்மேன் கேட்டைத் திறந்து விட, பதிலுக்கு புன்னகைத்து விட்டு உள்ளே செலுத்தினாள்.

சசியின் சாம்பல்நிற சான்ட்ரோ மழையில் உற்சாகமாய் குளித்துக் கொண்டிருக்க.. அதை ஆசையாய் கண்களால் வருடியபடி இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தன் வண்டியை நிறுத்திப் பூட்டினாள்.

ஆட்களுடனும், கேமராக்களுடனும் வேன் ஒன்று இவளைக் கடந்து சென்றது.

அலுவலகம் பரபரப்பாய் இருந்தது.

நிவேதிதா தன் ரெய்ன்கோட்டை கழற்றினாள். கழுத்தில் அவள் புகைப்படம் அடங்கிய அடையாள அட்டை நீளமாய் தொங்கியது.

அவள் சிட்டிஸன் சேனலில் சிறப்பு நிருபராக மட்டுமின்றி, நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருக்கிற இளம்பெண். திறமைசாலி. அவள் தயாரிக்கிற நிகழ்ச்சிகள் சேனலுக்கு நல்ல பெயரை பெற்றுத் தருவதால்... அங்கு செல்லப் பெண்ணாக மட்டுமின்றி... அனைவரின் மரியாதைக்குரியவளாகவும் இருந்தாள்.

தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள். அறை முழுக்க ஏசியின் குளுமை நிறைந்திருக்க... அணைத்தாள். ஏற்கனவே அவள் தளிர்மேனி குளிரில் நடுங்கிக் கொண்டிருந்ததே!

கதவைத் தட்டி விட்டு கேமராமேன் சாகர் உள்ளே வந்தான். அடுத்தமாதம் திருமணமாகப் போகிற இளைஞன்.

"குட்மார்னிங் மேடம்!"

"ஹாய்... குட்மார்னிங்... வாங்க சாகர்! நானே வரச் சொல்லணும்னு இருந்தேன். கேஸட் ரெடியா?"

"எடிட்டிங் ரூம்ல இருக்கு. வாங்கிட்டு வந்திடறேன்."

"தாங்க்ஸ்... கல்யாண வேலை எல்லாம் எந்த அளவுல இருக்கு?"

"நல்லா நடந்துட்டிருக்கு மேடம்... வீட்ல அண்ணன், அக்கா, வாப்பா, மச்சான் எல்லாரும் இருக்கறதால எனக்கு எந்த டென்ஷனும் இல்லை..."

"குட்..."

"கேஸட் எடுத்துட்டு வந்திடறேன் மேடம்"

அடுத்த பத்து நிமிடத்தில் சாகர் கொடுத்த கேஸட்டுடன்.. சசிதரன் அறை நோக்கி நடந்தாள்.

'சசிதரன்.. எக்ஸிகியூட்டிவ்' என்று நிலைக்கதவில் பித்தளை போர்டில் பெயர் கண்சிமிட்ட... மெல்ல கதவில் டொக்கினாள்.

"எஸ்... கம்மின்!"

உள்ளே நுழைந்த நிவேதிதா பெவ்வகை ... ன் "குட்மார்னிங் சார்!" என்றாள்.

"குட்மார்னிங்!" என்ற சசியின் கண்கள் அவளைப் பார்த்து 'ஹே...'வென ஆச்சர்யம் காட்டியது.

× × ×

2

அவள் எதிர்பார்த்ததுதான்! ஆனால், அவன் ஒவ்வொரு முறையும் தன்னை புதிதாய் பார்ப்பதுப் போல் வியப்பது வேடிக்கையாக மட்டுமின்றி, வியப்பாகவும் இருந்தது.

அவள் அவனை நேசிப்பதும், அவன் அவளை நேசிப்பதும் இருவருமே உணர்ந்திருந்தாலும், வெளிப்படையாக கூறிக் கொள்ளவில்லை. இதுவும் ஒரு த்ரில்லிங்காக இருப்பதை ரசித்தனர்.

"சிட்டவுன் நிவேதிதா!"

அமர்ந்தாள்.

"கார்ல வந்தீங்களா?"

"ம்ஹூம்... டூவிலர்லதான். ஏன்?"

"அலங்காரம் கலையாம வந்திருக்கீங்களே..."

"ரெயின்கோட் உபயோகத்தால்!" என்றாள் மெல்லிய நாணத்துடன்.

"டீ ஆர் காபி?"

"டீ!"

இன்டர்காமில் ஆர்டர் பண்ணி விட்டு நிமிர்ந்தவன் நிவேதிதா நீட்டிய கேஸட்டை வாங்கிக் கொண்டான்.

"என்ன கேஸட்?"

"போன வாரம் கும்பகோணத்துல ஒரு ஆண் திருநங்கையா மாறினதையும், அதனால, அந்த நபரும், அவரைச் சார்ந்தவங்களும் எந்த மாதிரியான மன உளைச்சலுக்கு ஆளானாங்கங்கறதைப் பத்தி எடுத்தது"

"வெரிகுட்... நல்ல கான்ஸப்ட் நிவேதிதா. எங்கேர்ந்துதான் தேடிப் பிடிக்கறீங்களோ விஷயங்களை. டப்பிங், எடிட்டிங் எல்லாம் முடிச்சாச்சா?"

"முடிச்சாச்சு சார்! இது மூணு வாரம் தொடர்ந்து வரும்."

"சரி... அடுத்த கான்ஸப்ட் என்ன?"

"போலீஸ் அதிகாரிங்க தங்களோட வேலைப்பளுவை குறைக்க எண்ணி, சாதாரண ஆளுங்களையும், சாமானிய ஆளுங்களா சித்தரிக்க என்கவுண்டர்ல போட்டுத்தள்றாங்க. அப்படி இறந்துப் போன அப்பாவிகளோட மனைவி, பிள்ளைகள் இவங்களோட இன்றைய உண்மையான நிலவரம் என்னங்கறதை புதல்ல அவங்களுக்கேத் தெரியாம சில விஷயங்களை ஷூட் பண்ணிட்டு, நேரடியாகவும் இன்டர்வியூ பண்றோம். அவங்க உண்மையிலேயே பரிதாபத்துக்குரியவங்களா, இல்லே பயங்கரவாதிங்களாங்கறதை சொல்லப் போறோம்."

"சீரியஸான விஷயமாச்சே நிவேதிதா. போலீஸ், தாதான்னு உங்களுக்கு ஆபத்து வரலாமே?" என்றான் கவலையுடன்.

"எக்ஸிகியூட்டிவ் சசிதரன் என்னைக் காப்பாத்த மாட்டாரா என்ன?" என்றாள் குறும்புடன்.

"உங்களைக் காப்பாத்தற பொறுப்பு எனக்கு இருக்குங்கறதை... கடவுள் பிறக்கும் போதே சொல்லி அனுப்பிட்டான்" என்றான் அவனும் விடாமல்.

"அப்படியா... கர்னல் கருணாகரனுக்கு போன் பண்ணி... நிஜமான்னு கேக்கட்டுமா?"

"நான் கடவுள் பத்தி சொன்னா... நீங்க யாரோ கருணாகரனைப் பத்திப் பேசறீங்க."

"அவர் யாரோ இல்ல சார். என்னைப் படைத்த கடவுள். என் டாடிய சொன்னேன்!"

"ஓ... ஸாரி... ஸாரி..." பதறினான்.

சிரித்தாள்.

"ஏன் நிவேதிதா... உங்களுக்கு நல்ல டேலண்ட் இருக்கு... ஏன் மெகா சீரியல் பண்ணக் கூடாது."

"ஸாரி சார்... எனக்கு மக்களை அழவச்சு டைமை வேஸ்ட் பண்றதுல உடன்பாடு இல்லே."

''ஒரு பொண்ணா இருந்துட்டு சீரியல் பிடிக்கலேங்கறீங்க... வித்தியாசமா இருக்கீங்க.''

''நான் மட்டுமில்லே... இப்ப உள்ள யங்கர்ஸ்ல நைன்டி பர்சன்ட் டி.வி. முன்னாடி உட்காரதில்லேங்கறதுதான் நிஜம்.''

''ஒரு டி.வி. ரிப்போர்ட்டரா இருந்துகிட்டு, நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்துகிட்டு, சேனல் எக்ஸிகியூட்டிவ்கிட்டேயே இந்த கருத்தைச் சொல்றீங்கன்னா... என்னன்னு நினைக்கறது?''

''இந்த காலத்திலே கருத்துரிமைங்கறது சமபாலருக்கும் பொதுவானது... சுதந்திரம் இருக்குன்னு அர்த்தம்!''

''நிவேதிதா... உங்ககிட்டே இன்னொரு முக்கியமான விஷயம் பேசணும்.. இப்ப நேரமில்லே... சட்டமன்ற கூட்டத் தொடர் இருக்கு. நீங்க போகணுமில்லையா?''

''ஆமா சார்!''

''நானும் அர்ஜன்டா வெளியேப் போகணும். ஸீ யூ லேட்டர்!''

''ஓக்கே சார்...'' என்று இருக்கையை விட்டு எழுந்துக் கொண்டாள்.

× × ×

மழை இன்னமும் உக்கிரம் தணியாமல் பெய்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் கரித்தூளை கொட்டின மாதிரி இருட்டு. ஈசானிய மூலையில் மின்னல் தெளிந்து... டமடமவென இடி இடித்தது. ஏரியா முழுக்க மின்சாரம் இல்லை.

மணி எட்டாகி விட்டிருந்தது. நிவேதிதா தன் ஸ்கூட்டியை எவ்வளவோ முயன்றும் ஸ்டார்ட் ஆகாமல் முரண்டு பிடித்தது.

'என்னாச்சு... நல்லாதானே இருந்துச்சு? இங்கேயே விட்டுட்டு ஆட்டோ பிடிச்சுட்டுப் போய்டலாமா? லேட்டாச்சுன்னா அம்மா கத்துவாங்களே!' யோசித்தாள்.

சரக்கென சான்ட்ரோ அருகில் வந்து நின்றது.

வழிவிட்டு ஒதுங்கினாள்.

''என்னாச்சு நிவேதிதா?''

''தெரியல... ஸ்டார்ட் ஆக மாட்டேங்குது!''

காரின் உள்ளே பளீரிட்ட விளக்கொளியில் அழகான பல்வரிசை தெரிய சிரித்தான் சசிதரன்.

''எனக்கு அப்பவேத் தெரியும்!''

''என்னத் தெரியும்?''

''கடவுள் சொன்னாரே... நிவேதிதாவோட ஸ்கூட்டி இப்ப ஓடாது... உன் கார்ல அவளை ட்ராப் பண்ணிடுன்னு!'' சொல்லிக் கொண்டே கதவைத் திறந்து விட.... உள்ளுக்குள் மனசு கும்மாளம் போட... ஸ்கூட்டியை ஓரம் கட்டி பூட்டி விட்டு காரில் விட்டு ஏறி அமர்ந்தாள்.

கார் அரைவட்டம் அடித்து... சிட்டி லைன் காம்பவுண்டை விட்டு வெளியேறியது.

''காலையிலே ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு சொன்னீங்களே!''

கண்ணாடியில் வழிந்தத் தண்ணீரை அழகாய் வழித்துப் போட்டுக் கொண்டிருந்த வைப்பரையும் சசியையும் மாறி மாறிப்

# ஆட்டமா, கெட்டிமேளமா?

இந்தியாவைப் பொருத்தவரை பெண்கள் டென்னிஸ் என்றாலே சானியா மிர்சா பெயர்தான் நினைவுக்கு வரும். சர்வதேச டென்னிஸ் அரங்கில் பல வெற்றிகளைக் குவித்து உலக டென்னிஸ் வீராங்கனைகள் தரவரிசையில் 30 இடம் வரை வந்த இந்த ஐதராபாத் அழகு மங்கைதான் இப்போதும்



இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனைகளில் முதல் இடத்தில் உள்ளார்.

ஆனால் அவர் ஆட்டத்தில் முன்புபோல் வேகம் இல்லை. அவர் கவனம் வேறு எங்கோ திரும்பி இருக்கிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்து உள்ளது.

இதற்கு காரணம் அவர் காதலில் ஈடுபட்டு இருப்பதுதான் என்றும் கூறப்படுகிறது. பிரபல இந்தி நடிகர் ஷாகித்கானை சானியா காதலிப்பதாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. சமீபத்தில் பெங்களூரில் நடந்த விழா ஒன்றில் இருவரும் தனிமையில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

எனவே சானியா மிர்சா தொடர்ந்து ஆடுவாரா அல்லது கெட்டிமேளமா? என்பது விரைவில் தெரிந்துவிடும் என்று அவரிடம் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள் தெரிவித்து உள்ளனர்.

பார்த்தபடி கேட்டாள்.

அவளின் வசீகரிக்கும் கண்களை ரசித்தபடி, "நீங்க ஏன் ஒரு லைவ் ஷோ பண்ணக் கூடாது?" என்றான்.

"லைவ் ஷோவா, நானா, மைகாட்!"

"கடவுளை ஏன் கூப்பிடறீங்க? பண்ணினா என்ன? உங்க பேச்சு, அழகு, அறிவு, திறமை எல்லாத்தையும் கேமராவுக்குப் பின்னாலேயே கொட்டிடணுமா? நீங்க அதை தைரியமாப் பண்ணுங்க. கண்டிப்பா சக்ஸஸ்தான். ஃபண்டட் புரோகிராமா பண்ணுங்க... நான் ஏற்பாடு பண்றேன்!"

"என்னால கண்டிப்பா பண்ண முடியும், சக்ஸஸ"ம் ஆகும். ஆனா, எனக்கு சரி வராது"

"ஏன் நிவேதிதா... மேக்கப் போடாமலேயே கேமரா முன்னால தைரியமா நிக்கலாம்... அப்படி ஒரு பர்சனாலிட்டி... அப்புறம் என்ன தயக்கம்?"

"அம்மா!"

"அம்மா?"

"ஆமா சார். அப்பா காலமா இருக்கார். தெரியுமே உங்களுக்குதான்! தம்பியும் ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கறதால அம்மாவோட அன்பு அக்கறை எல்லாமே என்கிட்டேதான் கொட்ட வேண்டியிருக்கு. கொஞ்சம் இந்த சமூகத்து மேல பயம். லோ, என் எதிர்காலத்தை நினைச்சும் பயம். அவங்களோட அதிகப்படியான எதிர்பார்ப்பு நான் டீச்சராகணும். இல்லேன்னா ஒரு ஆபீஸ்ல கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துட்டு ஆறுமணிக்கு வீடு வந்து சேர்ந்துடணும். அதுக்கு எதிர்மறையா, நான் இந்த வேலையிலே சேர்ந்ததேப் பிடிக்கலே. ஆம்பளை மாதிரி எதுக்குடி கேமராவும், மைக்குமா அலையறேன்னு இன்னும் கேக்காம இருக்க மாட்டாங்க. நான் லைவ் ஷோ நடத்தப் போறேன்னு சொன்னா.... பயத்துல மயக்கம் போட்டே விழுந்துடுவாங்க."

"நான் வந்து பேசிப் பார்க்கட்டுமா?"

"ம்ஹூ ஹும்... வேணாம் சார். அம்மாவை கஷ்டப்படுத்த விரும்பலே!"

"சரி.. அம்மாவுக்காக மறுக்கறீங்க. உங்களுக்கு விருப்பமிருக்கு... அப்படித்தானே?"

"இருக்கலாம்... தெளிவா சொல்ல முடியலே!"

"அம்மாவுக்காக இப்ப வேணாங்கறீங்க. நாளைக்கு உங்களுக்கு கல்யாணமாகி, கணவர் விரும்பினால்?"

நிவேதிதா சடாரென அவனைப் பார்த்தாள்.

x x x




"என்ன புரியலையா? என்னை மாதிரியே... உங்களுக்கு கணவராக வருபவரும் நீங்கள் டி.வி.யில் தோன்ற வேண்டும் என்று ஆசைப் பட்டால், அப்ப என்ன பதிலை சொல்வீங்க?"

அவனின் விஷமத்தனமான கேள்வியை புரிந்துக் கொண்டவள் உதடை கடித்து சிரிப்பை மென்றாள்.

"அதை அவர் வந்து சொல்லட்டும்... பதில் சொல்றேன்."

"சொல்லுவார்... சொன்னதாகவே நினைத்துக் கொள்ளுங்களேன்!" என்றான் அர்த்தமுடன் அமர்த்தலாக.

புத்திசாலித்தனமாக அவளும் பதிலேதும் கூறாமல் வாய்விட்டுச் சிரித்தாள்.

x x x

மழை இன்னும் விடாமல் அரற்றிக் கொண்டே இருந்தது.

அம்மாவுடன் சேர்ந்து இரவு நேர உணவை மிதமாய் உண்டு... பால்கனியில் அமர்ந்து

விளக்கொளியில் பூத்தூவலாய் பரவிய சாரல் மழையை ரசித்தாள்.

"இங்கேயா இருக்கே... இந்தா பால்..." பாதாமும், குங்குமப்பூவும் கலந்த மஞ்சள் நிற மசாலா பாலை நீட்டினாள் சுபத்ரா.

"நீயும் உட்காரேன்ம்மா... அருமையான க்ளைமேட்"

"எந்திரிச்சி உள்ளே வா நிவி... ஜுரம் வந்துடப் போகுது."

"இன்னும் என்னை சின்னப் பொண்ணாகவே நினைச்சிட்டிருந்தா எப்படி? அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... உட்காரு!" கைப்பற்றி மூங்கில் நாற்காலியில் அமர வைத்தாள்.

"இந்த வேலைய விட்டுடேன் நிவி!"

"ஐயோ ஆரம்பிச்சிடாதே சுபத்ரா... நான் ரொம்ப விரும்பி செய்யற வேலையிது. இந்தப் பேச்சை விடு. பர்சனலா ஒரு கேள்வி. இந்த தனிமைய வெறுக்கிற கேரக்டர் நீ! அப்புறம் எப்படி ஆர்மியில இருந்த அப்பாவை கல்யாணம் பண்ணிக்கிட்டே?"

"விரும்பிதான்!"

"லவ்வா?"

"சேச்சே... பெரியவங்க பார்த்து வச்சதுதான். தூரத்து சொந்தம். அப்பல்லாம் ராணுவத்துல வேலை செய்யறவங்கன்னாலே எல்லாருக்கும் ஒரு பிரமிப்பு. ஊருக்கே ராஜா மாதிரி மரியாதை... தூக்கி வச்சு கொண்டாடுவாங்க. உங்கப்பா ரொம்ப நல்லவர் நிவி. படிச்சவர். அந்த தகுதிக்கு மத்தவங்களை மாதிரி வெளிநாட்டுக்குப் போயோ, இல்லே உள்ளூரிலோ வேலைக்குப் போய் கை நிறைய சம்பாதிக்கலாம். அந்த ஆசை எல்லாம் இல்லாம ஊருக்காக, நாட்டு மக்களுக்காக உழைக்கணும்னு ராணுவத்திலே சேர்ந்தவரை நினைச்சு நானும் பெருமைப்பட்டேன். யோசிக்காம கல்யாணத்துக்கு சம்மதிச்சேன்."

"அதெல்லாம் சரி... ஆனா சராசரி பெண்கள் வாழற வாழ்க்கையை நீ அனுபவிக்கலையேம்மா. சினிமா, பீச், ஊடல், மழை, வாக்கிங்னு எத்தனை விஷயங்கள்? இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்கள்தானே வாழ்க்கையை அர்த்தப்படுத்துது. இந்த இழப்பெல்லாம் உன்னை சங்கடப்படுத்துதுதானே?"

சுபத்ரா தூரத்தில் வளைந்து நெளிந்த மின்னலை பார்த்தாள். பிறகு நிதானமாய் மகள் பக்கம் திரும்பினாள்.

"எல்லாம் சரிதான் நிவி. ஆனா, இதையெல்லாம் நான் மட்டுமா இழக்கிறேன்? நானாவது உறவுகள் மத்தியில் உங்களைப் பார்த்துக்கிட்டு நாட்களை கடத்திடறேன். ஆனா, உங்கப்பா? நாளைக்கு உயிரோட இருப்போமாங்கிற நிச்சயமில்லாத பணியிலே ஈடுபட்டிருக்கிறார். மழை, வெயில், கடும்பனி, தீவிரவாதிகளோட அச்சுறுத்தல்னு... நினைச்சுப் பார்... எவ்வளவு கஷ்டமான விஷயம்னு? பொண்டாட்டி, பிள்ளைகளை பார்க்கணும்னு நினைச்சாக்கூட உடனே நிறைவேத்திட முடியுமா? வத்தக்குழம்பும், பருப்பு ரசமும் அவ்வளவு உயிரு உங்கப்பாவுக்கு. ஆனா, சாப்பிட முடியுமா? அவரோட தியாகம் பெரிசு நிவி!"

"நான் அப்பாவை குத்தம் சொல்லலேம்மா. எங்கப்பா ஒரு கர்னல்ங்கறதே... தன்னாலே தலை நிமிர்ந்து பார்க்க சொல்லுது கர்வம். நான் சொல்ல வந்தது... இயல்பான வாழ்க்கையில் சில இடறல்களை நாமதான் சரிபார்த்து தேர்ந்தெடுக்கணும்ங்கற... யதார்த்தத்தை பத்தி!"

"எங்கே இருந்தா என்னடி? உங்கப்பா எப்பவும் என் மனசுக்குள்ளேயே இருக்கார். திடீர்னு வந்து நிக்கிற நொடிக்காக, வருஷக்கணக்குல காத்துக்கிட்டிருக்கறது எப்பேர்ப்பட்ட சுகம் தெரியுமா? தூக்கம் வருது. நான் போய் படுக்கறேன். நீயும் போய் படு!"

"ம்!"

"அப்புறம்... கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்து 'நெட்'டுல மேய ஆரம்பிச்சிடாதே! தூக்கமும் ரொம்ப முக்கியம்!"

"தாங்க்ஸ்ம்மா!" இருக்கையை விட்டு எழுந்தாள்.

"எதுக்கு?"

"நெட்'டுல கொஞ்சம் வேலையிருக்கு... ஞாபகப்படுத்தினியே... அதுக்கு!"

"சே... நானாதான் ஞாபகப்படுத்திட்டேனா?" தலையில் தட்டிக் கொண்டே நகர்ந்தாள் சுபத்ரா.

அறைக்குள் சென்றவள், கம்ப்யூட்டர் முன் அமர்ந்து... தன் ஐ.டி.யை ஓபன் பண்ணினாள்.

எதிர்பார்த்ததுப் போலவே... அவனிடமிருந்து தகவல் வந்திருந்தது.

மிஸ்டர் பூஸ்ட்!

சாட் நண்பன். அவனின் நிஜப்பெயர் என்னவென்று நிவேதிதாவிற்கு தெரியாது. இவளுடைய பெயர் லோட்டஸ் என்றளவிற்கு மட்டுமே அவனுக்குத் தெரியும். வேலையில் ஏற்படும் அலுப்பு, களைப்பை இந்த நட்பின் மூலமே இருவரும் களைந்துக் கொள்கின்றனர்.

அநாவசியமாய் அடுத்தவர் அந்தரங்க

விஷயங்களை அறிந்துக் கொள்ள ஈடுபாடு காட்டக் கூடாது.

இந்த நட்பு பரஸ்பரம் எந்த பாதகமும் வராமல் நாகரீகமாய் அளவளாவ வேண்டும்.

போனில் பேச முயற்சிக்கவோ, வற்புறுத்தவோ கூடாது.

அவரவர் திருமணத்திற்கு பிறகு நட்பை தொடரவோ, முறித்துக் கொள்ளவோ, லைப் பார்ட்னர் தரும் சுதந்திரத்தைப் பொறுத்து... முடிவெடுக்கலாம்.

நேரில் சந்திக்க... கண்டிப்பாய் அனுமதி இல்லை.

இவைகளைதான் தன் ஐ.டி.யில் தெரியப்படுத்தி இருந்தாள் நிவேதிதா.

சொல்லி வைத்தாற்போல்... ஒருவரும் அவளைத் தொடர்புக் கொள்ளவில்லை.

ஒரு மாதத்திற்கு பிறகுதான் மிஸ்டர் பூண்ட்டிடமிருந்து இ-மெயில் வந்தது.

கிட்டத்தட்ட அவனுடைய கண்டிஷனும் அதுவாக இருந்ததால்... அவர்கள் நட்பு, கடந்த ஒரு வருடமாய் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது.

அவன் ஆண் பெயரில் பெண்ணாய் கூட இருக்கலாம். அவள் பெண் பெயரில் இருக்கும் ஆணாகவும் இருக்கலாம் என்ற சிறு சந்தேகம் இருந்தாலும் அதைப்பற்றி இருவருமே பெரிதாய் அக்கறைக் கொள்ளவில்லை.

பாதுகாப்பான, ஆரோக்கியமான நட்பு. ஆரோக்கியமான விவாதங்கள், அரசியல், சினிமா, வணிகம் என்று எல்லை மீறாத கருத்துப் பகிர்தல்கள்... என்று கண்ணியமாய் போய்க் கொண்டிருக்கிறது. இதனாலேயே... இருவருமே, அவரவர் குடும்பத்தைப் பற்றியோ, இருப்பிடம் பற்றியோ முக்கியமாய் எண்ணாமல்... தெரிந்துக் கொள்ள விரும்பாமல் இருந்தார்கள்.

திரையில் கவனம் பதிந்தது.

"ஹேய்... லோட்டஸ்.... என்னாச்சு உனக்கு? ஒரு வாரமாய் உன்னிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. எத்தனை பிஸியாய் இருந்தாலும் தினமும் உன் இ-மெயிலுக்காக காத்திருக்கிறேன்!"

பதிலளித்தாள்.

"ஸாரி மிஸ்டர் பூண்ட்! என் பணியில் நாலும் பிஸி. கொஞ்சம் தலைவலி. அகெய்ன் ஸாரி!"

ஐந்து நிமிடம் கழித்தே பதில் வந்தது.

"தாங்க் காட்! உறங்கப் போகுமுன் ஒரு முறை பார்த்து விடுவோமே என்று ஓபன் பண்ணினேன். என் தோழியிடமிருந்து பதில். தாங்க்ஸ் அகெய்ன்! ஏன் தலைவலி? வேலை பளு. உடல் சோர்வை எல்லாம் நீக்குகிற அருமருந்து உங்கள் நட்பு என்று முன்பொருமுறை சொன்னதை மறுபடி நினைவுபடுத்துகிறேன். தலைவலி என்றால்... என்னையல்லவா தொடர்பு கொண்டிருக்க வேண்டும்!"

வாய்விட்டு சிரித்தாள் நிவேதிதா!

"அது ஏதோ உங்கள் பெருமைக்காக நான் போட்ட பிட்! உடனே நம்பி விடுவதா? சென்ற வாரம், சென்ட்ரல் பாலிடிக்ஸ் பற்றி நீங்கள் அறுத்த அறுவையில் வந்த தலைவலிதான் இது என்பதை தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்!"

"நன்றி!" என்ற ஒற்றைவரி மட்டுமே பதிலாக வந்தது பூண்ட்டிடமிருந்து. அதன் பிறகு வரவே இல்லை.

காத்திருந்த நிவேதிதா... அரைமணி நேரம் கழித்து... அணைத்துவிட்டு படுக்கையில் விழுந்தவளுக்கு வருத்தமாயிருந்தது.

x x x

## 4

பல்லை விலக்கி விட்டு அம்மா கொடுத்த டீயை சுவைத்து பருகிக் கொண்டிருந்தாள் நிவேதிதா!

மழை இல்லை என்றாலும்... ரோடில் நடமாடிக் கொண்டிருந்த மக்களிடம் சுறுசுறுப்பில்லை. குளிருக்கு பயந்து... சாம்பல் நிற மேக போர்வைக்குள் சுருண்டு படுத்திருந்தான் கதிரவன்.

மாமரக்கிளைகளுக்கு நடுவில் பதுங்கிக் கொண்டிருந்த ஏழெட்டு மைனாக்கள் விடாமல் கத்திக் கொண்டிருந்தது.... காலைப் பொழுதில் கேட்கவே ரம்மியமாய் இருந்தது. அந்த வெதர்பேட்டிற்கு சூடான மசாலா டீ புத்துணர்ச்சியைத் தந்தது.

அந்த எண்ணம் ஓடியதும் சட்டென பூண்ட்டின் ஞாபகம் வந்தது.

'உண்மையில் கோபித்துக் கொண்டானோ? விளையாட்டாய்தானே சொன்னேன்?' மனசு பரிதவித்தது.

இப்போது 'நெட்'டில் உட்கார முடியாது. இரவு பத்துமணிக்குப் பிறகுதான் 'சாட்' பண்ணுவதெல்லாம். இது வரையறுக்கப்பட்ட ஒப்பந்தம்.

யூனிபார்ம் அணிந்த டீன்ஏஜின் துவக்கத்தில் இருந்த சிறுமி முதுகில் புத்தக மூட்டையும், வலது கையில் உணவடங்கிய கூடையையும் எடுத்துக் கொண்டு பேருந்து நிலையத்திற்கு விரைந்து நடக்க.... சற்று தூரத்தில் எதிரே வந்துக் கொண்டிருந்த கார், மழைத் தண்ணீரை மேலே வாரி இறைத்து விடுமோ என்ற பயத்தில் சற்று உள்ளடங்கி ஓடி மழைநீரில் காலை விட... அங்கு பள்ளமிருந்ததோ, கல் இருந்ததோ... தடுக்கி அப்படியே தண்ணீரில் விழுந்து விட்டாள். பாவம்... உடை முழுக்க நனைந்ததோடு, சாப்பாட்டுக் கூடையும் சேற்றோடு கலந்து... பயத்தில் அலறிவிட்டாள் அச்சிறுமி.

பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நிவேதிதாவிற்கு பதறியது.

அதற்குள் கூட்டம் கூடி... அப்பெண்ணை தூக்கி விட்டனர்.

மோசமான சாலைகள், தேங்கி நிற்கும் மழைத்தண்ணீர். என்ன செய்கிறார்கள் அதிகாரிகள்? குளிருக்கு இதமாக பொண்டாட்டி முந்தானைகளில் ஒளிந்துக் கொண்டிருக்கிறார்களா?

'இன்றே சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், பாதிக்கப்படும் பொதுமக்களையும் சந்தித்து செய்தியில் ஒளிபரப்ப வேண்டும்' தீர்மானித்தாள்.

"நிவி" அம்மா அழைத்தாள்.

"என்னம்மா?"

"கீழே வாயேன்!"

"வர்றேன்... வர்றேன்!" லேஸ் வைத்து தைத்த ராஜாத்தி நைட்டியில் சிண்ட்ரெல்லா தேவதையைப் போல் குதித்து இறங்கினாள்.

"என்ன சுபி?"

"பல்லை உடைச்சிடுவேன்.... எப்பப் பார்த்தாலும் பேர் சொல்லி கூப்பிட்டுக் கிட்டு!"

"நீ மட்டும் நிவி... நிவின்னு பேர் சொல்லி கூப்பிடலே?"

"நீ... என் பொண்ணுடி!"

"நீ... என் அம்மா...டின்னு நான் மரியாதைக் குறைவா சொன்னேனா? என்ன விஷயம்?"

"வாய் கிழியுது. போற இடத்துல எனக்கு என்ன கெட்ட பேர் வாங்கித் தரப் போறியோ?"

"வாயுள்ள பிள்ளைதாம்மா பொழைக்கும். என் வேலையும் அப்படித்தான்!"

சுபத்ரா... அரைத்த சட்னியில் தாளித்துக் கொட்டினாள்.

"கொத்துமல்லி சட்னியா? வாசனை கமகமங்குது. வர்ஷினிக்கு நம்ம வீட்லதான் டிபன்!"

"தெரியும்... காலையிலேயே போன் பண்ணி சொல்லிட்டா... சரி... வெங்காயத்தையும், தக்காளியையும் கட் பண்ணிக் குடு.... சாம்பாருக்கு தாளிக்கணும்."

"என்னம்மா நினைச்சுட்டிருக்கே உன் மனசுல?"

"என்ன?" என்றாள் நிமிராமல்... இட்லித்தட்டில் மாவை ஊற்றிக் கொண்டு.

"என்னைப் போய் இந்த வேலையெல்லாம்... நோ... நோ!"

"என்னடி... பெரிய கலெக்டர்னு நினைப்பா? கலெக்டரா இருந்தாலும் இந்த வேலையெல் லாம் செய்துதான் ஆகணும். கட் பண்ணிக் குடு!"

"கலெக்டர் செய்யட்டும். பட் நிவேதிதா செய்யக்கூடாது. அவளுக்குன்னு சில கொள்கைகள் இருக்கும்மா!"

"அது என்ன மண்ணாங்கட்டி?"

"அது உன் பிள்ளை ரித்திஷ் தலையில இருக்கு. பட், நான் என்ன சொல்ல வர்றேன்னா... நிவேதிதா ரொம்ப அழகானப் பொண்ணு.

# இனி, எங்கிட்ட மோதாதே!

இந்திய பெண்கள் டென்னிசில் சானியா மிர்சாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் இருப்பவர் சுனிதாராவ். அமெரிக்காவில் வாழும் இந்தியரான இந்த 22 வயது வீராங்கனை. சானியா மிர்சா போலவே பல சர்வதேச போட்டிகளில் வென்றவர். பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியிலும் கலந்து கொண்டார்.

சானியாவை வீழ்த்தி முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்பது இப்போது இவரது திட்டம ாகும். இதற்காக கடும்பயிற்சியில் ஈடுபட்டு உள்ளார். சானியா இனி என்னிடம் மோதி ஜெயிக்க முடியாது என்றும் கூறிகிறார்.

இதற்காக உலகம் முழுவதும் சுற்றி வந்து பல்வேறு சர்வதேச போட்டிகளிலும் கலந்து கொள்கிறார். இவரது விடாமுயற்சியை பார்க்கும்போது இவர் விரைவில் முதல் இடத்தைப் பிடிப்பார் என்றே தெரிகிறது.

என்ன அழகா நெய்ல் வளர்த்து வச்சிருக்காப் பாரு. அவ டிரஸ்ஸுக்கு ஏத்த மாதிரி இனமும் நெய்ல் பாலிஷ் போட்டுக்கற அழகுணர்ச்சி அதிகம் உள்ளப் பொண்ணு. இந்த வெங்காயம் கட் பண்றதெல்லாம் அவளோட நெய்லுக்கும், வசீகரமான கண்களுக்கும் எப்பேர்ப்பட்ட அநியாயம்? அதை செய்வாளா நிவேதிதா? நெவர். அட, டைமாய்டுச்சில்ல... நிவி... குளிக்கணுமேடா..." பேசிக் கொண்டே அந்த இடத்தை விட்டு ஓட...

சுபத்ரா மகளின் கூத்தை எண்ணி சிரித்தபடி தலையில் அடித்துக் கொண்டாள்.

✕ ✕ ✕

**இ**னிமையாய் குயில் கூவ.... "நிவி யாரோ காலிங்பெல் அடிக்கிறாங்க பாரு!" என்று சுபத்ரா குரல் கொடுக்க... டைட் ஜீன்ஸ் அணிந்து, காட்டன் ஷர்ட்டின் கடைசி பட்டனை மாட்டியபடி வாசலுக்கு வந்தாள் நிவேதிதா.

திறந்தாள்.

எதிர்பார்த்தது போலவே வர்ஷினி!

"ஹாய் நிவி..."



"ஹாய் வர்ஷ்.... கம்.. கம்!"

"அம்மா எங்கே?"

"வந்துட்டே இருக்கேன். எப்படியிருக்கே வர்ஷினி?" என்றபடி வந்த சுபத்ரா, வாஞ்சையுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

"நல்லாருக்கேம்மா... நீங்க எப்படி இருக்கீங்க?"

"பார்த்தா தெரியலே.... இவகிட்டே சுத்தி சுத்தி பாதி இளைச்சுப் போய்ட்டேன்!"

"ஏன் நிவி அம்மாவை கஷ்டப்படுத்தறே?"

"அதை அப்புறம் சொல்றேன். மேடம் வீட்டுப்பக்கம் எட்டிப்பார்த்து பத்து நாள் ஆகுதே... என்னாச்சுங்க?"

"டைட் ஒர்க். உனக்கேத் தெரியுமே.. இப்ப உன்ன படங்கள்ல கிராபிக்ஸ் இல்லாம பண்றதில்லே. போதாதுக்கு... ஹாலிவுட் படங்களே இங்கேதான் கிராபிக்ஸுக்குனு வருது. ஸன்டே கூட லீவு கிடைக்க மாட்டேங்குது" என்று நிஜமாய் வருந்திய வர்ஷினிக்கு நிவேதிதாவின் வயதுதான்.

வர்ஷினி திருச்செங்கோட்டை சேர்ந்தவள். சிறு வயதிலேயே தந்தை இன்னொரு பெண்ணுடன் ஓடிப் போய்விட... ஒற்றைப் பெண்ணை தன் எட்டாவது படிப்பை வைத்துக் கொண்டு ஆளாக்க சிரமப்பட்டாள் அம்மா குமுதா. எப்படியோ கிடைக்கிற வேலையெல்லாம் செய்து மகளை படிக்க வைத்தாள். பத்தாவதில் மாநிலத்திலேயே மூன்றாவது இடத்தை பெற்றுத் தேர்ந்தாள். மகளின் வெற்றியைக் கொண்டாட இனிப்பு வாங்கச் சென்ற குமுதா... பஸ்ஸில் அடிபட்டு இறந்துப் போனாள். தனிமரமாய் நின்றவளை வாரி அணைத்துக் கொண்டது... குமுதாவின் அண்ணன் ராமச்சந்திரன், அண்ணி புவனேஸ்வரியின் கரங்கள்தான்.

வர்ஷினியை தங்களுடன் சென்னைக்கு அழைத்துச் சென்று மேற்கொண்டு படிக்க வைத்தனர். அவளும் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டு கவனம் முழுக்க படிப்பில் செலுத்தினாள். ப்ளஸ்டூவில் நல்ல மதிப்பெண்களோடு தேறி, பி.சி.ஏ. படித்தாள். அதை முடித்தபின் மல்ட்டி மீடியா படித்தாள். முடித்ததுமே... ஒரு பெரிய கம்பெனி நல்ல சம்பளத்தில் அவளை அழைத்துக் கொண்டது.

ராமச்சந்திரன் - புவனேஸ்வரிக்கு கோகுல் என்று ஒரு பையன். கோகுல் என்ஜினியரிங் முடித்துவிட்டு பெங்களூருவில் பணிபுரிகிறான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்னைக்கு

ஓடி வந்து விடுவான்... வர்ஷினியைப் பார்க்க.

வர்ஷினி ஆடம்பரமில்லாத, அமைதியான அழகி. அதிர்ந்துப் பேசமாட்டாள். யாருக்குமே, பார்த்த முதல் பார்வையிலேயே பிடித்து விடும். கோகுலின் மனசு தெரியுமுன்பே... வர்ஷினியை தங்கள் மருமகளாக்கிக் கொள்ள முடிவு செய்திருந்தனர் அவனைப் பெற்றவர்கள்.

வர்ஷினி சென்னையில் பிஎஸ்ஸி படிப்பைத் தொடர்ந்தபோது... அதே வகுப்பில் பயின்றவள்தான் நிவேதிதா. அப்போது தொடர்ந்த நட்பு... இன்னமும் தொடர்கிறது.

''வீட்ல அத்தை மாமாவெல்லாம் சவுக்கியமா?''

''நல்லாயிருக்காங்கம்மா!''

''கோகுல்?'' என்றாள் விஷமமாய் கண்ணடித்து நிவேதிதா.

அலட்டிக்காமல், ''ம்... ரொம்பவே நல்லாயிருக்கார்!'' என்றாள் வர்ஷினி.

''கொஞ்சம் கூட வெட்கமே வராதா உனக்கு?''

''அது சரி.... கோகுல் நல்லாயிருக்கார்னா நான் ஏன் வெக்கப்படணும் நிவி?''

× × ×

5

வர்ஷினியை ஆழமாய் நோக்கியவள், ''அப்புறம் பேசலாம் இதைப் பத்தி!'' என்றாள்.

''அம்மா கிச்சன்ல தான் இருக்காங்க... கேக்கறதை இப்பவே கேட்டுடு!''

''ஓக்கே! கோகுல் உனக்குதான்னு எல்லாரும் முடிவுப் பண்ணி வச்சிருக்காங்க. அவரைப் பத்தி பேசினாலே உன் முகம் சிவக்க வேணாமா?''

''உன் அளவுக்கு நான் நிறமில்லே!''

''சீரியஸ்!''

''ஓக்கே!... ஓக்கே! கோகுல் ஜென்டில் மேன். பார்க்கற பொண்ணுங்க எல்லாம் சைட் அடிக்கிற அளவுக்கு ஸ்மார்ட்தான்! பட்.. ஏழெட்டு வருஷமா ஒரே வீட்ல இருந்ததாலேயோ, என்னமோ... அவன் மேல அப்படி ஒரு ஈர்ப்பு வந்ததேயில்லே! எல்லா பாதுகாப்பையும் இழந்துட்டு, அவங்க வீட்ல போட்ட சாப்பாட்டுக்காகவும், இருப்பிடத்துக்காகவும், படிப்புக்காகவும் நான் என் கவனத்தையெல்லாம் சிதற விடாம படிப்பு மேல மட்டுமே செலுத்தினதால... வேற எந்த எண்ணமும் ஏற்படலே!''

''கோகுல் உன் மேல பயங்கர லவ்வா இருக்கான்டி.''

''தெரியும்!''

''அவனைப் பிடிக்கலையா?''

''சேச்சே... அருமையான கேரக்டர். காதல், கல்யாணம்ங்கற அளவுக்கு நான் பக்குவப்படலையே தவிர... கோகுலை பிடிக்கலைன்னு சொல்லலையே!''

''வீட்ல உங்க ரெண்டு பேருக்கும் கல்யாண ஏற்பாடு நடக்குமே! அப்ப என்ன பண்ணுவே... வேணாம்னுவியா?''

''தெரியலே.... குழப்பமாயிருக்கு. ஏதோ ஒரு குழப்பம். என் அலைவரிசையோடு கோகுல் அலைவரிசை ஒத்துப் போகாது!''

''குழப்பறே... நல்லா யோசி!''

''இந்தா வர்ஷினி... உனக்கு பரோட்டான்னா ரொம்பப் பிடிக்குமே... உனக்காகவே செஞ்சேன்... சென்னாவும் போட்டுக்க...!''

''தாங்க்ஸ்.. ஆன்ட்டி!'' வர்ஷினியின் முகம் மலர்ந்தது.

''அம்மா... இது ரொம்ப அநியாயம். எனக்கும்தான் பரோட்டா பிடிக்கும்.... எனக்குத் தரமாட்டியா?''

''எதுக்கு... இதை பிய்ச்சு சாப்பிட்டா... உன் நெய்ல் பாலிஷ் கரைஞ்சுப் போய்டாதா?''

''தோ பாருடா... சுபி என்னைப் பழி வாங்குதாம். உன் அருமை வர்ஷினிக்கு வேற பரோட்டாவை சுட்டுப் போடு!'' சட்டென வர்ஷினி தட்டிலிருந்த பரோட்டாவை எடுத்து தன் தட்டில் போட்டுக் கொண்டாள்.

''நீ இப்படி கள்ளத்தனம் பண்ணுவேன்னுத் தெரியும். இந்தா வர்ஷினி!'' மறைத்து வைத்திருந்த பரோட்டாவை வர்ஷினி தட்டில் வைத்தாள்.

''அடடா... என்ன பிரச்சினை உங்க ரெண்டு பேருக்கும்?''

''நீயே சொல்லு வர்ஷினி. இந்த வீட்ல ஒரு சின்ன வேலையக் கூட இவ செய்ய மாட்டேங்கிறா. வெளிவேலைன்னா... வெயில், மழைன்னு பார்க்காம உழைக்கிறா. வீட்டு வேலைன்னா... சிச்சின்னு ஓடறா. அந்த காலத்துல நாங்கள்லாம் இப்படியா இருந்தோம்? வீட்ல எல்லா வேலையும் வயசுப் பொண்ணுங்க நாங்கதான் செய்வோம். இவ என்னடான்னா...''

''அம்மா... டென்ஷனாகாதே! இந்த இருபது, இருபத்தஞ்சு வருஷத்துல... உலகம்

எவ்வளவு மாறிப் போச்சு? அங்கொருத்தர், இங்கொருத்தர் தவிர லேடீஸ் வெளி உலகமே வராத காலகட்டம் அது! வீட்டு வேலைத் தவிர, வேறெந்த கடமையும் இல்லாம இருந்திருக்கீங்க. நாங்க அப்படியில்லையே! உழைக்கிறோம். ஆண்களுக்கு சமமா அலையறோம். சமுதாயத்துக்குன்னு நேரம் ஒதுக்கறோம். பயன் தர்ற அளவுக்கு எங்கள் பங்கு இருக்கு. இதிலே வீட்டு வேலையையும் இழுத்துப் போட்டுக்கிட்டா உடம்பு தாங்காதும்மா!''

''புகுந்த வீட்ல இந்த மாதிரி பேசினா ஒத்துக்குவாங்களா?''

''நிறைய பெரியவங்க புரிஞ்சுக்கறாங்க. உன்னை மாதிரி கொஞ்சம் பழமைவாதிங்கதான் ஏத்துக்க மாட்டாங்க. இதெல்லாம் சாதாரண பிரச்சினைம்மா. இதுக்குன்னே நிறைய லேடீஸ் இருக்காங்க. வீட்டு வேலை செஞ்சு குடும்பத்தை காப்பாத்தறாங்க. அவங்களை வேலைக்கமர்த்தி திருப்தியா சம்பளம் கொடுத்தா... முடிஞ்சது பிரச்சினை!''

''எதையாவது பேசி வாயடைச்சுடறே!'' என்றாள் சுபத்ரா செல்லமான சலிப்போடு!

அந்த செல்லமான சண்டையினை ரசித்த வர்ஷினிக்கு உடனடியாக அம்மாவின் நினைவு எழுந்து ஏக்கத்தை உற்பத்தி செய்தது.

✕ ✕ ✕

மழைக்காற்று, மண்வாசனையை சுமந்து வந்து முகத்தில் கொட்டி விட்டுப் போனது.

வர்ஷினி, நிவேதிதாவின் பின்னால் அமர்ந்திருந்தாள். டூவீலரை வேகமாக செலுத்திக் கொண்டிருந்தாள்.

"என்ன நிவி... ரொம்ப நேரமா அமைதியாவே வர்றே?"

பதிலில்லை.

"நிவி... உன்னைத்தான்...!"

''அ... என்ன?'' சடாரென பிரேக் போட்டாள்.

"ஏய்... என்னாச்சு உனக்கு?"

"நீதானே... ஏதோ சொன்னே?"

"மொதல்ல ஸ்டார்ட் பண்ணு!"

"...!!"

"பேசாம வர்றியேன்னு கேட்டேன். வீட்லயே கிளம்பும்போதே முகம் சரியில்லே... என்னாச்சு? அம்மா திட்டிட்டாங்களா?"

"சேச்சே... என்னைப் பொறுத்தவரைக்கும் அம்மா ஒரு குழந்தை!"

"அப்போ... வேறென்ன?"

"பூஸ்ட்... என் மேல கோவமாயிருக்கான்!"

"என்னவாம் அவனுக்கு?"

"ஏண்டி மரியாதையில்லாம பேசறே?"

"அதுசரி... என்ன கோவமாம்?"

விவரித்தாள்.

"சரி.. அதுக்கேன் நீ டல்லாகறே? அவன் யாருன்னே தெரியாது. அப்புறம் ஏன் இத்தனை பாசம்? எனக்கு டவுட்டாயிருக்கு!"

''என்ன டவுட்?''

''உண்மையச் சொல்லணும்!''

''வர்ஷினிக்கிட்டே இதுவரை எதையும் மறைச்சதில்லே''

"குட்! நீ சசியை லவ் பண்றியா? பூஸ்ட்டை லவ் பண்றியா?"

''முட்டாள்தனமா கேள்வி கேட்க வர்ஷினியால மட்டும்தான் முடியும். எனக்கிந்த பார்க்காமலே காதல், போன்ல காதல் இதிலெல்லாம் உடன்பாடில்லே. 'நெட்'ல எத்தனை பேர் காதலிச்சு ஏமாந்திருக்காங்க. பூஸ்ட் மை ப்ரெண்ட். சசி ஹார்ட்... போதுமா?"

அந்நேரம் நிவேதிதாவின் செல்போன் அலற, வண்டியை ஓரமாய் நிறுத்தினாள்.

சசியிடமிருந்துதான்!

ஆழ்வார்பேட்டையில் ஸ்கூல் பக்கத்தில் வெடிகுண்டு வெடித்து ஒன்பது பேர் பலி! அந்த ஸ்பாட்டுக்கு உடனடியாக போகச் சொல்லி அறிவுரைத்தான்! அவசரப் படுத்தினான்.

பரபரப்பானாள் நிவேதிதா.

"ஸாரி வர்ஷினி....உடனே ஆழ்வார்பேட் போகணும். மதியம் நியூஸுக்கு ரெடி பண்ணணும். பேச நேரமில்லே.... நீ ஆட்டோ பிடிச்சுப் போய்ட்றியா...!"

''ஓ... ஷ்யூர்... அப்புறமா ப்ரீயாய்ட்டு போன் பண்ணு!"

"சரிடா!"

✕ ✕ ✕

அன்றிரவு மட்டுமல்ல... அதற்கடுத்து வந்த நான்கைந்து நாட்களும் மிஸ்டர் பூஸ்ட்டிடமிருந்து இ-மெயில் வரவேயில்லை.

அவன் மனதை புண்படுத்தி விட்டோமோ என்று மருகினாள். மன்னிக்கும்படி கேட்டு பல இ-மெயில் அனுப்பியும் பதிலில்லை.

சசிதரன் கூட கேட்டான்.

"ஏன் நிவேதிதா டல்லாயிருக்கீங்க? உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ஹெட்டெக்... தட்ஸால்!"

"டேப்லட் வாங்கிவரச் சொல்லட்டுமா?"

"நோ... தாங்க்ஸ்!"

அவ்வளவுதான். அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. ஏதாவது உளறிக் கொட்டி விடுவோமோ என்ற பயம்.

அவளின் இணையதள நட்பு பற்றி அவனுக்குத் தெரியாது. தவறாக நினைத்து விட்டால்? அதற்கான சாத்தியக்கூறுகள் நடப்பு சமுதாயத்தில் அதிகமாயிற்றே? நான்குபேர் பார்வையில் படும்படி ஆண் நண்பர்களுடன் சுற்றினால் கூட தவறாக நினைப்பதில்லை. ஆனால் சாட்டிங் நட்பு பற்றி நல்ல அபிப்ராயம் பலருக்கும் இருப்பதில்லை. அந்த பலரில் சசிதரனும் ஒருவனாக இருக்கலாம்.

இப்போதுதான் இருவருக்குள்ளும் காதல் பூ பூத்திருக்கிறது. பரஸ்பரம் பரிமாறிக் கொள்ள நேரம் எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள். இந்நிலையில் அதைப்பற்றி சொல்ல விரும்பவில்லை. தப்பான சிநேகம் அல்ல... என்றாலும் ஆண் மனசு என்ன வேண்டுமானாலும் நினைக்கும் அல்லவா?

ஒரு வாரம் கழித்தபின்... பூஸ்ட்டிடமிருந்து "ஹாய்... லோட்டஸ்...ஹவ் ஆர் யூ?" என்று இ-மெயில் வந்திருந்தது.

✕ ✕ ✕




மனதிலிருந்த அத்தனை பாரமும் பனியாய் உருகி கரைந்தது போலிருந்தது நிவேதிதாவிற்கு.

"என்ன மிஸ்டர் பூஸ்ட்? ஏன் இப்படி பண்ணீங்க? அப்படி என்ன சொல்லி விட்டேன் என்று இத்தனை கோபம்?"

"ரிலாக்ஸ்.... ரிலாக்ஸ் மை டியர் பிரண்ட்! உங்கள் மேல் நான் எப்போது கோபப்பட்டேன்?"

"அப்ப ஏன் ஒரு வாரமா பதிலே தரலே... எத்தனை மெயில் அனுப்பினேன்?"

"அத்தனையும் இப்போதுதான் பார்த்தேன் பிரண்ட். சரி, எதற்கு அத்தனை ஸாரி கேட்டு அனுப்பியிருக்கிங்க?"

"ஸோ.... என் மேல் கோபமில்லை!"

"நிச்சயமாய் இல்லை. அலுவலக பணி நிமித்தம் ஒருவாரமாய் நேரமே கிடைக்கவில்லை. அதனால் என் அருமையான தோழியுடன் கருத்துப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை."

நிவேதிதாவும் இயல்புக்கு வந்தாள். இருவருக்கும் பரிச்சயமான தமிழச்சியின் கவிதை தொகுப்பு பற்றி விவாதித்து நிறைகுறைகளை பரிமாறிக் கொண்டார்கள்.

✕ ✕ ✕

"நான் கொஞ்சம் ப்ரீ. போர் அடிக்குது. நீ ப்ரீயா இருந்தா உன் சிட்டிஸன் ஆபீசுக்கு வரவா?" என்று போனில் கேட்டாள் வர்ஷினி.

"நான் ப்ரீ எல்லாம் கிடையாது. பட், நான் ஒர்க் பண்ற அழகை நீ பக்கத்திலிருந்து பார்க்க ஒரு சான்ஸ் தர்றேன்... வா... அப்படியே லன்ஞ்சும்!"

"எல்லாம் என் நேரம்... வர்றேன்!"

சிரித்தபடி செல்போனை அணைத்து விட்டு சசிதரனின் அறைக்குள் சென்று "குட்மார்னிங் சார்!" என்றாள்.

"வெரி குட்மார்னிங்... உக்காருங்க!"

"....?!"

"கவிஞர் தமிழச்சியைத் தெரியுமா?"

## என் வாளுக்கு என்ன பதில்?

வாள் சண்டை என்பது மிகவும் கடினமான விளையாட்டு மட்டுமல்ல. இந்தியாவில் பிரபலமில்லாத விளையாட்டும் ஆகும்.

ஆனால் இதில் சாதனைகள் படைத்து வரும் டி.கே. அபர்ணா ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்லாமல் ஓயப்போவதில்லை என்று உறுதி பூண்டும் இருக்கிறார்.



இத்தனைக்கும் அபர்ணா வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. கேரளாவில் கோழிக் கோடு மாவட்டத்தில் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அவரது தந்தை டி.கே.கணேசன் கூலி தொழிலாளி. குடும்பத்தில் அவர் வருமானம் மட்டும்தான். இருப்பினும் அபர்ணா விடாமுயற்சி காரணமாக பயிற்சி பெற்று தேசிய வாள் சண்டை குழுப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். தனிநபர் போட்டியில் 4-வது இடம் கிடைத்தது.

இவரது சாதனைகளைத் தொடர்ந்து தென் கொரியாவில் நடந்த ஆசியா அளவிலான போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. ஆனால் நிதி உதவி செய்ய யாரும் முன்வராததால் கொரியா செல்ல முடியவில்லை.

இருப்பினும் அபர்ணா சோர்ந்து போய் விடவில்லை. 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் எப்படியும் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல் பட்டு வருகிறார். அவரது ஆசை நிறைவேறுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.



தூக்கிவாரிப்போட... நிமிர்ந்தாள்.

நேற்றிரவுதான் மிஸ்டர் பூஸ்ட்டுடன் தமிழச்சி கவிதைகளைப் பற்றி விவாதித்தது நினைவிற்கு வந்தது.

"என்ன நிவேதிதா... தெரியாதா?"

"தெ... தெரியுமே!"

"இன்னைக்கு அவங்ககிட்டே அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிட்டேன். கிருபாகரன் போறதா இருந்தது. சின்ன ஆக்ஸிடன்ட்... கிருபா ஹாஸ்பிடல்ல இருக்கார். நீங்க அவங்களை இண்டர்வியூ பண்ணனும்!"

"ஓ... ஷ்யூர்!"

"இதோ அவங்களோட கவிதைத் தொகுப்பு. படிச்சுப் பார்த்துக்குங்க"

"நான் ஏற்கனவே படிச்சுட்டேன் சார்!"

"நிஜமாவா? கவிதையிலே இன்ட்ரஸ்ட் உண்டா உங்களுக்கு?'' ஆச்சர்யமாய் கேட்டான்.

"ரொம்பவே! லைப்ரரியிலே தேடித்தேடி வாங்கிடுவேன்... வீட்ல மினி லைப்ரரியே வச்சிருக்கேன்."

"வெரிகுட்! இந்த தொகுப்புல உங்களை இம்ப்ரஸ் பண்ணின கவிதை எது?"

"சொல்றேன் சார்!

'ஒரு கர்ப்பிணியின் வாந்தியினை
எடுத்து உண்ட எத்தியோப்பியக்
குழந்தைகளின் பட்டினியைத்
தொலைக்காட்சியில் பார்த்த பின்பும்,
கலவி இன்பம் துய்த்த
அந்த இரவுக்குப் பின்தான்
முற்றிலும் கடைந்தெடுத்த
நகரவாசி யானேன் நான்!'

மனசை கரைச்சு உருகிய வார்த்தைகள்... அருமையாயிருக்கு இல்லையா சார்?"

"ஆமாம்... ஆமாம்!'' என்றான் மிக மிக வியப்புடன்.

✕ ✕ ✕

**மா**லைதான் இன்டர்வியூ...!

வர்ஷினி சிட்டிலைன் அலுவலகத்திற்கு வந்தாள். அவளுடன், பக்கத்தில் இருந்த ரெஸ்டாரெண்ட் சென்றாள் நிவேதிதா.

''என்ன ரொம்ப ஹாப்பியா இருக்கே? ரெண்டு நாள் முன்னாடி பார்த்தப்பக்கூட உன் முகம் சகிக்கலையே. என்னாச்சு நிவி?"

''ம்... நத்திங்... லைப் ஸ்மூத்தா போய்ட்டிருக்கு!"

"நான் நம்பலே. ஐ திங்க்... உன் பிரண்ட் மிஸ்டர் பூஸ்ட் தான் எனர்ஜிய குடுத்திருப்பான்... கரெக்ட்?"

"ம்... அதுவும் தான்!"

"அதுவும்தான்னா?"

"சரி... அதுவேதான்னு வச்சுக்கோயேன்!"

"கோபதாபமெல்லாம் தீர்ந்ததா?"

''உன்மேல எனக்கு கோபமே இல்லேன்னு சாதிக்கிறான். எனிஹவ்... ஹி இஸ் இன்ட்ரஸ்டிங் பர்ஸன். கவிதைகளைப் பத்தி என்ன அழகா அலசறான் தெரியுமா?"

உதடு சுழித்து கிண்டலாய் சிரித்த வர்ஷினி, நாசூக்காய் மஷ்ரூம் பெப்பர் சூப்பை சுவைத்தாள்.

"என்னடி கிண்டலா?"

"சிரிப்பு வந்தது."

"எதனால?"

"ஒரு விஷயத்தை நினைச்சுப் பார்த்தேன்!"

"என்ன நினைச்சே?"

"அந்த பூஸ்ட் ரொம்ப மோசம்டி. அவனை ரொம்ப நல்லவன்னு நினைச்சேன். திடீர்னு

உன்னைப் பார்க்கணும்போல இருக்கு. டேட்டிங் வர்றியான்னு கூப்பிடறான்டி'ன்னு நீ ஒரு நாள் சொல்லுவேயில்லே.... அதை நினைச்சுப் பார்த்தேன்!"

"கேணத்தனமான கற்பனை எல்லாம் உனக்குத்தானே வரும்? பூஸ்ட்... பக்கா ஜென்டில்மேன். மத்தவங்களை போல் அல்ல நாங்கள்."

"எதிர்பார்க்கிற எல்லாமே நடந்திடறதில்லே நிவி! அவனும் ஒரு சராசரிதானே?"

"நம்பலேன்னா... நீயும் பழகிப்பார். புரிஞ்சுக்குவே."

"நோ... நோ... அவனுக்காக என் டைமை வேஸ்ட் பண்ண விரும்பலே."

"அப்ப... நீ சொன்னதை வாபஸ் வாங்கிக்க"

"ஸாரி!"

"சரி... நம்பலேன்னா விடு!"

"ம்... சரி... நான் சொன்ன மாதிரியே அவனும் சபலபுத்திக்காரன்தான்னு நிரூபிக்கிறேன். அவன் ஐ.டி. தா!"

"குட்... தர்றேன். பட், ஒன் கண்டிஷன்!"

"என்ன?"

"இந்த நட்பு மாசுபடாம இருக்கணும்னா... கடைசிவரை நேரிலோ, போனிலோ பேச முயற்சிக்கக் கூடாது. என்னுடைய உண்மையான பெயர், மற்ற விவரங்களையோ, உன்னுடைய பெயர், மற்ற விவரங்களையோ தரக்கூடாது."

"டன்!"

x x x

"ஹைநட்டு... உங்களுக்கு என்ன சமைக்கட்டும்?"

தன் கனத்த சரீரத்தோடு கணவர் முன் வந்து நின்றாள் புவனேஸ்வரி.

"நீ என்ன சாப்பிடப் போறே?" என்றார் ராமச்சந்திரன்.

"வழக்கம் போல கோதுமை உப்புமாதான்!"

"எனக்கும் அதையேக் குடு!"

"உங்களுக்கு என்னங்க தலையெழுத்து? எனக்குதான் ஆயிரத்தெட்டு வியாதி. கடவுள் புண்ணியத்துல உங்களுக்கு எதுவுமில்லே. வாய்க்கு ருசியா சாப்பிடறதை விட்டுட்டு..."

"வயசாயிருச்சிலே... வாயக் கட்டினா நல்லதுதானே ஈஸ்வரி! பாவம்... நீ தினத்துக்கும் சப்பாத்தி, கஞ்சி, உப்புமான்னு சாப்பிடறதைப் பார்த்தா.... கஷ்டமாயிருக்கும்மா!"

"எனக்கு பழகிப் போச்சுங்க"

"நானும் பழகிக்கறேன்!"

"உங்ககிட்டே கேக்கவேப் போறதில்லே. நானே சமைக்கிறேன். வர்ஷினிக்கு மசாலா சப்பாத்தி பிடிக்குமே... அதையே உங்களுக்கும் பண்ணிடறேன். நானும் ரெண்டு சாப்பிட்டுக்கறேன். சரிதானே?"

சமையலறைக்கு வந்த புவனேஸ்வரி ஆச்சர்யமானாள். வர்ஷினி, அத்தையை பார்த்து சிரித்தபடி சப்பாத்திக்கு மாவு பிசைந்துக் கொண்டிருந்தாள்.

"இங்க என்னப் பண்ணிட்டிருக்கே?"

"மசாலா சப்பாத்திக்கு... பிசைஞ்சுட்டிருக்கேன்..."

"உன்னை யாரு இந்த வேலைய பண்ணச் சொன்னது? அதிசயமா ஆபிஸ்லேர்ந்து கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டாப் போதுமே உனக்கு! உடனே சமையல்கட்டுல புகுந்துடுவே?" செல்லமாய் சலித்துக் கொண்டாள்.

"நானும் சமைக்கக் கத்துக்கணுமில்லையா?"

"கரெக்ட்டுதான். ஆனா, உன்னை கஷ்டப்படுத்த மனசு வரலை வர்ஷினி. கொஞ்சநாள் போகட்டும்... நானே... கோகுலுக்கு பிடிச்ச மாதிரி சமையல் கத்துத் தர்றேன். இப்ப வெளியே போ!"

"கம்ப்யூட்டர்ல கொஞ்சம் வேலையிருக்கு. மாமா ரூம்ல போகட்டுமா?"

"பைத்தியக்காரி... இதுக்கெல்லாமா என்கிட்டே சம்மதம் கேப்பே... உன் வீடுடி இது!"

வர்ஷினி சிரித்தபடி நகர்ந்தாள்.

x x x

## 7

**பா**ர் வசதியோடு கூடிய ரெஸ்டாரென்ட்! அங்கு வந்திருந்தவர்களில் களைத்த முகங்கள் ஒன்று கூட இல்லை. அத்தனையும் பணக்காரக்களை சொட்டும் முகங்கள்.

"என்ன சாப்பிடறே சசி?" என்றான் குறுந்தாடி வைத்து ஸ்டைலாய் இருந்த பாலாஜி. சசிதரனின் நெருங்கிய நண்பன். பத்தாம் வகுப்பிலிருந்து ஆரம்பித்த நட்பு.

"கோக் மட்டும்!"

"நீ இன்னும் மாறவேயில்லையாடா

படுபாவி"

"எப்பவும் மாறமாட்டேன்."

"உன்னை என் பிரண்ட்டுனு சொல்லிக்கவே வெட்கமாயிருக்குடா. எனக்காக ஒரே ஒரு பீராவது?"

"ப்ளீஸ்... கோக் மட்டும்!"

"நீயெல்லாம் வாழ்க்கையில என்னத்த சாதிக்க.. என்ன பண்ணிடப் போறே?" என்றான் சலிப்பாய்.

"அதெல்லாம் என் சாமர்த்தியம். எப்ப கல்யாணம் பிக்ஸ் பண்ணியிருக்காங்க?"

"ஆவணி பதினெட்டு!"

"பொண்ணுக்கு... ஐ மீன் உன் வருங்கால மனைவிக்கு உன்னோட இந்த ட்ரிங்ஸ் பழக்கம் பிடிக்கலேன்னா என்னப் பண்ணுவே?"

"அது சரி.. நீ இன்னும் பாகவதர் காலத்திலேயே இருக்கியா? அதோ பார்த்தியா... ஒவ்வொரு டேபிள்லேயும் ஜோடி ஜோடியா உட்கார்ந்திட்டிருக்கறதை? எப்படி 'ராவா' அடிக்கிறாளுங்க பாரு. பதினெட்டு வயசிலேர்ந்து... நாப்பத்தெட்டு வயசு லேடீஸ் வரைக்கும் இருக்காங்களா, இல்லையா? இவங்கள்லாம் ஹைசொஸைட்டின்னு சொல்லுவே. சரி... அப்படியே இருக்கட்டும். எத்தனை மிடில்கிளாஸ்ல புருஷனும், பொண்டாட்டியும் வீட்லேயே ஒண்ணா உட்கார்ந்து தண்ணி அடிக்கிறாங்கத் தெரியுமா? இதை எல்லாம் உங்க சேனல்ல சிறப்புப் பார்வையிலே காட்டுங்கய்யா."

"நான் இந்த பேச்சுக்கே வரலே... ஆளை விடு" சிரித்தபடி கோக்கை சுவைத்தான்.

"எப்படியிருக்காங்க... உன்னோட நிவேதிதா"

"ரொம்பவே நல்லா..."

"[illegible] சொல்லிட்டேயில்லே?"

"இல்லேடா... இனிதான்!"

"அப்போவ் சீக்கிரம் சொல்லிடு.. ஆளும் பார்க்க நல்லாயிருக்கா... ஏகப்பட்ட பேர் அட்டை பண்ணியிருப்பாங்க.. அப்புறம் உனக்கு கிடைக்காமப் போயிடப் போறா. கடைசியிலே அவளை மறக்க முடியாம.. இதே இடத்திலே ஹாட் ட்ரிங்ஸுக்கு ஆர்டர் பண்ணப் போறப் பாரு!"

"அவ மனசுல நான்தான் இருக்கேன்!"

"அதை அவ வாயால சொல்ல வை!"

"ஆமான்டா... சீக்கிரம் சொல்லிதான் ஆகணும். அம்மா வேற கல்யாணம் பண்ணணும்னு நச்சரிக்க ஆரம்பிச்சிட்டாங்க."

"வெரிகுட்! ஆமா.. இப்பவும் அந்தப் பொண்ணோட அவ பேரு... என்ன... ஆங்... லோட்டஸ்... அவளோட சாட் பண்ணிட்டிருக்கியா?"

"ம்!"

"இதைப் பத்தி நிவேதிதாவுக்கு தெரியுமா?"

"தெரியாது!"

"தெரிஞ்சா என்ன தப்பு?"

"இதை எந்தளவுக்கு அவ ஏத்துப்பான்னு தெரியலே"

"அவ இந்த காலத்துப் பொண்ணு. முற்போக்குச் சிந்தனையுள்ள டி.வி. ரிப்போர்ட்டர். கண்டிப்பா தப்பா எடுத்துக்க வாய்ப்பே இல்லை. அதுவும்... ஏகப்பட்ட கண்டிஷன் போட்டு. பேரை மறைச்சு, ஊரை மறைச்சு பழகற இந்த பிரண்ட்ஷிப்பை தப்பா நினைக்கத் தோணுமா?"

"அந்த ரிஸ்க்கே வேணாம் பாலாஜி. எந்த காலமா இருந்தாலும்... பொண்ணுங்க மனசு இருக்கே... தனக்கு சொந்தமான நபர்... புடவைக் கடை பொம்மையக் கூட எதேச்சையா திரும்பிப் பார்த்துடக் கூடாது... அவ்வளவு பொஸஸிவ்!"

"அப்புறம் எதுக்கு பழகணும்? சாட்டிங்காவது பூட்டிங்காவது..."

"எனக்குள்ளே ஒரு சின்ன ஆசை பாலாஜி. என் மாமா சத்தியகோபாலனை தெரியுமில்லையா? இருபது வருஷம் முன்னாடி அவருக்கு ஏகப்பட்ட பேனா நண்பர்கள். தினமும் அம்பது, அறுபது லெட்டர் வரும். போஸ்டல் செலவுக்கே சம்பளத்திலே பாதிய செலவழிப்பார். யாரையும் அவர் நேர்ல சந்திச்சதே இல்லை. ஆனா, சில கடிதங்களை படிக்க வாய்ப்பு கிடைச்சப்ப பிரம்மிச்சுப் போய்ட்டேன். அவ்வளவு ஆழமான நட்பு. உயிரையும் கொடுக்க தயாரா இருக்கிற உணர்வுபூர்வமான வார்த்தைகள். எனக்கும்... அந்த மாதிரி முகம் பார்க்காம, பேசிக்காம உணர்வுபூர்வமா நட்பை ஏற்படுத்திக்கணும்னு ஆசை. பட், மாமா மாதிரி எனக்கு கடிதம் எழுத வராது. நேரமும், பொறுமையும் இல்லே. அதனோட சின்ன வடிகால்தான்... சாட்டிங் பிரண்ட்!"

"ஓ... இதுக்குப் பின்னாடி இவ்ளோ பெரிய கதை இருக்கா? இப்பவும் உங்க மாமா பென் பிரண்ட்ஸுக்கு லெட்டர் அனுப்பிட்டு இருக்காரா?"

"இல்லை... அந்த பிரண்ட்ஸ்ல லேடீஸும் அடக்கம். அத்தை சில கடிதங்களை படிச்சிட்டாங்க. வந்தது வினை. சந்தேகப்பட ஆரம்பிச்சு, பிரச்சினைகள் முளைச்சது. டைவர்ஸ்

வரைக்கும் விஷயம் விபரீதமான பிறகு... அந்த நட்பையெல்லாம் மூட்டைக்கட்டி வச்சிட்டார்."

"நீ எப்ப மூட்டைக் கட்டப் போறே?"

"கல்யாணம் ஆனதும்!"

"பரவாயில்லே பொண்டாட்டிக்கு இப்பவே பயப்பட ஆரம்பிச்சிட்டே!"

"சில விஷயங்கள்ல பொண்டாட்டிக்கு பயப்படணும்... இல்லே, பயப்படற மாதிரி நடிக்கணும். அப்பதான் வாழ்க்கை சுவாரஸ்யமாப் போகும்!"

"அப்ப லோட்டஸை உன் வாழ்க்கையிலே பார்க்கவேப் போறதில்லே..."

"லோட்டஸை மட்டுமில்லே... ஜாஸ்மினையும் தான்!"

"யார் அந்த மல்லி.. புதுசா?"

"லோட்டஸோட பிரண்டாம்... நேத்துதான் அறிமுகமானா..."

"பார்த்துடா மச்சான்... வரிசையா பூக்களோட பழகறே... நிவேதிதாவுக்கு தெரிஞ்சா அவ்வளவு தான்!"



"உன்னைத் தவிர யாருக்கும் தெரியாது. நீ சொல்லாம இருந்தா... அதுவேப் போதும்."

⁂ ⁂ ⁂

**ஹா**ல் கடிகாரம் 9.45-ஐ காட்டியது.

வர்ஷினியினுள் பரபரப்பு தொற்றிக் கொண்டது. பத்தாக... பதினைந்தே நிமிடங்கள். கம்ப்யூட்டர் முன் அமரப்போகும் விநாடிக்காக மனசு பரபரத்தது. அத்தையும், மாமாவும் தூங்கச் செல்வதாக தோன்றவில்லை. வெற்றிலையை மென்றபடி ஏதேதோ கதைப் பேசிக் கொண்டிருந்தனர்.

அவளை கவனித்த புவனேஸ்வரி, "என்ன வர்ஷினி, இங்கிட்டும் அங்கிட்டுமா அலைஞ்சிட்டிருக்கே?" என்றாள்.

"ஒ... ஒண்ணுமில்லே அத்தே... தூக்கம் வரலே... கம்ப்யூட்டர்ல கொஞ்சம் வேலையிருக்கு. உங்களுக்கு தூக்கம் வரலியா... நேரமாச்சே?"

"நீ போய் வேலைய பாரும்மா! சந்தோஷத்துல தூக்கம் வரலே... அடுத்த வாரம் கோகுல் வரான்ல?"

"கோ...கு..ல்? எ... எப்ப?"

"உனக்குத் தெரியாதா? ஏங்க நீங்களும் சொல்லலியா?"

"கோவிலுக்குப் போய்ட்டு வந்ததிலே... மறந்துட்டேன்"

"கோகுல் சாயந்திரம் போன் பண்ணியிருந்தான் வர்ஷினி. லீவுல வர்றானாம். உனக்கும் போன் பண்ணியிருப்பான்னு நினைச்சேன். தெரியாதா?"

"ம்ஹூம்!"

"இன்ப அதிர்ச்சி குடுக்கணும்னு சொல்லாம இருந்திருப்பானோ?"

"ஆமாமா!"

கணவனும், மனைவியும் சொல்லி விட்டு சத்தம் போட்டு சிரித்தனர்.

வர்ஷினிக்கு ஏனோ... அந்த செய்தி பிடிக்கவில்லை.

'அவன் வந்துவிட்டால் பூஸ்ட்டிற்கு இ-மெயில் அனுப்ப முடியாதே!'

அந்த நினைப்பு அவளையே ஆச்சர்யப்படுத்தியது.

'என்ன விநோதம் இது? ஆரம்பத்தில் அவன் நட்பை பத்தி நிவேதிதாவிடம் கிண்டலாய் விமர்சித்தேன். ஆண் பெயரில் ஒளிந்திருக்கும் பெண்ணாகவும் இருக்கலாம் என்றேன். ஆனால், ஒரு சவாலுக்காக அவனுடன் நட்பு கொண்டேன். பழகியது குறுகிய காலம் என்றாலும் மிஸ்டர் பூஸ்ட் மீது ஏன் இப்படி அபரிதமான நல்லுணர்வு?'

இரட்டை அர்த்தமின்றி, ஆபாசமின்றி, பொது நலன் நோக்குடன் கண்ணியமாக அவன் அனுப்பும் இ-மெயில்கள், வர்ஷினியின் இதயத்தில் அழுத்தமாய் இடம்பிடித்து விட்டன.



ஆபீஸ் டென்ஷன், சராசரி வாழ்க்கை முறையின் மீதான சலிப்பு. இவற்றையெல்லாம் போக்கும் சமய சஞ்சீவியாக இருந்தான் பூஸ்ட்.

'ஆமாம்... அவன் ஆணா, பெண்ணா?
எனக்கேன் அந்த சந்தேகமே எழவில்லை?'

× × ×

## 8

இன்டீரியர் டெகரேஷனுக்கே பல லட்சம் விழுங்கியிருந்த அந்த அழகான வீட்டில் கலைநயமிக்க பொருட்கள் சின்ன தூசிதுமின்றி பளிச்சென்று அதனதன் இடத்தில் அமர்ந்திருந்தன.

வாசலின் உள்பக்கச் சுவற்றில் பெரிதாய் அமர்ந்திருந்த சணலால் தத்ரூபமாய் நெய்யப்பட்டிருந்த பிள்ளையார்... உள்ளே நுழைந்ததும் எதிர்புறம் மாட்டப்பட்டிருந்த சுவற்றின் கண்ணாடியில் பிரம்மாண்டமாய் தெரிந்தார்.

ஒரு கிரவுண்ட் பங்களாவின் முன், அரை கிரவுண்ட் தோட்டத்திற்காக ஒதுக்கி... முழுக்க பூச்செடிகளாக வளர்க்கப்பட்டு கண்களுக்கு குளிர்ச்சியைத் தந்தது.

போர்டிகோவில் சாம்பல் நிற சான்ட்ரோவிற்கு பக்கத்தில், வெள்ளை நிறத்தில் புத்தம் புதிய ஆல்டோ கார். சீட்களில் கவர்கள் அணியப்பட்டு சற்றுமுன்தான் அந்த வீட்டின் புதிய விருந்தாளியாக வந்திருந்தது.

சரளா தோட்டத்தில் பறித்த பூக்கூடையுடன் உள்ளே நுழைந்தாள். நல்ல நிறத்தில் அழகாய் இருந்தாள். நெற்றியில் மிகச்சின்னதாய் கருப்பு பொட்டு வைத்திருந்தாள். திருமணமான பத்தே வருடத்தில் கணவனை இழந்து, தன் ஒரே மகனுக்காக வாழ்க்கையை அர்த்தப்படுத்தி அவனை ஆளாக்கினாள்.

அந்த காரை பெருமை கலந்த சலிப்புடன் பார்த்துக் கொண்டே உள்ளே வந்தவள், உடையுடுத்தி தயாராய் வந்த மகனை எதிர்க் கொண்டாள்.

''ஏற்கனவே ஒரு கார் இருக்கும்போது, இன்னொரு கார் தேவையா சசி?"

"உன்னாலதாம்மா வாங்கினேன்!"

"என்னாலேயா? என்ன புதுக்கதை இது?"

''ஆமாம்மா... நீங்க தானே எப்பப் பார்த்தாலும் இந்த வீட்டுக்கு சீக்கிரமே மருமக வரணும்னு நச்சரிச்சுக்கிட்டே இருந்தீங்க?"

''ஆமாம்... அதுக்கும், இந்த காருக்கும் என்ன சம்பந்தம்?"

''இல்லாமலா? நீ நல்ல அம்மாதான். பணத்துக்கு ஆசைப்படாத கேரக்டர்தான். இல்லேங்கலே. ஆனா, பொண்ணுப் பார்க்கப் போற இடத்துல தான் ஒரு மாமியார்ங்கற பதவிக்கு வரப் போகிறோம்ங்கற சின்ன இமிர்லே... சின்னதா சபலம் எட்டிப் பார்க்கலாம். என் பையன் சிட்டிலன் சேனல்ல பெரிய போஸ்ட்டிங்ல இருக்கான். ஒன்னேகால் லட்சம் சம்பளம் வாங்கறான். நாங்க பெரிசா ஒன்னும் எதிர்பார்க்கலே... சின்னதா ஒரு கார் மட்டும் வாங்கிக் குடுத்துடுங்கன்னு... கேக்கத் தோணுமில்லையா?"

"ராஸ்கல்... எவ்ளோ தைரியம் இருந்தா... என்னைப் போய்...."

"இரும்மா முழுசா முடிக்கலே... சொல்லி முடிச்சிடறேன். அதனாலதான்... உன் வருங்கால மருமகளுக்காக நானே புதுசா ஒரு கார் வாங்கிட்டேன்!"

சரளா மகனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"லவ் பண்றியா?"

"அதுக்கூட உனக்காகதாம்மா! பிள்ளைக்கேத்த பொண்ணை தேடிப் பிடிக்கறதுக்குள்ளே இந்த அம்மாங்க படறபாடு இருக்கே... ரொம்ப கஷ்டம்மா... அந்த கஷ்டத்தை உனக்குத் தர விரும்பலேம்மா.... அதான்... லவ் பண்ணிட்டேன்!"

''எவ்ளோ தைரியம் இருந்தா என்கிட்டேயே..."

"நான் ஏம்மா பயப்படணும்? என் சரளாம்மா மத்த அம்மா மாதிரியா? பையன் புத்திசாலி, அம்மாவுக்கேத்த மருமகளாதான் செலக்ட் பண்ணியிருப்பான்னு தெரியாதா என்ன?"

சரளா செல்லக் கோபத்துடன் மகனின் காதைத் திருகினாள்.

"திருட்டுப்பயலே... செய்யறதை எல்லாம் செஞ்சுட்டு.. வாழைப்பழத்துல ஊசி ஏத்தற மாதிரி உன் லவ் மேட்டரை சொல்றியா? நான் ஏத்துக்கலேன்னா என்ன பண்ணுவே?"

''நிவேதிதாவை பார்த்தா யாருக்குமே பிடிக்கப் போகும். என் அம்மாவுக்கு மட்டும் பிடிக்காதா என்ன?"

"சேனல்ல இருக்கறவளாச்சே... சீரியல்ல பேசி மடக்கற மாதிரி மடக்கறே... ம்... சரி... அவ யாரு, என்ன பண்றா?"

"எல்லாம் அப்புறமா சொல்றேன். அதுக்கு

முன்னாடி ரெண்டு முக்கியமான விஷயம்"

"என்ன?"

"இன்னும் கொஞ்ச நேரத்துல நிவேதிதாவை நான் இந்த புதுக்கார்ல நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வரப் போறேன்!"

"இப்பவா, வீட்டுக்கா?" வாய் பிளந்தாள்.

"ம்..."

"காரை கோவிலுக்கு கொண்டு போய் பூஜை பண்ணலியா?"

"அதெல்லாம் அப்புறம். முதல்ல இந்த வீட்டு மகாலட்சுமி அதிலே வரட்டும்."

"பார்த்து சசி... இப்பவே ரொம்ப ஜால்ரா போடாதே!"

"பொறாமையா, என் அம்மாவுக்கா? நெவர்!"

"கொஞ்சினது போதும்... இன்னொரு விஷயம் என்ன?"

"நானும், நிவேதிதாவும் பரஸ்பரம் நேசிக்கிறோம். ஆனா, இன்னும் ப்ரபோஸ் பண்ணிக்கலே...!"

"என்ன சொல்றே சசி?" சரளா வியப்பாய் பார்த்தாள். "அப்புறம் எதுக்கு... கார், அதிலே உக்கார வச்சி நம்ம வீட்டுக்கு ஊர்வலம்?"

"கோபப்படாதேம்மா! உன்னை அவ பார்க்கணும். பார்த்ததும் ரொம்ப பிடிச்சுப் போகும். இதையே சாக்கா வச்சி அடிக்கடி உன்னை வந்துப் பார்த்து காக்கா பிடிப்பா."

"தலைய சுத்துது!"

"எல்லாம் ஒரு ஜாலிக்காகதாம்மா... ப்ளீஸ்... உன் கையால அவளுக்கு ஒரு காபி மட்டும் குடு... போதும்... வர்றேம்மா... பை!"

"சசி... சசி...!"

அதற்கு மேல் அம்மா பேச்சை காதில் போட்டுக் கொள்ளாமல் தன் புத்தம் புதிய ஆல்டோவில் ஏறிப் பறந்தான்.

X X X

நிவேதிதா யோசித்தபடி ஆட்டோவிலிருந்து இறங்கி... குறிப்பிட்ட 'பொட்டிக்' வளாகத்தில் நின்றாள்.

அவள் வீட்டிலிருந்து கிளம்பும் தருணத்தில், சசிதரனிடமிருந்து போன் வந்தது.

"மிஸ் நிவேதிதா... உங்க வண்டியில வரவேணாம். ஒரு ஆட்டோ பிடிச்சு 'சார்மிங் பொட்டிக்' ரெவுண்ட் ப்ளோர்ல வெய்ட் பண்ணுங்க... நான் உங்களை பிக்கப் பண்ணிக்கறேன்."

"ஏன் சார்... அவசரமா யாரையாவது மீட் பண்றோமா?"

"ஆமா... உங்க வாழ்க்கையில சந்திக்க வேண்டிய அவசியமான நபரை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போறேன்."

"புரியலே!"

"நல்லது.... அப்படியே இருக்கட்டும்... கிளம்பிடுங்க" என்று உத்தரவிட்டு போனை கட் பண்ணிவிட்டான்.

ஐந்து நிமிடம் கடந்தது.

அவளின் சாம்பல் நிற சான்ட்ரோவை கண்ணுக்கெட்டிய வரையில் காணோம்.

அவளின் வெகுபக்கத்தில் வட்டமடித்து வந்து நின்ற வெள்ளை நிற ஆல்டோவின் க்ரீச்சிற்கு திடுக்கிட்டு விலகியவள் உடனடியாக கோபப்பட்டாள்.

அவள் திட்ட வாயை திறப்பதற்குள், "ஸாரி..." என்று புன்னகையுடன் கதவை திறந்தான் சசி.

"சா...ர்... நீங்களா?"

"நானேதான்... ஸ்வீட் குட்மார்னிங்!" இளம் பிங்க் நிறத்தில் முழுக்கை சட்டையும், கறுப்பு நிற பேண்ட்டும், அவளின் வசீகரத்திற்கு மெருகூட்டியது.

"குட்மார்னிங் சார்... இந்தக் கார்ல நீங்க இருப்பீங்கன்னு எதிர்பார்க்கலே!"

"புதுசு... ஏறுங்க..."

அமர்ந்தாள்.

"வெரி நைஸ்... உங்களோடதா?"

"ஆமா!"

"சான்ட்ரோ என்னாச்சு?"

"வீட்லே இருக்கு... அம்மாவுக்குன்னு கொடுத்துட்டேன். இது எனக்கும்... என்...."

"......?!"

அவளைப் பார்த்து குறும்பாய் சிரித்தபடி. "வருங்கால மனைவிக்காக மட்டும்!"

"ஓ!"

"யூ நோ நிவேதிதா... இந்த புதுக்கார்ல உங்களைதான் முதன் முதலா உட்கார வச்சதே!"

"ஏ... ஏன்?" என்றாள் உள்ளம் துடிதுடிக்க.

"சும்மா... தோணுச்சு!"

'சும்மா... தோணுச்சா? கல்லுளிமங்கா... நீதான்டி என் வருங்கால ராசாத்தின்னு வாயிலே வருதா பார்?'

"தாங்க்ஸ்... யாரை பார்க்கப் போறோம்?"

"இதுவரை எங்க வீட்டுக்கு நீங்க வந்ததில்லையே.. வந்து எங்கம்மா கையால ஒரு காபி சாப்பிட்டுப் போங்க!"

இதை நிவேதிதா எதிர்பார்க்கவே இல்லை.

ஆல்டோவின் இருபுறமும் சிறகு முளைத்தது.

X X X

9

சரளா மகனிடம் விளையாட்டாகச் சொல்லிவிட்டாளேயொழிய, அவளுக்கும் தன் வருங்கால மருமகளைப் பார்க்கும் ஆர்வம் மிகுந்திருந்தது. அவசர அவசரமாய் பால் கேசரி செய்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் சசிதரனின் கார் உள்ளே நுழைய... வாசலுக்கு வந்து விட்டாள் சரளா.

"வா... சசி... டிபன் கூட சாப்பிடாமப் போய்ட்டியே..." இயல்பாய் கேட்பதுப் போல் கேட்டவள், முன்புறமிருந்து இறங்கிய பெண்ணைப் பார்த்து உண்மையில் அசந்துதான் போனாள்.

ஒரு அழகிய மயிலைப் போன்ற தோற்றம். புத்திசாலித்தனத்தை மீறிய பதற்றம்.

"அம்மா... இது நிவேதிதா... எங்க சேனல்ல ரிப்போர்ட்டரா இருக்காங்க. பல நிகழ்ச்சிகளையும் தயாரிச்சிட்டிருக்காங்க. நிவேதிதா... இவங்க என் அம்மா!"

"வணக்கம்மா..."

"வணக்கம்மா... உள்ளே வாம்மா!"

அம்மாவின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியின் மூலமே புரிந்துப் போனது. நிவேதிதாவை அவளுக்கு ரொம்பவே பிடித்து விட்டது.

"ஆச்சர்யமாயிருக்கும்மா. என் பையன் என்கிட்டே பேசவே நேரம் இடைக்காம ஓடிக்கிட்டிருப்பான். அதனாலேயோ என்னவோ, பிரண்டுன்னு யாரையும் வீட்டுக்கு அழைச்சிட்டு வந்ததில்லே. உட்காரும்மா! உனக்கு சொந்த ஊர் எது? அப்பா அம்மா என்னப் பண்றாங்க?"

அவளும் தயக்கம் உதறி பதில் கூற ஆரம்பித்தாள்.

சரளாவின் தோற்றமும், பேச்சும் நல்ல பெண்மணி என்று அழுத்தம் திருத்தமாய் சொன்னது.

போன் வரவே சசிதரன், "பேசிட்டிருங்க வந்துட்டேன்" என்று நகர்ந்தான்.

"என் பையன் புதுசா இன்னொரு கார் வாங்கியிருக்கான். எதுக்குத் தெரியுமா? என்னோட மருமகளுக்காம்!"

"மருமகளுக்கா?"

"ஆமாம்மா.. நீ எம்மா கஷ்டப்படறே... நானே ஒரு பொண்ணை பார்த்துட்டேன்னு குண்டைத் தூக்கிப் போடறான். சரி, போனா போகட்டும், யாருடா அந்தப் பொண்ணுன்னு கேட்டா.. சொல்ல மாட்டேங்கிறான். நீ அவனுக்கு பிரண்டுதானே? உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே... யாரும்மா அந்தப் பொண்ணு? நல்லப் பொண்ணா? பார்க்க லட்சணமாயிருப்பாளா?"

"ஐய்யோ... அ... அதெல்லாம் எனக்குத் தெரியாது ஆன்ட்டி"

"தெரியலேன்னா என்ன... தெரிஞ்சுக்கிட்டு சொல்லேன். யாராயிருந்தாலும் எனக்கு சம்மதம்தான். சசி சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். அவனைக் கட்டிக்க எந்தப் பொண்ணுக்கு குடுத்து வச்சிருக்கோ? நான் ஏமாளி மாமியார். இது போதாதா பொண்ணுக்கு?"

நிவேதிதா வாய்விட்டு சிரித்து விட்டாள்.


அவள் சிரிப்பதை ரசித்துப் பார்த்தாள் சரளா. வீடெங்கும் காசுகள் உருண்டோடியதுப் போன்ற பிரமை.

சசி உள்ளே வந்தான். "அம்மா... எங்க ரெண்டு பேருக்கும் காபி குடு. அர்ஜென்ட் மேட்டர் இருக்கு. போகணும்."

"என்ன நீ... சமைச்ச வச்சிருக்கிற டிபனெல்லாம் யார் சாப்பிடறதாம்? எம்மா... நீ டிபன் சாப்பிட்டியா?"

## நான், வச்ச குறி தப்பாது!

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் அபினவ் பிந்த்ரா துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று இந்திய மானம் காத்தது அனைவரும் அறிந்ததுதான்.



அபினவ் பிந்த்ரா போலவே 2012 லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் அஸ்யா செல்வி. சென்னை ராயப்பேட்டையைச் சேர்ந்த இவர் கல்லூரி மாணவி ஆவார்.

தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றிகளை குவித்து உள்ள இவர், "நான் வச்ச குறி தப்புவது இல்லை. லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 50 மீட்டர் துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வெல்வேன்" என்று

"சாப்பிட்டாச்சு ஆன்ட்டி!"

"அம்மா ப்ளீஸ்.. எனக்கே பசிதான். ஆனா சாப்பிடதான் நேரமில்லே... காபி மட்டும் குடேன்!"

"நீ புதுசா கார் வாங்கினதுக்காக ஸ்வீட் பண்ணியிருக்கேன். தவிர, நிவேதிதா முதன் முதலா நம்ம வீட்டுக்கு வந்திருக்கா... வெறும் காபியோட அனுப்பினா நல்லாயிருக்குமா?" அம்மா அர்த்தமாய் சொல்ல...

சசிதரன் புரிந்தவனாய் "அ...ம்..மா..." என்றான் நன்றியுடன்.

"நம்ம வீட்டு விருந்தாளிக்காக அஞ்சு நிமிஷம் ஒதுக்கறதிலே தப்பே இல்லேம்மா... கொண்டு வா... கொண்டு வா!" கைகளை பரபரவென தேய்த்தபடி அமர்ந்தான்.

இரண்டே பேர்களடங்கிய அந்த சின்னஞ் சிறு குடும்பத்தில் நிலவிய குதூகலமும், அந்நியோன்யமும் பார்க்கவே ஆனந்தமாய் இருந்தது நிவேதிதாவிற்கு.

'இந்த அழகிய கூட்டிற்குள் நானும் ஒரு சிட்டுக்குருவியாய் சிறகடிக்க அதிர்ஷ்டம் இருக்கிறதா?' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

× × ×

முகம் முழுக்க பவுடர் போல் அப்பியிருந்தது சந்தோஷம்!




ரியர்வியூ மிர்ரரில்... அவ்வப்போது தனக்குத் தானே சிரித்துக் கொண்ட நிவேதிதாவை கவனித்துக் கொண்டே வந்தான் சசிதரன்.

அலுவலகம் நோக்கி வேகமெடுத்தது கார்.

"கார் நல்லாயிருக்கா நிவேதிதா?"

"ரொம்ப... ரொம்ப..."

"எங்க வீடு பிடிச்சிருக்கா?"

"ரொம்ப அழகான வீடு. சின்னதாயிருந்தாலும் பூஜையறையை கோவில் மாதிரி அலங்காரம் பண்ணி வச்சிருக்காங்க உங்கம்மா. எனக்கே நிதானமா உக்காந்து பூஜை பண்ணணும்ங்கற மாதிரி தோணுச்சு. அழகான தோட்டம். அழகான, அன்பான அம்மா! சுத்திப் போடுங்க... என் கண்ணே பட்டிருக்கும்!"

"உங்க கண்கள் ரொம்ப அழகானவை நிவேதிதா. அது எங்க வீட்டு மேல பட்டி ருக்குன்னா... எங்க வீடு இன்னுமில்ல அழகாகும்?"

"மைகாட்... சூப்பர் கடி!"

"ஜோக் இல்லே... சீரியஸ்...! அப்புறம் அம்மாவுக்கும் உங்களை ரொம்ப பிடிச்சிருக்காம். அடிக்கடி வரச் சொன்னதை மறந்துடாதீங்க."

"கண்டிப்பா வருவேன்! தவிர, உங்கம்மா என்கிட்டே மிகப் பெரிய பொறுப்பை ஒப் படைச்சிருக்காங்க."

"என்ன பொறுப்பு?"

"நீங்க யாரையோ காதலிக்கிறீங்களாம். அந்தப் பொண்ணு உங்க ஆபீஸ்லதாம்மா வேலை பார்க்குது. அது யாரு என்னன்னு என் பிள்ளை சொல்ல மாட்டேங்கிறான். நீயாவது கண்டுபிடிச்சு சொல்லும்மான்னாங்க."

"ஓஹோ... அம்மா உங்களை வளைச்சுப் போட்டுக்கிட்டாங்களா?"

"அதெல்லாம் இருக்கட்டும். சொல்லுங்க.. யாரந்த பொண்ணு?"

"உங்களுக்கு சாமர்த்தியம் இருந்தா கண்டுபிடியுங்களேன் நிவேதிதா!" என்றான் குறும்பாய் சிரித்தபடி.

"க்ளு கொடுங்களேன்!"

"அழகான, புத்திசாலியான பொண்ணு!"

"அப்புறம்?"

"அதுக்கு மேல சொன்னா கண்டுபிடிச் சிடுவீங்க. லோ..."

"லோ..."

"என் பர்த்டே வரைக்கும் வெய்ட் பண்ணுங்க."

"ஏன்?"

"அன்னைக்கு அவளை மட்டும் ஸ்பெஷல் கெஸ்ட்டா வரவச்சு ட்ரீட் தருவேன்."

"அப்ப நான் எப்படி அவங்களை பார்க்க முடியும்?"

''உங்களுக்கும் அழைப்பு உண்டு!'' அவன் பக்கம் திரும்பி மந்தகாசமாய் புன்னகைத்தான்.

X X X

"பூஸ்ட் இஸ் த சீக்ரட் ஆப் மை எனர்ஜி!" தெண்டுல்கர் டி.வி.யில் ரகசியத்தை வெளிப்படையாகச் சொன்னார்.

ராமச்சந்திரன் உடனே சேனலை மாத்தி னார்.

''மாமா... அந்த விளம்பரத்தை வையுங்களேன்!"

"எதை?" வியப்பாய் கேட்டார்.

"அந்த பூஸ்ட் விளம்பரத்தை!"

"எம்மா... சீரியல் பார்க்கப் போறியா?"

"இல்லே மாமா... அந்த விளம்பரம் ரொம்பப் பிடிக்கும். முடிஞ்சிடப் போகுது... சீக்கிரம் வைங்க!" வர்ஷினி ஆர்வமும், அவசரமுமாய் சொன்னாள்.

ராமச்சந்திரன் வியப்பு அகலாமல் மறுபடி அந்த சேனலை வைத்தார்.

அதற்குள் வேறொரு சோப்பு விளம்பரம் வந்திருந்தது.

''அடடா... முடிஞ்சுப் போயிருச்சா?" முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது.

"இந்த விளம்பரத்தையா ரசிக்கிறே? நல்லப் பொண்ணும்மா நீ?" கேலியாய் சிரித்தார் ராமச்சந்திரன்.

"இ... இல்லே மாமா... எ.. எனக்கு தெண்டுல் கரை பிடிக்கும்... அதனால தான்..."

''அவர்தான் எல்லா விளம்பரத்திலேயும் வர்றாரே... அப்புறமென்ன... பார்த்துட்டாப் போச்சு!"

அவளென்ன தெண்டுல்கருக்காகவா பார்க்க ஆசை பட்டாள்? பூஸ்ட் என்ற வார்த்தை காதில் விழும்போதெல்லாம், புதிதாய் பிறந்ததுப் போல் அவள் உடம்பிலும் சக்தி பெருக்கெடுத்தது. மந்திரம் போல் அந்த வார்த்தை அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

"உங்க அத்தை இல்லாம வீடே வெறிச்சோடி கிடக்கு. என்னம்மா சமைக்கப் போறே? கஷ்ட மாயிருந்தா... ஓட்டல்ல வாங்கிக்கலாம்!"

"சமைச்சு முடிக்கவேப் போறேன்!" என்றாள் கிச்சனிலிருந்து.

புவனேஸ்வரி நவக்கிரக ஸ்தலங்களுக்கு தெருவாசிகளுடன் ஒரு வார டூர் போயிருந் தாள்.

X X X

# 10

அதிகாலையில் வந்து நின்ற கோகு லைப் பார்த்து ஆச்சர்யத்தில் கூவி விட்டார் ராமச் சந்திரன்.

"கோ...கு..ல்... நீ... நீயா... வா... வா!"

"நல்லாருக்கீங்களாப்பா?"

"எனக்கென்னப்பா குறை? ஒரே பிள்ளை பக்கத்திலே இல்லையேங்கறதைத் தவிர"

"அம்மா எப்ப வர்றாங்க?"

"மூணு நாளாகும்.... உக்காருப்பா... டீ போட்டுத் தர்றேன்."

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். அசதியா இருக்கு... ரெண்டு மணிநேரம் தூங்கறேனே...."

"வாப்பா.... நல்லா ரெஸ்ட் எடு!" அவனின் லக்கேஜை தூக்கினார்.

"ஐயோ... அப்பா... நீங்க எதுக்கு இதை யெல்லாம்?"

''உன்னையே தூக்கி வளர்த்தவன் நான். இதை தூக்க மாட்டேனா?"

"அது பாசம், இது பாரம்!"

''பெங்களூருக்குப் போய் நல்லா பேச கத்துக்கிட்டே"

"அப்படியெல்லாம் இல்லேப்பா... வர்ஷினி நல்லாருக்காளா?"

"நல்லாருக்கா... எழுப்பட்டா?"

"வேணாம்ப்பா... தூங்கட்டும். அப்புறம் ஒரு விஷயம்... நான் வந்ததே தெரிய வேணாம்..."

"அதெப்படி தெரியாம..."

''சும்மா ஒரு விளையாட்டுக்குத்தான். சர்ப்ரைஸா... நானே அவ முன்னால நிக்கணும்... அவ ஷாக்காகணும்"

"சரி... சரி..." தலையாட்டியபடி சிரித்துக் கொண்டார்.

வழக்கத்தை விட சற்றுத் தாமதமாகவே எழுந்தாள் வர்ஷினி. எப்போதும் போல் சாத்தப்பட்டிருந்த கோகுலின் அறைக் கதவு சாத்தப்பட்டிருந்த தால்... அவள் கிஞ்சித்தும் சந்தேகப்பட வில்லை.

காலை நேர வாக்கிங்கை முடித்து விட்டு உள்ளே நுழைந்த ராமச்சந்திரன் வர்ஷினியைப் பார்த்து சிரித்தபடி பால்கவர்கள் அடங்கிய பையை நீட்டினார்.

''என்ன மாமா ரெண்டு கவர் அதிகம ாயிருக்கு?"

''என் நண்பர் ஒருத்தர் என்னை சந்திக்க

வர்றதா சொல்லியிருந்தார்... அதான்!"

"அதுக்கு ஒரு கவர் எக்ஸ்ட்ரா வாங்கி இருந்தாப் போதுமே... முன்ன மாதிரி இல்லே மாமா.. அடிக்கடி பால் கெட்டுப் போகுது..."

"அப்படியா... தெரியாம வாங்கிட்டேன் காய்ச்சி வச்சிடு!"

"சரி மாமா!"

"என்ன டிபன்ம்மா சமைக்கப் போறே?"

"வெண் பொங்கல், சாம்பார்!"

''வெரிகுட்... கொஞ்சம் அதிகமாகவே சமைச்சிடும்மா.... நண்பர் டிபன் சாப்பிட்டுத்தான் கிளம்புவார்!"

"சரி மாமா!"

வேகமாய் செயல்பட்டாள் வர்ஷினி. குளித்து முடித்து, வீட்டை பெருக்கி, சமையலில் மும்முரமாகி விட்டாள்.

சற்று நேரத்தில் நெய் மணக்கும் பொங்கலின் வாசம் வீட்டை நிறைத்தது.

''மாமா... டிபன் ரெடி... சாப்பிட்டுக்கறீங்களா?"

"அவர் வர்ற நேரம்தான்... டேபிள் மேல எடுத்து வச்சிட்டு... நீ ரெடியாகிக்கம்மா... சேர்ந்தே சாப்பிட்டுக்கலாம்!"

"ச.. சரி.. மாமா" தயக்கத்துடன் சொல்லி விட்டு தன் அறைக்குள் சென்று கதவை தாழிட்டாள். உடையை மாற்ற எத்தனித்த போதுதான் கட்டிலின் மேல் அவற்றை கவனித்தாள்.

ஒரு லேப் டாப்பும், டிரஸ்கள் அடங்கிய பெரிய பாலிதீன் கவரும்.

'என்ன இது? எது? இங்கே எப்படி வந்தது? காலையில் எந்திரிக்கும் போது... இது இங்கில்லையே' புரியாமல் தவித்தபடி உடனே கதவைத் திறந்து வெளியில் வந்தாள்.

"மாமா.... மாமா!"

''என்னம்மா?'' என்றபடி கொல்லைப் புறத்திலிருந்து வந்தார்.

"இ... இதெல்லாம் என் ரூம்ல எப்படி வந்துச்சுன்னே தெரியல.... பாருங்க... லேப் டாப், சாரீஸ், சுடிதார்னு என்னென்னமோ இருக்கு?"

"தெரியலியே.... யார் வச்சிருப்பா?"

"நீங்க வெளியில போயிருந்தப்ப... நான் குளிச்சிட்டிருந்தப்பதான் யாராவது வந்து வச்சிருக்கணும்."

"இல்லியேம்மா... நீ எந்திரிச்சப்பதானே நான் வாக்கிங் முடிச்சிட்டு வந்தேன். நீ குளிக்கப் போனபோது நான் வீட்லதானேம்மா இருந்தேன்!"

''ஆமாம்... அப்ப எப்படி இதெல்லாம்? பேசாம போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுத்திடலாமா மாமா?"

''என்கிட்டே பேசினதுக்கப்புறம் கூட கொடுக்கலாமே!"

குரல் வந்த திசையை நோக்கி தலையைத் திருப்பியவளின் விழிகள் அகலமாய் விரிந்தன.

'கோ...கு...ல்!"

தன் அறைக்கதவை திறந்துக் கொண்டு நின்றிருந்தான் கோகுல்.

"நீ... நீங்...களா? எ...எப்ப வந்தீங்க?"

"எர்லி மார்னிங் போர் தர்ட்டி!"

"எ... எனக்குத் தெரியாதே...!"

''தெரிய வேண்டாம்னு நான்தான் அப்பாவுக்கு ஆர்டர் போட்டேன்!"

''ஆமாம் வர்ஷினி... எக்ஸ்ட்ரா பால் எதுக்குன்னு கேட்டியே... இதோ இந்த நண்பருக்குதான்!"

சன்னமாய் சிரித்தவளை காதலுடன் பார்த்தான் கோகுல்.

அடர்த்தியற்ற ஆரஞ்சு நிறத்தில் கறுப்பு பூக்கள் சிதறிய நைட்டியில் அடங்கிருந்த எழில் வடிவான மேனி! பளிச்சிட்ட பாசாங்கற்ற முகம். வழித்துச் சுற்றி கிளிப் போட்டிருந்த கூந்தல் என்று எளிமையான தோற்றத்தில் கனிவும், அழகும் கொட்டிக் கிடந்தன.

''கு... குளிச்சிட்டு வந்தட்டீங்கன்னா, சாப்பிட்டுக்கலாம் டிபனும் ரெடி!"

"என்னைப் பார்த்தா குளிச்சிட்டு வந்தவன் மாதிரித் தெரியலியா வர்ஷினி... சரி.. இன்னொரு முறை குளிச்சிட்டாப் போச்சு."

"ஓ... ஸாரி!" என்றாள் அவனை நிமிர்ந்து பார்க்காமல்.

கோகுலின் அறையில் அட்டாச்டு பாத்ரூம் வசதி இருந்தது.

"பிடிச்சிருக்கா வர்ஷினி"

"எ... என்னது?"

"லேப் டாப்பும், டிரஸ்ஸும்!"

"அ... அதெல்லாம் எதுக்கு?"

"அதுசரி, இப்பல்லாம் நீ கம்ப்யூட்டர் முன்னாடியே பழியா கிடக்கறேன்னு அம்மா போன்ல சொன்னாங்க. அதான் வாங்கிட்டு வந்தேன். டிரஸ் கலர்ஸும் உன் டேஸ்ட் படிதான் செலக்ட் பண்ணினேன். பிடிச்சிருக்குதானே?"

"ம்... தாங்க்ஸ்!" என்றாள் உறுத்தலுடன்.

அவன் தனக்காக மெனக்கெடுகிறான் என்பதே சங்கடமாக இருந்தது.

"ஒன் ஸ்மால் ரிக்வெஸ்ட் வர்ஷினி"

"சொல்லுங்க."

"இன்னைக்கு ஒரு நாள் நீ ஆபீஸ்க்கு லீவு போட்டா என்ன? நாம மூணுபேரும் வெளியே போய் வரலாம்"

"ஸ... ஸாரி... முடியாது... ஆபீஸ்ல ஏகப்பட்ட வேலை இருக்கு... நான் கிளம்பணும்!" அடுத்த விநாடியே அவள் அங்கிருந்து அகன்றாள்.

அவள் செய்கையில் செயற்கைத்தனம் இருப்பதாகத் தோன்றியது ராமச்சந்திரனுக்கு.

கோகுல் அதை கேஷுவலாகத்தான் எடுத்துக் கொண்டான்.

X X X

"**மா**த்திரைப் போட்டியா கோகுல்?" ராமச்சந்திரன் மகனை கவலையுடன் கேட்டார்.

"ம்... போட்டேன்ப்பா!" நெற்றியை அழுந்தத் தேய்த்துக் கொண்டான்.

"திடீர்னு என்ன இவ்ளோ தலைவலி!"

"க்ளைமேட் சேஞ்சா இருக்கும்!"

"காபி போட்டுத் தரட்டுமா கோகுல்?"

"வேணாம்பா... வர்ஷினி இப்ப வந்திடுவாதானே? வந்த பிறகு மூணுபேரும் குடிக்கலாம்."

மகனின் தலைவலியை மீறிய ஆசையை புரிந்துக் கொண்டவர் அமைதியாகி விட்டார்.

பத்து நிமிடத்தில் வர்ஷினியும் வந்து விட்டாள்.

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த கோகுல், வர்ஷினியைக் கண்டதும் குளுகோஸ் சாப்பிட்டதுப் போல் உணர்ந்தான்.

"வா... வர்ஷினி!" புன்னகைத்தான்.

பதிலுக்கு சிறிய கீற்றாய் புன்னகைத்தவள் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

ஏனோ... அவன் அவள் கண்களுக்கு பெரிய மதிற்சுவராகவேத் தெரிந்தான்.

"வர்ஷினி"

'சே... என்ன வேணுமாம் இவனுக்கு?' சலித்தபடி வெளியில் வந்தாள்.

"ம்..."

"ரொம்ப தலைவலிக்குது. சுகர் கம்மியா, ஸ்ட்ராங்கா ஒரு காபி கிடைக்குமா?"

"ஸாரி கோகுல்... எனக்கும் பயங்கர தலைவலி... அகெய்ன் ஸாரி!" அவளையும் மீறி வந்து விழுந்தன வார்த்தைகள்.

"ஓ ஸாரி... டேப்லட் இருக்கு தரவா?"

"நோ... தாங்க்ஸ்... என்கிட்டேயே இருக்கு"

உடனே அங்கிருந்து அகன்றாள்.

# வெற்றிப்பயணம் தொடரும்!

இந்தியாவைப் பொருத்தவரை 'குவாஷ்' பிரபலமான விளையாட்டு அல்ல. எனவே வீரர். வீராங்கனைகள் அதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் ஜோஷ்னா சின்னப்பா இதற்கு மாறுபட்டவராக விளங்கி சர்வதேச குவாஷ் விளையாட்டு அரங்கில் வரலாறு படைத்து வருகிறார்.

19 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்கான பிரிட்டிஸ் குவாஷ் போட்டியில் வென்ற இந்திய வீராங்கனை என்ற பெருமையும் இவருக்கு உண்டு.




"**இ**ப்ப எப்படிம்மா இருக்கு தலைவலி?"

கட்டிலில் கண்மூடி படுத்திருந்தவள், மாமாவின் குரல்கேட்டு பதறி எழுந்தாள்.

"ப... பரவாயில்லே மாமா!"

"இந்தாம்மா... சூடா குடி. மாத்திரை போட்டியா?"

"ஐயோ... நீங்க எதுக்கு மாமா இந்த வேலையெல்லாம் செய்துக்கிட்டு?"

"கோகுல் உன் கையால காபி சாப்பிடணும்னு காத்திருந்தான். பாவம் உனக்கும் தலைவலி. யார் போட்டா என்னம்மா... குடி!"

மாமாவின் அனுசரணையான வார்த்தைகள் மனதை உறுத்தின.

அவளுக்கு தலைவலியே இல்லை பொய்தான் சொன்னாள். ஆனால் அன்பு காட்டும் ஆத்மாவிற்கு கபடு புரிந்து கொள்ளத் தெரியாதே!

தன்னை நினைத்து கசப்பாய் உணர்ந்தாள்.

X X X

"**கோ**குல் சென்னை வந்திருக்கார்னு சொல்லவே இல்லை!" கலாட்டாவை லாவகமாய் எடுத்து தொண்டைக்குள் சரித்து ருசித்தபடி கேட்டாள் நிவேதிதா.

"அது அவ்வளவு முக்கியமான

21 வயதான ஜோஷ்னா இப்போது இந்தியாவில் ஸ்குவாஷ் வீராங்கனைகள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளார். இவர் இப்போது பல போட்டிகளில் வென்று ஆண்டுக்கு ரூ.7 லட்சம் வரை பரிசு பணத்தை குவித்தாலும் "இன்னும் என் பயணம் முடியவில்லை. நீண்ட தூரம் செல்ல வேண்டியது உள்ளது. உலக வீராங்கனைகள் தரவரிசையிலும் முன்னணி இடம் பிடிப்பேன்" என்று கூறினார்.



விஷயமா நான் நினைக்கலை... அதான்! ஆமாம்... கோகுல் வந்திருப்பது உனக்கெப்படித் தெரியும்?"

நிவேதிதா, வர்ஷினியின் வார்த்தையில் வெளிப்பட்ட சிறிய அலட்சியத்தினை உணரவே செய்தாள்.

"யதேச்சையா அல்சாமால்ல பார்த்தேன். பேசிக்கிட்டோம். முன்னைவிட செம ஹாண்ட்சமா இருக்கார். நைஸ் மேன். கோகுலுக்கே தெரியாம அவரை வாட்ச் பண்ணினேன். அரேபிய குதிரை மாதிரி எத்தனைப் பொண்ணுங்க... அவங்கள்ல ஒருத்தியக் கூட தப்பான பார்வைப் பார்க்கலே தெரியுமா? ஹி வாஸ் எ ஜெம்!"

"பூஸ்ட்டை விடவா?"

"வாட்?"

"நீ சொன்னப்பக் கூட நான் அவரை நம்பலே பட்... பழகிப் பார்த்தப் பிறகுதான்... அவர் எப்பேர்ப்பட்ட ஜென்டில்மேன்னு புரிஞ்சது. பழகின பத்து நிமிஷத்திலேயே படுக்கைக்கு வரியான்னு கூப்பிடுற ஆண்கள் மத்தியிலே ஒரு எல்லையோட, நாகரீகமா, அழகான கருத்துக்களை பகிர்ந்துக்கிற பண்பானவனா நடந்துக்கிற பூஸ்ட்டை நான் ரொம்ப மதிக்கிறேன்."

"ஹேய்... நீயா இப்படிப் பேசறே? இதே கருத்தை நான் சொன்னப்ப எப்படி குதிச்சே?"

"ஸாரிடா... அதையெல்லாம் இப்ப வாபஸ் வாங்கிக்கிறேன்."

"சரி... நான் ஒரு கேள்விக் கேட்கிறேன். பூஸ்ட் ஒரு ஆண் பெயரில் ஒளிந்திருக்கிற பெண்ணாக இருக்கவும் வாய்ப்பிருக்கு. நட்புக்கு நான் முக்கியத்துவம் கொடுக்கறதால... அந்த ஆராய்ச்சியே அர்த்தமில்லாததுன்னு அதைப் பத்தி நினைக்கறதில்லே. நீ எப்படி பூஸ்ட் ஒரு ஆண்தான்னு திட்டவட்டமாச் சொல்றே?"

"என் உணர்வு பொய் சொல்லாது!" என்று சிரித்த வர்ஷினியை புரிந்தும் புரியாமல் பார்த்தாள் நிவேதிதா!

✕ ✕ ✕

உறக்கம் பிடிக்காமல் கட்டிலை விட்டு எழுந்த வர்ஷினி ஜன்னலருகே சென்றாள். எல்லா கதவுகளையும் திறந்து விட்டாள். காத்திருந்த தென்றல் காற்று குபுகுபுவென உற்சாகமாய் உள்ளேப் பாய்ந்தது.

அந்த குஷியில் திரைச்சீலைகள் பாலே நடனமாடின. அவ்வளவு சிலிர்ப்பான காற்றுக் கூட அவள் உள்ளத்து கொந்தளிப்பை மட்டுப்படுத்தவில்லை.

ஹாலில்... புவனேஸ்வரி அத்தையின் வறட்டு இருமல் சத்தம் தொடர்ந்து கேட்டது. டூர் போய்ட்டு வரும் போது கூடவே இருமலையும் அழைத்து வந்து விட்டாள்.

அமாவாசைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தாலும், சோகையான நிலவைக் கூட காணோம். ஊரடங்கிய நள்ளிரவில்... கும்மிருட்டில் மின்மினி பூச்சிகள் மட்டும் உற்சாகமாய் கூடி குலவிக் கொண்டிருந்தன.

ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டாள் வர்ஷினி.

அன்றிரவு பூஸ்ட்டுடன் இ-மெயிலில் அளவளாவிக் கொண்டிருந்த போது... தன்னையறியாமல், ஆர்வத்தை அடக்க முடியாமல் சில கேள்விகளை அனுப்பி விட்டாள்.

"நீங்க எங்கேயிருக்கீங்க? என்ன பண்றீங்க? உங்களைப் பார்க்க மனசு பரபரங்குது- நாம மீட் பண்ணலாமா?" என்று.

எதிர்முனை இதை எதிர்பார்க்கவில்லை போல்!

"ஸாரி... ஜாஸ்மின்! நாம் எப்பவுமே சந்திக்க வேண்டாம்.. அது நல்லதும் அல்ல." என்று பதில் வந்தது.

மென்மையான வர்ஷினியின் உள்ளம் இந்த பதிலால் சுருண்டுப் போனது.

× × ×

"என்னடா ரொம்பதான் பிகு பண்ணிக்கறே? எப்பதான் வேலையில்லை? அதுக்காக எப்பவும் மிஷின்மாதிரி ஓடிக்கிட்டே இருப்பியா? லைப்ல ஒரு எண்டர்டைன்மென்ட் வேண்டாமா? ஜஸ்ட் போர் டேஸ்தான்! மொத்தம் அஞ்சே பேர். கோவா போய்ட்டு வந்திடலாம். ரூட் எல்லாம் கூட ரிசர்வ் பண்ணிட்டோம்... வாடா ப்ளீஸ்!" பாலாஜி கெஞ்சலாய் கொஞ்சினான்.

"இல்லே பாலாஜி... ஏகப்பட்ட அசைன்மெண்ட் இருக்கு. சேனல்களுக்கிடையே ஏகப்பட்ட போட்டி.... ஒன்னை விட ஒன்னு முந்தணும். பெஸ்ட்டா தரணும். தினமும் புதுபுதுசா சிந்திக்கணும்... டைம் டைட்டா இருக்கு பாலாஜி. இப்பக்கூட ஒரு அசைன்மெண்ட்டுக்காக எந்த நேரத்திலும் கொடைக்கானல் கிளம்ப வேண்டியிருக்கும். ஸாரிடா... புரிஞ்சுக்க" என்றான் சசிதரன்.

"நீயும் வந்தா ஜாலியா இருக்கும்னு நினைச்சேன். சரி விடு. எங்கே உன் ஆளு... கூப்பிடேன் பார்க்கலாம்"

"சி.எம்.மோட ஒரு இன்டர்வியூ... கோபாலபுரம் போயிருக்கா!"

"மேடத்துக்கு லோட்டஸையும், ஜாஸ்மினையும் பத்தி இப்பவாவது தெரியுமா?"

"என்ன கிண்டலா? இந்த பிரண்ட்ஷிப்பெல்லாம் ரெயில் சிநேகம் மாதிரி. லோட்டஸாவது பரவாயில்லே. ஜாஸ்மின் கொஞ்சம் அவசரக்குடுக்கை!"

"என்னவாம்?"

சொன்னான்.

கபகபவென சிரித்தான் பாலாஜி.

"ஏன்டா... இதுவே வேற ஒருத்தனா இருந்தா... மீட் பண்ணி, ஓட்டல்லரும் போட்டு, சாப்பிட்டு கையை கழுவியிருப்பான். உன் இடத்துல நானாயிருந்தாக் கூட இடைச்சவரை லாபம்னு அதைத்தான் பண்ணியிருப்பேன். நீதான் வித்தியாசமாயிருக்கே!"

"இல்லடா... உண்மையாயிருக்கேன். என் நிவியை நான் ரொம்ப நேசிக்கிறேன். என் உடல், உயிர், மனசு... எல்லாமே அவளுக்கு மட்டும்தான். காதலுக்கு நாம தர்ற கவுரவமும், பரிசும் உண்மையா இருக்கறதுதானே?"

"பைத்தியக்காரன்.... ஆனாலும் உன் நிவி ரொம்ப குடுத்து வச்சவடா. அந்த ஜாஸ்மினோட ஐ.டி.யை எனக்குக் குடேன்!"

"உதைப்படுவே ராஸ்கல். அவ என் பிரண்ட். அவளை சேவ் பண்றதும் என் கடமைதான்!"

"போடா... சாமியார்!"

× × ×

சந்தன நிறத்தில் முழுக்கை சுடிதார். ஹேண்ட் எம்ப்ராய்டரியும், முத்தும் அமைந்த வேலைப்பாடுடன் ப்ரண்ட் ஓபன்! ஸ்கின்னி பேண்ட். ப்ரீயாக விடப்பட்ட ஹேர் ஸ்டைல். காதில் முத்து. வெற்று கழுத்து. நெற்றியில் சின்னதாய் பொட்டு. கண்களில் மஸ்காரா. லைட்டாய் லிப்ஸ்டிக். ஆனால், பார்க்கும் ஆண்களை உடனே கற்பனையில் டூயட் பாட வைத்தாள்.

'என்ன பரிசு தரலாம்? முதன் முதலாக தன் பிறந்த நாளுக்கென அழைத்திருக்கிறான். என்னையும், அவன் பியான்ஸியையும் அழைத்திருப்பதாக சொன்னான். பொய்! அவன் பியான்ஸியே நான்தானே? ஒருவேளை உண்மையிலேயே அவன் வேறு பெண்ணை நேசித்திருக்கலாம். நான்தான் அவன் செய்கையை அதீதமாய் கற்பனை பண்ணுகிறேனோ?'

அப்படியொரு சந்தேகம் உதிக்கவும்... உடம்பெங்கும் ஜுரம்போல் அனல் பரவியது.

'இருக்காது... இருக்காது!' அவள் காதல் மனம் பிதற்றியது.

தாஜ் ஓட்டல் வாசலிலேயே காத்திருந்து அவளை எதிர்கொண்டான் சசிதரன்.

"விஷ் யூ மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே"

"தாங்க்யூ... வெல்கம் நிவேதிதா! வாங்க உள்ளே போகலாம்." ரேமண்ட் உடையில் வசீகரமான மாடல் போல் இருந்தான்.

"உங்க ட்ரஸ் ரொம்ப அழகாயிருக்கு நிவேதிதா"

"தாங்க்யூ... உங்க பியான்ஸி வந்துட்டாங்களா?"

"அவ எப்பவோ வந்துட்டா... ஐ மீன் என் மனசுல"

"ரொம்பத்தான்... என்கிட்டே அறிமுகப்படுத்தறதா சொன்னீங்களே..."

"இப்பதான் வந்தா... கான்பரன்ஸ் ஹால்ல இருக்கா!" என்றான் முறுவலுடன்.

"கான்பரன்ஸ் ஹாலா? நீங்கதான் யாரையும் இன்வைட் பண்ணலியே... பிறகு எதற்கு கான்பரன்ஸ் ஹால்?"

"என்ன பண்றது? என் வருங்கால மனைவியை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் போது... கொஞ்சம் பந்தாவா இருக்க வேணாமா? அதான்... கொஞ்சம் பழைய ட்ரிக் தான். சினிமாத்தனமா இருக்கும். பட், காதலுக்கு அது என்னைக்குமே புதுசுதான்!"

"ஓஹோ..."

பேசிக் கொண்டே கான்பரன்ஸ் ஹாலுக்குள் நுழைந்த நிவேதிதாவிற்கு மூச்சடைத்தது.

✕ ✕ ✕

## 12

தற்காலிகமாக, சிரத்தையுடன் நிர்மாணிக்கப்பட்ட கண்ணாடிகள் நிறைந்த ஹால்! எங்கு திரும்பினாலும் நிவேதிதாவின் உருவம்தான் தெரிந்தது. பழைய வசந்தமாளிகை படத்தில் வருவதுப் போன்ற காட்சி. என்ன... கண்ணாடி சுற்றாமல் ஒரே இடத்தில் இருந்தன.

பிரமித்துப் போனவள்... எதிர்பாராத இத்தருணத்தால்.... உணர்ச்சி வசப்பட்டிருந்தாள்.

"ச... ச... சசி... எ... என்ன இது? இவ்வளவு கண்ணாடி?" என்றாள் தெரிந்தும் தெரியாததுப் போல்.

"நல்லாப் பாருங்க... கண்ணாடியா இது?"

"பி.. பின்னே?"

"என் இதயம் நிவேதிதா... எனக்குள்ளே இருக்கிற என் காதலியைதான்... அது இப்ப பிரதிபலிக்குது!"

"உ...ம்"

"தெரியுதானே?"

"...ம்"

"என் மனசுல நீயிருக்கறது தெரியும் தானே"

வைர மழை பனித்துகள்களை அள்ளி முகத்தில் விட்டது போல் சிலிர்த்துப் போனாள்.

அந்த கேள்விக்கு எந்தவிதமாகவும், ஆனால் உண்மையாக பதிலளித்தால்... வெட்கத்தில் நனைந்துதான் போக முடியும்!

நிவேதிதாவின் விழிகள் அவன் முகத்தை எதிர்கொள்ள திராணியற்று இப்படியும், அப்படியும் அலைபாய்ந்தது.

"வித் யுவர் பர்மிஷன் நிவேதிதா!"

"எ... என்ன?"

"வாய் வலிக்குது..."

"அதனால...."

"உன் பெயரை செல்லமா நிவின்னு கூப்பிடட்டுமா?"

"ம்!"

"நான் மத்த லவ்வர் பாய் மாதிரி இல்லே நிவி. பாரேன் நீ பதிலுக்கு ஐ லவ் யூ சொல்லணும்னு சங்கடப்படுத்தினேன்னா.... இல்லைதானே?"

"ம்!"

"உன் மனசுல என்ன இருக்குன்னு எனக்கும் தெரியும். ஸோ... பார்மாலிட்டி எதுக்கு? அதே மாதிரி எனக்கு இன்னைக்கு கனவுல கடவுள் வந்தார். அதுவும் காதல் கடவுள்! சின்னதா ஒரு ஆர்டர் போட்டார். உன் பர்த்டேக்குன்னு அந்தப் பொண்ணை முதமுதலா கூப்பிட்டிருக்கே... என்ன பரிசு தர்றதுன்னு முழிப்பா. அந்த சங்கடமே தராம... பொருளா தர்ற எந்த பரிசையும் ஏற்றுக் கொள்ளக் கூடாதுன்னுட்டார். இந்த பொக்கேயை அப்படி வச்சிடு நிவி!"

நிவேதிதா சிறுகுழப்பத்துடன் கொண்டு வந்திருந்த பொக்கேயை மேசை மீது வைத்தாள்.

"பரிசா... ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஏத்துக்கலாம். அந்தப் பொண் உன் கன்னத்துல ஒரு முத்தம் தரட்டும். அவளா இஷ்டப்பட்டா, இன்னொரு முத்தத்தையும்... அது கன்னத்துலதான் இருக்கணும்னு அவசியமில்லே... உதட்டுல கூட தரலாம்னுட்டார். நிவி... இப்ப என்ன பண்றது? எனக்கும் வெக்கமா தான் இருக்கு!" முகத்தை பரிதாபமாய் வைத்துக் கொண்டு சொன்னான்.

விஷயத்தின் வீரியம் புரிபட சில கணங்கள் தேவைப்பட.... புரிந்தபின் வெட்கத்துடன் அலறினாள் நிவி.

"ச்சீ.." என்றபடி இரு கரங்களாலும் முகத்தை பொத்திக் கொண்டாள்.

அதை விலக்கும் சாக்கில் அருகில் நெருங்கினான் சசிதரன்.

✕ ✕ ✕

தினமும்... இரவானால் லேப் டாப்பை மடியில் வைத்துக் கொண்டு, பூஸ்ட்டிற்கு இ-மெயில் அனுப்பிக் கொண்டே இருந்தாள் வர்ஷினி. ஆனால், அவன் பதில் தரவே இல்லை.

அவன் செயல், முகத்தில் அடிப்பதுப் போல் இருந்தாலும்... பிடிவாதமாய் மேலும் மேலும் பிரியம் வளர்த்தான். அவளைப் பார்த்தே ஆக வேண்டும் என்கிற ஆசை கிளைவிட்டு வளர்ந்தது.

பதினைந்து நாட்களாயிற்று. பூஸ்ட் பதிலே தரவில்லை.

துவண்டுப் போனாள். பிடிப்பின்றி இருந்தாள். சாப்பிடாமல் வெறித்தாள்.

புவனேஸ்வரி கவலைப்பட்டாள்.

"வர்ஷினி... என்னடி ஆச்சு உனக்கு? ஏன் எப்பவும் என்னவோ மாதிரி இருக்கே? உடம்பு கிடம்பு சரியில்லையா? இல்லே வேலை பார்க்கிற இடத்துல ஏதுனா பிரச்சினையா?"

"ஒண்ணுமில்லே அத்தை!"

"ஒண்ணுமில்லேன்னா... ஏன் இப்படி இருக்கே?"

".....?!"

"ஏம்ப்பா... கோகுல்... நீயாவது இவகிட்டே பேசி... என்னன்னு தெரிஞ்சுக்கக் கூடாதா?"

எங்கே... அவனைக் கண்டால்தான் ஆமைப் போல் பதுங்கி விடுகிறாளே! அவளுடன் பேச வேண்டும்... நாலு இடம் போக வேண்டும் என்ற ஆசையில்தான் ஒரு வாரம் லீவுப் போட்டு விட்டு சென்னை வந்தான். பிடி கொடுத்தும் பேசாமடந்தையாக வலம் வருபவளிடமிருந்து... ஒரே ஒரு அன்பான வார்த்தையையாவது பெற்று விட வேண்டும் என்ற நப்பாசையில் மேலும் ஒரு வாரம் லீவுப் போட்டான். பிடிகொடுக்கவில்லை.

இப்படியே இரு முறைதான் லீவுப் போட்டுவிட்டு இதற்கு மேல் போட முடியாது என்ற பட்சத்தில் பெங்களூரு போய் விட்டான்.

புறப்படுவதற்கு முன் நிவேதிதாவிற்கு போன் செய்து வருத்தப்பட்டான்.

"வர்ஷினியோட க்ளோஸ் பிரண்ட் நீங்க... மனசுல இருக்கிறதை சொல்றேனே... அவளை நான் ரொம்ப நேசிக்கிறேன். அவககூட பேசிப் பழகணும்னுதான் சென்னை வந்தேன். ஆனா, என்னைக் கண்டாலே ஒதுங்கிப் போகிறா. எப்பவும் டல்லாவே இருக்கா. எனக்குத் தெரிஞ்சு அவளுக்கு வேற லவ் அஃபேர் இருக்கிற மாதிரித் தெரியலே. பட், அப்படி இருந்தாலும் நான் அவளுக்கு சப்போர்ட் பண்ணுவேன். என் வீட்ல உள்ளவங்க மனசு நோகாம பக்குவமா நான் எடுத்துச் சொல்லுவேன். அவ மனசுல என்ன வேதனை இருக்குன்னு நீங்கதான் கண்டுபிடிக்கணும். வர்ஷினி நல்லா இருக்கணும். அவ எப்பவும் சிரிச்சுக்கிட்டே இருக்கணும். ப்ளீஸ் நிவேதிதா, அவளை சந்தோஷப்படுத்தறது உங்க பொறுப்பு!"

"ஷ்யூர்... ஷ்யூர் கோகுல். உங்கள் பக்குவமான பேச்சு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. வர்ஷினி மேல எனக்கும் அக்கறை இருக்கு. எனக்குத் தெரிஞ்சு அவ எந்த காதல் வலையிலேயும் விழலே. பொதுவா அவ கொஞ்சம் ஷை டைப்! கலகலப்பா யார்கிட்டேயும் பழக மாட்டா. அடிமனசுல அம்மாவை இழந்த ஏக்கம் நிறையவே இருக்கு. டோன்ட் வொர்ரி கோகுல். நான் அவளைப் பார்த்துக்கறேன். என்ன பிரச்சினைன்னு தெரிஞ்சுக்கறேன். ஆமா, சென்னையிலேயே ஏகப்பட்ட ஆபர் இருக்கிறப்ப... நீங்க ஏன் பெங்களூருல வொர்க் பண்ணணும்?"

"ஆமாம் மேடம். என் பேரண்ட்ஸ், மத்த சூழ்நிலைகள் கருதி... நானும் அந்த முடிவுலதான் இருக்கேன். என் ஆபீஸோட பிரான்ஞ்ச் சென்னையிலேயும் இருக்கு. இங்கே இருக்கிற நபர்ல ஒருத்தர் பெங்களூரு வர சம்மதிச்சா... என்னை நிர்வாகம் சென்னைக்கு ட்ரான்ஸ்பர் பண்ண ரெடியாயிருக்கு"

"வெல்கம்... ஆல் த பெஸ்ட்!"

"தாங்க்யூ...!"

x x x

நாட்கள் கடந்தன. டைட் ஷெட்யூலில் வர்ஷினியை சந்தித்து மனம்விட்டுப் பேச சந்தர்ப்பம் அமையவில்லை.

இதனிடையில் சரளாவின் நச்சரிப்புத் தாங்காமல் சிதரன் அம்மாவுடன்

## என் வெற்றியின் ரகசியம்!

இந்தியாவை பொருத்தவரை பெண்கள் 'கோல்ப்' என்றாலே இரினா பிரார் பெயர்தான் நினைவுக்கு வரும். இந்தியாவில் எங்கு கோல்ப் போட்டி நடந்தாலும் வென்று கோப்பையைக் கைப்பற்றிய சண்டிகாரை சேர்ந்த இந்த 25 வயது வீராங்கனை இப்போது தொழில் ரீதியான வீராங்கனை ஆகி சர்வதேச அளவில் கலக்கி வருகிறார்.

"விளையாட்டு வீராங்கனை என்றாலே கவர்ச்சியை எதிர்பார்க்கிறார்கள். இது கூடாது.

நிவேதிதாவின் வீட்டிற்கு சென்று முறைப்படி பெண் கேட்டான்.

சுபத்ரா... இப்படி திடுதிப்பென்று, "உங்கள் பெண்ணும், நானும் நேசிக்கிறோம். என் அம்மாவின் விருப்பத்தோடு உங்களிடம் பெண் கேட்க வந்திருக்கிறேன்" என்று துடிப்பான இளைஞனொருவன் கண்ணியமாய் சொல்லவும்... ஒரு கணம் ஒன்றுமே ஓடவில்லை.

'நிவேதிதா... காதலிக்கிறாளா?' அந்த புதிய செய்தி, தனக்கு இதுவரை தெரியாமல் ஒளித்து நாடகமாடிய மகளின் செயல் அந்த தாயை நிலைகுலைய செய்தது என்றாலும் சரணின் கனிவான பேச்சும், நடவடிக்கையும் அவளை சாந்தப்படுத்திற்று. சிதாரணையும் எந்த குறையும் சொல்ல முடியவில்லை. வேம்புக்காக வேண்டாமே என்று மறுக்க முடியாத சம்பந்தம். முக்கியமாக வாழப்போகிற இருவரின் இதயப் பரிமாறல்கள் ஏற்கனவே நிகழ்ந்து விட்டதே!

சுபத்ராவும் பக்குவமாகப் பேசினாள்.

"எனக்கும் உங்களைப் பிடிச்சிருக்கு. ஆனா, முக்கியமான முடிவெடுக்கிற பொறுப்பில் இருக்கிற என் கணவரோட சம்மதம் இல்லாமல் நான் எதுவும் சொல்ல இயலாது. அவரிடம் பேசி விட்டு..."

"தாராளமாய் ஆன்ட்டி! அதுதானே முறை. டைம் எடுத்துக் கொள்ளுங்கள். தகவல் சொல்லுங்கள். நல்ல பதிலாகவே இருக்கும் என்று மனப்பூர்வமாய் நம்புகிறேன்!" என்றவனின் பண்பான பேச்சு, சுபத்ராவுக்கு ரொம்பவே பிடித்துப் போனது.

x x x

# 13

"வாடி என் நல்லவளே!" வீட்டிற்குள் நுழையும் போதே காதைப் பிடித்து திருகிய அம்மாவைப் பார்த்ததுமே புரிந்துப் போனது.

'சசி சொன்னது சும்மா விளையாட்டிற்கில்லை. நிஜம்தான்.'

"இன்னைக்கு நானும் எங்கம்மாவும் உங்க வீட்டுக்குப் போய்... உங்கம்மாவை சந்திக்க உன்னை பொண்ணு கேட்டோம்... தெரியுமா நீனி?"

"யார் காதுல பூ சுத்தற? முதல்ல நம்ம லவ் மேட்டர் உங்கம்மாவுக்கேத் தெரியாது."

"அதெல்லாம் சும்மா உடான்ஸ். என் லவ்வை உன்கிட்ட சொல்றதுக்கு முன்னாடியே அம்மாகிட்டே சொல்லி பர்மிஷன் வாங்கிட்ட நல்ல பையனாக்கும்."

"நல்லா பேச கத்துக்கிட்டே... போய்... போய்யா!"

"ஓஹோ... அப்படியா? வீட்டுக்குப் போ... தெரியும். என் மாமனார்கிட்டே பேசிட்டு சொல்றேன்னு சொன்ன என் மாமியார்... கையிலே பிரம்போட உன்னை ரிசீவ் பண்ணப் போறதை!"

"இதோ பார் சசி. எனக்கு ஜென்ட்ஸை பத்தி நல்லாவேத் தெரியும். லவ் பண்றதுல மட்டும்தான் தைரியமெல்லாம். கல்யாணம்னு பேச்சை எடுத்தாலே, தன்னாலே வீட்டுக்குத் தெரிஞ்சு... தன்னாலே கல்யாணம் ஆகணும்னு நினைப்பாங்க. உன் தைரியமெல்லாம் என்கிட்டே மட்டும்தான்!"

"அப்படீங்களா? என் அம்மாவைப் பத்தி உனக்கு தெரியாதுல்ல... வீட்டுக்குப் போ... உங்கம்மாவை பத்தியும் தெரிஞ்சுக்குவே" என்று போனை கட் பண்ணினான்.

'படு பாவி... அவன் சொன்னதுபோல் வீட்டில் வந்து போட்டுக் குடுத்துட்டானா?'



கடின உழைப்பு மூலமே வெற்றி பெற முடியும். விளையாட்டு ஆர்வம் என் ரத்தத்தில் ஊறியது. வெற்றி குறித்து கனவு கண்டு அது நிறைவேற கடுமையாக உழைப்பேன். இதுதான் எனது வெற்றியின் ரகசியம்" என்று இரினா கூறினார்.

"வா... வா... என்னமா நடிச்சு என்னை ஏமாத்தியிருக்கே? வாடி உள்ளே!"

"நா... நான் நடிச்சேனா? ஏமாத்தினேனா? என்னம்மா சொல்றே?"

"திரும்ப... திரும்ப நடிக்காதே! அந்த சசிதரனும், அவங்கம்மாவும் வந்திருந்தாங்க!" மகளை நேர்ப்பார்வை பார்த்தாள் சுபத்ரா.

"யா... யாரும்மா அவங்க?"

"திரும்பப் பாரேன்... பிச்சுப்புடுவேன் பிச்சி... ஒண்ணுமே தெரியாதவ மாதிரி இத்தனை நாளும் என்கிட்டே நடிச்சேயில்லே? லவ் பண்ணி, அவனை வீட்டுக்கே அனுப்பி பொண்ணு கேக்க வச்சி..." சுபத்ராவின் குரல் நெகிழ்ந்தது. "எவ்வளவு நம்பினேன்டி உன்னை!"

"ஸாரிம்மா... ப்ளீஸ்... என்னைப் பார். லவ் பண்ணினது நிஜம். சசிதரன் ரொம்ப நல்லவர்ம்மா... நல்ல குடும்பம். ஆனால், நம்ம வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்டதெல்லாம் சத்தியமா எனக்குத் தெரியாதும்மா."

"நிஜமாவா?"

"சத்தியமான்னு சொல்றேனேம்மா!"

"சரி... சரி... நல்ல குடும்பம் மாதிரிதான் தெரியுது"

"ஆமாம்மா!"

"என்ன ஜால்ராவா?"

"ஐயோ... அப்படியெல்லாம் இல்லேம்மா!" "நான் சம்மதிச்சா மட்டும் போதாது. உங்கப்பா மனசு வைக்கணும் புரியுதா?"

"ஆமாம்மா... நீ தான் எப்படியாவது பேசி..."

"இப்ப மட்டும் என்கிட்ட எவ்ளோ நைச்சியமாய் பேசறே? ஏதாவது வேலை செய்யச் சொன்னா எவ்ளோ திமிராப் பேசுவே. இரு... இரு.... உங்கப்பாக்கிட்டே..."

"அம்மா... அம்மா... ப்ளீஸ்ம்மா.... நீ பாட்டுக்கு டாடிக்கிட்டே எதையாவது உளறி வைக்கப் போறே? இப்ப என்ன... சமைக்கணும்... அவ்ளோ தானே? காலைல என்ன டிபன் வேணும்னு சொல்லு!"

"அடிப்பாவி.... நான் கஷ்டப்படறதை பார்த்து உதவி பண்ணத் தோணலை. ஆனா, காதலுக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கே... அப்படித்தானே?"

"என்னை நீ மிரட்டறேம்மா!" செல்லமாய் சலித்துக் கொண்டாள்.

ஹாலிலிருந்த டெலிபோன் அலறியது.

"இந்நேரத்தில் யாராயிருக்கும்... போய் எடு!"

"வேற யாரு... உன் செல்லப் பிள்ளைதான்... போய் நீயே எடும்மா.... டயர்டாயிருக்கு!"

சுபத்ரா விரைந்து வந்து எடுக்குமுன் காலர் ஐ.டி.யில் நம்பரைப் பார்த்து விட்டாள். லடாக்கிலிருந்து.... அவள் கணவர் கருணாகரனிடமிருந்து.

"ஹேய்.... நிவி.... உங்கப்பாக்கிட்டேர்ந்துடி..." ஆச்சர்யமாய் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"ஹலோ.... சுபத்ரா... நான்தான்!"

"தெரியுதுங்க... நல்லாயிருக்கீங்களா?" பேசும்போதே உணர்ச்சிவசப்பட்டு கண் கலங்கினாள்.

"ரித்தீஷ் எப்படியிருக்கான்... அட்லீஸ்ட் மாசத்துக்கு ஒரு முறையாவது போய் பார்க்கறியா? நிவி வீட்டுக்கு வந்துட்டாளா?"

பொதுவாய் சில விஷயங்கள் பேசிவிட்டு, "அப்புறம்... முக்கியமான விஷயம் சுபி!"

"என்னங்க?"

"இன்னைக்கு சசிதரன் எனக்கு போன் பண்ணினான்!"

"சசிதரனா? எந்த சசிதரன்?"

அம்மா அப்படி ஆச்சர்யமாய் கேட்கவும், நிவேதிதா பயந்துப்போய் அம்மாவின் அருகில் வந்தாள்.

"நம்ம வருங்கால மாப்பிள்ளையப் பத்திதான் சொல்றேன்"

"எ... எனக்கு ஒண்ணும் புரியலீங்க."

"சுருக்கமா சொல்லிடறேன். சசிதரனும், நிவேதிதாவும் காதலிக்கறதைப் பத்தி....அவன் நிவி சம்மதம் சொன்ன மறுநாளே எனக்கு போன் பண்ணி தன்னைப் பத்தி எல்லாம் சொல்லிட்டான். அவனோட அந்த அப்ரோச் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. சென்னையிலே எனக்கு நம்பிக்கையான சில நபர்கள் மூலமா சசியைப் பத்தி விசாரிச்சேன். அருமையான பையன். நல்ல குடும்பம். அவனோட அப்பா மோகன்குமாரும் ஒரு ஆர்மி ஆபீஸர்தான். காஷ்மீர் எல்லையிலே பாகிஸ்தான் தீவிரவாதியால உயிரிழந்தவர். நேத்தே என் பர்மிஷன் வாங்கிட்டுதான்.. இன்னைக்கு நம்ம வீட்டுக்கு பெண் கேட்க வந்தார். உனக்கும் பிடிச்சிருக்கும். நாம எப்படி நினைச்சமோ, அப்படிப்பட்ட பையனையும், குடும்பத்தையும் தான் நிவி செலக்ட் பண்ணியிருக்கா. காதலிச்சிட்டாங்கறதுக்காக மறுக்கறது தப்பு. எனக்கு நாலுமாசம் கழிச்சுதான் லீவு கிடைக்கும். அப்ப வருவேன்... கல்யாணத்தை

வச்சுக்கலாம். இப்ப வர்ற பத்தாந்தேதி நாள் நல்லாயிருக்குன்னு சொன்னார். அன்னைக்கு நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம். என்ன..... ஒண்ணு... நிச்சயத்துக்கு என்னால வரமுடியாது. பரவாயில்லே... நீயிருந்து நடத்தி வை!"

அவர் இடைவிடாமல் பேச... சுபத்ராவுக்கு மூச்சு வாங்கியது.

"எனக்குத் தெரியாம இவ்ளோ விஷயம் நடந்திருக்கா?"

"நிவிக்கிட்டே போனைக் குடு!"

கொடுத்தாள்.

"டாடி ஹவ் ஆர் யூ?"

அடுத்து அவர் பேசப் பேச, ஆச்சர்யத்தாலும் நாணத்தாலும் முகம் சிவந்தது.

"தாங்க்யூ... தாங்க்யூ டாடி!"

மேலும் பத்து நிமிடம் ஏகப்பட்ட நன்றிகளைச் சொல்லிவிட்டு போனை வைத்தவள், இரு கரங்களையும் கன்னத்தில் வைத்து அழுத்தி, "ப்பா..." என்று நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

"சாதாரணமாகவே உன்னை பிடிக்கமுடியாது. இப்ப சீலிங் இடிக்கிற அளவுக்கு குதிச்சு ஆர்ப்பாட்டம் பண்ணப் போறியேங்கறதை நினைச்சாதான் கவலையா இருக்கு."

"அதெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும் சுபி..."

"என்ன... என்ன?"

"சும்மா அலட்டாம நான் சொல்றதை மட்டும் கேள்! இப்ப காபி சாப்பிடற மூட்ல இருக்கேன். சுகர் கம்மியா, ஸ்ட்ராங்கா ஒரு காபி அர்ஜண்ட்டா வேணும், குய்க்... குய்க்!"

"ஏய்... என்னடி திமிரா?"

"அது இல்லாமலா? அப்புறம்... நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ, எத்தனை மணிக்கு எந்திரிப்பியோ... அது உன் தலைவலி. நாளைக் காலைல டிபனுக்கு எனக்கு சென்னாவும், சோளாபூரியும் இருந்தாகணும்."

"என்னது? டிபனா? அதைத்தான் நீ செய்றேன்னு சொன்னியே!" சுபத்ராவின் விழிகள் அகன்றன.

"அதை அப்ப சொன்னேன்... இதை இப்ப சொல்றேன்! எங்கப்பா சம்பாதிச்சு அனுப்பறது எதுக்காக? அவரோட செல்ல மகளை செல்லமா பார்த்துக்கணும்னுதான்... புரியுதா?" இடுப்பில் கையை வைத்து உதட்டை சுழித்து அலட்சியமாய் பார்த்தாள்.

"அடி செருப்பால... உங்கப்பா கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டார்னதும் எத்தனை திமிரா பேசறே? இரு... உன்னை..." சுபத்ரா கிச்சனுக்கு சென்று ஜல்லிக்கரண்டியுடன் விரைந்து வர....

நிவேதிதா... ஒரே ஓட்டமாய் தன்னறைக்குள் ஓடி தாழிட்டுக் கொண்டாள்.

தாய் - மகளின் செல்லச் சண்டையில் கல்யாணக்களை சேர்ந்து கும்மியடிக்கத் தொடங்கியது.

× × ×

குறிப்பிட்ட தேதியில் முக்கிய உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் சசிதரன் - நிவேதிதா நிச்சயதார்த்தம் சிறப்பாக நடந்தேறியது.

காதல் பறவைகள் அவர்கள் பிஸியான வேலைகளுக்கு நடுவில்... கொஞ்சம் நேரம் கிடைத்தாலும் காதலை கொஞ்சல் பேச்சும், சீண்டலுமாய் உரம் போட்டு வளர்த்தனர்.

வேலைப்பளு... நிச்சயதார்த்தம் என்று கம்ப்யூட்டர் முன் கிட்டத்தட்ட பத்து பதினைந்து நாட்களாய் அமராத நிவேதிதா... அன்றிரவு மிஸ்டர் பூஸ்ட்டிற்கு இ-மெயில் அனுப்பினாள்.

× × ×

## 14

"ஹலோ மிஸ்டர் பூஸ்ட்! நலமா? ஸாரி... ஏக பிஸி... அதனால பதினஞ்சு நாளா தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆனா, இத்தனை நாளா, உங்ககிட்டேயிருந்தும் எனக்கு ஒரு மெயிலும் வரலையே... ஏன்?"

"என்ன ஆச்சர்யம் லோட்டஸ்? நானும் இத்தனை நாளா பிஸியாயிருந்ததால... சாட் பண்ணவே முடியலே. இன்னைக்குதான்.... நேரம் கிடைச்சு உட்கார்ந்தேன்.... உங்ககிட்டேர்ந்து தகவல். வாட் எ கிரேட் சர்ப்ரைஸ்?"

"எனக்கும் ஆச்சர்யமாகதானிருக்கு. நான் நேரடியாக தொடர்பு கொள்ள ஏகப்பட்ட நண்பர்கள் உண்டு. ஆனால், முகம் பார்த்துக் கொள்ளாமல், குரல் தெரியாமல் பழகுகிற ஒரே நட்பு உங்களோடதுதான். அதனால், என் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நல்ல நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்."

"இஸிட்? உங்களிடம் பகிர்ந்துக் கொள்ள என்னிடமும் மகிழ்ச்சியான விஷயம் இருக்கிறது. முதலில் நீங்கள். அடுத்து நான்! சொல்லுங்கள் லோட்டஸ்!"

"சமீபத்தில் எனக்கு திருமண நிச்சயதார்த்தம் நடந்தது."

"வாவ்! என்ன ஒற்றுமைப் பாருங்கள். எனக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. அதைதான் பகிர்ந்துக் கொள்ள துடித்தேன்."

"மைகாட்! என்னால் நம்பவே முடியவில்லை. போன ஜென்மத்திலும் நாம் நண்பர்களாகவே இருந்திருப்போம்.. போல! நம் இருவருக்குமே ஒரே மாதிரி ரசனை, ஒரே மாதிரி நல்ல சம்பவங்கள் என்று நடக்கின்றன அல்லவா?"

"ஆமாம்.... லோட்டஸ்! எனிவே, என் இனிய தோழியின் மணவாழ்க்கை சிறும், சிறப்புமாய் அமைய வாழ்த்துகள்"

"தாங்க்யூ... ஸேம் டு... யூ!"



''நம் நட்பின் எல்லை இத்துடன் போதும். நம் பர்ஸனல் விஷயங்களை அதிகமாய் பகிர்ந்துக் கொள்ள ஆரம்பித்தால்.. அடுத்து நம் வாழ்க்கைத் துணையை பற்றி அறிந்துக் கொள்ள பரஸ்பரம் ஆர்வம் உண்டாகும். ஆகவே, வேறு விஷயங்களைப் பற்றி விவாதிப்போம்....!''

''அகெய்ன் தாங்க்யூ மிஸ்டர் பூண்ட் உங்கள் எச்சரிக்கை உணர்விற்கு தலை வணங்குகிறேன். என் மனதில் உள்ளதை நீங்களே பிரதிபலித்து விட்டீர்கள். சரி. நம் விவாதத்திற்கு வருவோம். தமிழகத்தில் தொடர் மின்வெட்டு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?''

ஆரோக்கியமான அலசல் ஆரம்பமானது.

✕ ✕ ✕

''என்னடி. திடீர்னு கொடைக்கானல் கிளம்பறேன்னு சொல்றே? நிச்சயமானப் பொண்ணு... ஊர் எல்லையைத் தாண்டி போகக் கூடாது'' என்றாள் சுபத்ரா.

''அம்மா.... இப்படியே பழமைவாதம் பேசிட்டிருக்காதேம்மா. அப்புறம் நிவேதிதா விற்கு அம்மான்னு சொல்லிக்கறதிலே அர்த்தமே யில்லே''

''மாப்பிள்ளை வீட்ல கேட்டா என்ன சொல்லுவேன்?''



''உன் மாப்பிள்ளையோட ஆர்டர்தான் இது!"

"என்னது?"

''ஆமாம்மா... ஒரு டெலிபிலிம் பண்றதுக்காக... கிட்டத்தட்ட முப்பது பேர் கொண்ட குருப் போகிறோம். அதிலே... உன் மருமகன் சிதரனும் அடக்கம்."

''என்னடி... வயித்திலே புளியைக் கரைக்கிறே?" சுபத்ராவின் முகம் இருண்டது.

"உடனே தப்பா நினைக்கிறே பார்த்தியா? நான் உன் பொண்ணும்மா. ஜாலிக்காக வரம்பு மீறிப் பழகற அளவுக்கு நீ என்னை வளர்க்கலே. அதே மாதிரி சிரியும் சரி... என்னை விட நூறு மடங்கு இந்த விஷயத்தில் பர்பெக்ட் ஆனவர். தவிர, என் கூட வர்ஷினியையும் கூட்டிட்டுப் போறேன். இப்ப நிம்மதியா?"

"ச...ரி" என்றாள் அரைமனதாய்.

"வர... ஒரு வாரம் ஆகும். உனக்கு என்னல்லாம் பிடிக்கும்னு லிஸ்ட் போட்டு வைம்மா... வரும்போது வாங்கிட்டு வர்றேன்!"

"அந்த ஊரோட தைல வாசனை கலந்த குளிர் ரொம்ப பிடிக்கும். வாங்கிட்டு வர்றியா?"

"அட... ஜோக்கு... நீயுமா? ரொம்பத்தான் மாறிட்டே கூடி!"

"அதை விடு... ரித்திஷைப் பார்த்து ஒரு மாசமாகுது. கண்லேயே நிக்கறான். பார்க்கணும் போல இருக்கு. நான் தனியாதானே இருப்பேன். ஊட்டிக்கு ஒரு டிக்கெட் புக் பண்ணிடேன். போய்ட்டு வந்துடறேன்."

''அதெல்லாம் வேணாம். உன் மக்குப் பிள்ளையை நானும் பார்த்து நாளாயிடுச்சு. கொடைக்கானல் போய்ட்டு வந்ததும் ரெண்டு மூணு நாள் லீவு போட்டுடறேன். ரெண்டு பேருமே போய்ட்டு வந்துடலாம்!"

"நிஜமாவா சொல்றே?"

"என் தம்பி மேல சத்தியமா..."

"அவனை ஏண்டி இழுக்கறே?"

× × ×

நிவேதிதாவும், வர்ஷினியும் ஒரு ரூமில் தங்கிக் கொள்ள, சிரதரன் ஒரு ரூமிலும், உடன் வந்திருந்த ஒளிப்பதிவாளர், டெக்னீஷியன்ஸ் அத்தனை பேருக்கும், மூன்று பேருக்கு ஒரு அறை விதமாக எல்லோருக்கும் ஒரே லாட்ஜில் ரூம் போடப்பட்டிருந்தது.

பிரிட்ஜில் வைக்கப்பட்ட ஆப்பிளாய் பனியில் வியர்த்திருந்த கொடைக்கானல் பார்த்த மாத்திரத்திலேயே சிலிர்ப்பை தந்தது.

வர்ஷினியையும், சிதரனையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள்.

''உங்களை நிச்சயத்துல கூட பார்க்கலை. இப்பதான் முதல் முறையாப் பார்க்கிறேன். ஆனா, நிவி உங்களைப் பத்தி தினமும் பேசுவா. லோ... பார்க்காமலேயே எனக்கு உங்களை மூணு வருஷமாத் தெரியும்."

"இஸிட்? நிவி மனசுல நான் மூணு வருஷமா இருந்திருக்கேனா? காட்டிக்கவே இல்லை பாருங்க மகா அழுத்தம்!" சிதரன் நிவேதிதாவை நேசமும், ஆசையுமாய் பார்த்தான்.

"அடிப்பாவி... இப்படியா எல்லாத்தையும் போட்டு உடைப்பது?"

"இந்த மாதிரி ஹில் ஸ்டேஷன்ல வச்சு, இப்படிப்பட்ட சீக்ரட்டையெல்லாம் போட்டு உடைச்சா... காதலுக்கு ரொம்ப நல்லதுன்னு யாரோ சொன்னாங்க நிவி!'' என்றாள் வர்ஷினி.

''வர்ஷினி... உனக்கு இப்படியெல்லாம் பேசக்கூட தெரியுமா?"

''தாங்க்ஸ் வர்ஷினி, நீங்க சொன்னது கரெக்ட்தான். இப்ப நிவி மேல உள்ள காதலோட கிராப் ஏறிக்கிட்டே போகுது!"

"ரொம்ப வழியாதீங்க. ஆகற' வேலையைப் பாருங்க!"

அவனின் பரவசப் பார்வைக்கு அவசர அவசரமாய் தடா போட்டாள் நிவேதிதா.

× × ×

டெக்னீஷியன்ஸ் அடங்கிய வேன் பண்ணைக்காடு நோக்கி இறங்கியது.

அங்குதான் அவர்கள் தேடி வந்த நபர்கள் இருந்தனர். அதாவது, கொடைக்கானல் மலையின் பள்ளத்தாக்கில் விபத்து மூலமாகவோ, தற்கொலை மூலமாகவோ இறப்பவரின் சடலங்களை, ஆபத்தோடு போட்டிப் போட்டுக் கொண்டு மீட்டுத் தருவதற்கென்றே சிலர் அதை தொழிலாய் கொண்டுள்ளனர். சடலங்களை மீட்க சென்று சடலமாகிப் போனவர்களும் உண்டு. அவர்களை பற்றி குறும்படம் எடுக்கவே வந்திருக்கின்றனர்.

வந்த வேலை வேகமாய் நடந்தது. இடையிடையே கிடைத்த ஓய்வு நேரங்களை சுற்றிப் பார்க்க பயன்படுத்திக் கொண்டனர். அத்தனை பிஸியிலும் நிவேதிதா, வர்ஷினியை கவனிக்கத் தவறவில்லை.

அவள் தன் எதிரே இயல்பாய் இருப்பதுப் போல் காட்டிக் கொண்டாலும், தனிமையில் எதையோ நினைத்து மருகுவதும், சமயங்களில் கண்களை துடைத்துக் கொள்வதுமாய் இருந்தவளை அதிர்ச்சியுடன் பார்த்

தாள்.

அன்று... அவளை விடுவதாய் இல்லை. தங்கள் அறையில் இருந்தபோது நேரடியாக கேட்டே விட்டாள்.

"வர்ஷினி... என்ன உன் பிரச்சினை?"

"பிரச்சினையா, எனக்கா, சேச்சே?!"

"ப்ளீஸ்... நடிக்காதே! கொஞ்ச நாளாகவே நீ சரியில்லை. உனக்கு நீயே எதையோப் போட்டு கஷ்டப்படுத்திக்கிட்டிருக்கே! நான் யாரு. உன்னோட நிவி! உன்னோட ஒரே நெருங்கியத் தோழி.... என்ன பிரச்சினைன்னு சொன்னா, நான் ஹெல்ப் பண்ண மாட்டேனா?"

"..............?!"

"மதியம் கூட நீ அழுததைப் பார்த்தேன். எதையோ சொல்லி என்னை சமாதானப் படுத்திடணும்னு நினைக்காம உண்மையைச் சொல்லு!"

சில கணங்கள் கண்களை மூடித் திறந்த வர்ஷினி தோழியை நேருக்கு நேர் பார்த்தாள்.

"பூஸ்ட்!" என்றாள்.

X X X

# 15

"பூஸ்ட்?"

"ம்...!"

"என்ன உளர்றே வர்ஷினி? உன் பிரச்சினைக்கும் பூஸ்டிற்கும் என்ன சம்பந்தம்?"

திக்கித் திணறி தான் அவனை நேசிப்பதை சொன்னாள்.

திக்கென்றானது நிவேதிதாவிற்கு.

"உனக்கென்ன பைத்தியமாப் பிடிச்சிருக்கு?" என்றாள் கோபமாக.

"......?!"

"அவன் யார் என்னன்னே தெரியாம எப்படி காதல் வரும்?"

"எப்படின்னு சொல்லத் தெரியல நிவி. ஆனா, அவனோட சாட் பண்ணும்போது இனம்புரியாத பரவசம்... உண்டாகுது. இதயம் முழுக்க ஒரு பாதுகாப்பு உணர்வு."

"உன்னை என்னன்னு சொல்றது வர்ஷினி? இதயம் முழுக்க நேசமும், கண்கள் நிறைய ஏக்கத்தையும் சுமந்து வளைய வந்த கோகுலை உனக்குப் பிடிக்கலையா? அவரும், அவர் குடும்பமும் தந்த பாதுகாப்பை மறந்துட்டியா?"

"என்னை நன்றி கெட்டவளா சித்தரிக்காதே நிவி. கோகுலை பிடிக்கும். ஆனா, ஒரு அத்தை மகன் என்கிற அளவில்! அவ்வளவுதான். மத்தபடி அவரை வெறுக்கவுமில்லை.... நேசிக்கவுமில்லை. அந்த உணர்வு எனக்கு பூஸ்ட்டிடம் மட்டும்தான் உண்டானது."

"இது சரியான முடிவுன்னு நினைக்கறியா?" எரிச்சலுடன் கேட்டாள்.

"இல்லே... அது எனக்கு நல்லாவேப் புரியுது. ஆனா மனசு சம்பந்தப்பட்ட விஷயத்தில் என் மூளை சொல்லும் அறிவுரையை ஏத்துக்க முடியல."

"சரி... அவன் சைடுல யோசிச்சுப் பார்த்தியா? பூஸ்ட் கல்யாணமானவனா இருக்கலாமில்லையா?"

"நிச்சயம் ஆகியிருக்காதுன்னு என் மனசு சொல்லுது!"

"அந்த மனசு... அவனுக்கு திருமணம் நிச்சயமானதை பத்தி சொல்லலையா வர்ஷினி?"

"எ... என்ன சொல்றே?"

நிவேதிதா.. தங்களுக்குள் நிகழ்ந்த உரையாடலை சுருக்கமாய் சொன்னாள்.

இடிந்துப் போனாள் வர்ஷினி.

"படிப்புல எத்தனை கெட்டிக்காரி? அவ்வளவு புத்திசாலியா இருந்தும் இந்த விஷயத்துல முட்டாள்தனமா நடந்துக்கறதை நினைச்சாதான் ஆச்சர்யமா இருக்கு! பூஸ்ட் மேல இருக்கற ஒருதலை காதலை... இங்கேயே அழிச்சுட்டு, பழைய வர்ஷினியா ஊருக்கு வர்றே.... ஓக்கே!"

பதிலேதும் கூறாமல் எங்கோ வெறித்தபடி இருந்தவளை மேலும் தொந்தரவு செய்ய விருப்பமின்றி தனித்து விட்டாள்.

X X X

"நிவி... கோகுலுக்கு சப்போர்ட் பண்றவ. அவனுக்காக அவ சொன்னது பொய்யாக கூட இருக்கலாமில்லையா? பூஸ்ட்டிற்கு நிச்சயமாயிருந்தா... அதை என்கிட்டேயும் சொல்லியிருப்பானே... ஏன் சொல்லவில்லை?" அவளின் காதல் மனம்... பல குழப்பங்களால் துருப்பிடித்தது.

"ஹலோ வர்ஷினி... இங்கே வந்து ஏன் தனியா உட்கார்ந்திருக்கீங்க?" சசிதரனின் கம்பீரக் குரலில் கலைந்தாள்.

"சு.. சும்மாதான்!"

"தூரத்துலேயே பார்த்தேன். உங்களை மாதிரியேத் தெரிஞ்சுது... அதான் வந்தேன்"

".......?!"

"தப்பா நினைக்கலேன்னா... அஸ் எ பிரண்டா ஒண்ணு கேட்கலாமா?"

"கேளுங்க!"

"நானும் வந்ததிலேர்ந்து பார்க்கிறேன். நீங்க டல்லாவே இருக்கீங்க. தனியா... மனசுக்குள்ளே எதையோப் போட்டு குழம்பறீங்க. இந்த விஷயத்திலே... என் உதவி தேவைப்பட்டா... கண்டிப்பா செய்யறேன். என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"நா... நான் கொஞ்சம் மூடி டைப்! தனிமைய ரொம்ப விரும்புவேன்... தட்ஸால்! மத்தபடி பிரச்சினை, குழப்பம்னு எதுவுமில்லை. நம்புங்க...!"

"ப்பா... இப்பதான் நிம்மதியா இருக்கு. ஸ்வெட்டர் கூட போடாம வந்திருக்கீங்க... அங்கே பாருங்க... பனிக் கூட்டத்தை! நம்மளை நோக்கிதான் வருது.... எந்திரிச்சு வாங்க... நிவி.. உங்களை அங்கே தேடிக்கிட்டிருக்கா... ம்... கெட் அப்!"

மனசேயின்றி எழுந்தான்.

× × ×

"ஏன்... நான் அனுப்பற இ-மெயில்களுக்கு ரெஸ்பான்ஸ் தரமாட்டேங்கறீங்க? நான் உங்ககிட்டே பேசணும்... ப்ளீஸ்... பதில் தாருங்கள் காத்திருக்கிறேன்."

கொடைக்கானலிலிருந்து வந்த பின் ஐந்து நாட்களாய், தன் ஈகோ, இமேஜ், கவுரவம் எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு... மெயிலுக்கு மேல் மெயிலாய் அனுப்பினாள்.

பல பிரயத்தனங்களுக்கு இடையில் ஆறாவது நாள் பதில் தந்தான் பூஷ்ட்!

"உங்களின் இந்த கெஞ்சல் என்னை சங்கடப்படுத்துகிறது ஜான்ஸி. நட்பிற்குள் எதற்கிந்த கெஞ்சல்?"

"நோ... நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி... ஐ லவ் யூ பூஷ்ட்! நாம் கண்டிப்பாய் சந்திக்க வேண்டும். என்னை நேரில் பார்த்தால்... நிச்சயம் நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்"

"இவ்வளவு பிடிவாத குணமா உங்களுக்கு? பக்குவமில்லாமல் நடந்துக் கொள்வதைப் பார்த்தால்... உங்கள் வயது பனிரெண்டோ, பதிமூன்றோதான் இருக்கும் என்று தோன்றுகிறது. உங்களின் வயது என்ன என்பது எனக்கு அவசியமற்றது. ஒரு நபரைப் பற்றி எதுவும் தெரிந்துக் கொள்ளாமல் வருவது காதல் அல்ல... காமம்! உங்களிடம் பகிர்ந்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணியிருந்தேன்.... இப்போது சொல்கிறேன். என் வாழ்க்கையே இவள்தான் என்று உயிரைக் கொட்டி ஒரு பெண்ணை நேசிக்கிறேன். காதல் கனிந்து இரு வீட்டார் சம்மதத்துடன் நிச்சயதார்த்தமும் ஆகி விட்டது. அவள்தான் என் மனைவி! தயவு செய்து இனி நமக்குள் நட்புக் கூட தொடர வேண்டாம்... குட் பை!"

அதை படித்ததும் உலகமே தலைகீழாய் சுற்றியது அந்த பேதைப் பெண்ணிற்கு.

தன்னையோ, உலகையோ புரிந்துக் கொள்ளாத முட்டாளான வெகுளிப் பெண்ணாய்தான் வர்ஷினி இருந்திருக்கிறாள்.

ஊரும், உலகமும் கூட இரண்டாம் பட்சம், தன்னை மகளாய் சிறு குறையும் தெரியாமல் வளர்த்த அத்தையும் மாமாவும் என்ன நினைப்பார்கள் என்ற பயமின்றி... வர்ஷினி எடுத்த முடிவு... அந்த வயதானவர்களை குலைநடுங்க வைத்து விட்டது.

தன் காதல் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத வர்ஷினி அதிகமான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்று விட்டாள்.

நடுராத்திரியில்... தண்ணீர் குடிக்க சமையலறைக்கு வந்த புவனேஸ்வரி... எப்போதும் உள்தாழிடப்பட்டிருக்கும் வர்ஷினியின் அறைக்கதவு திறந்து... காற்றில் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்து.... இழுத்து சரியாக சார்த்த முயன்றவள்... மிக யதேச்சையாகத்தான்

## எங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்

இந்தியாவைப் பொருத்தவரை கிரிக்கெட்தான் பிரபலமான விளையாட்டு. ஆனால் ஆண்கள் கிரிக்கெட்டை போல் பெண்கள் கிரிக்கெட்டுக்கு வரவேற்பு இல்லை. இன்னும் சொல்லப் போனால் அதை யாரும் கண்டு கொள்வதே இல்லை.

இந்திய கிரிக்கெட் பெண்கள் அணி கேப்டன் மைதிலிராஜ் 19 வயதிலேயே பிரபலமானவர் என்பதுடன் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 214 ரன்களும் எடுத்து சாதனை படைத்தார். 2005-ம் ஆண்டு இந்தியா உலக கோப்பையை வெல்ல காரணமாக இருந்தவரும் அவர்தான்.

மைதிலி ராஜ் கூறுகையில் "ஆண்கள் கிரிக்கெட் போல் பெண்கள் கிரிக்கெட்டுக்கு வரவேற்பு இல்லை. இந்த நிலை மாற வேண்டும். எனவே பெண்கள் கிரிக்கெட்டையும் பிரபலப் படுத்த வேண்டும். கிரிக்கெட் விளையாட்டில் இளம் பெண்கள் ஆர்வம் காட்ட வேண்டும். இதற்கான முயற்சியில் நான் ஈடுபடுவேன். மற்றவர்களும் பெண்கள் கிரிக்கெட்டுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.



வர்ஷினியைப் பார்த்தான்.

கட்டிலில் அவள் படுத்திருந்த விதம் ஏதோ போல் உறுத்த... உள்ளே வந்து பார்த்தான். தலையும், வலது கையும் கட்டிலைத் தாண்டி சரிந்திருக்க....

"வர்ஷினி... வர்ஷினி...." எழுப்பினான்.

சிறு அசைவும் இல்லை.

"ஐயோ... என்னங்க...." புவனேஸ்வரி அலறிய அலறலில் வீடே கிடுகிடுத்தது.

✕ ✕ ✕

கடுமையான போராட்டங்களுக்கு பின் இரண்டு நாட்களுக்கு பின் கண் திறந்தாள் வர்ஷினி.

விஷயம் கேள்விப்பட்டு அடுத்த பிளைட்டிலேயே பறந்து வந்தான் கோகுல்.

பயத்தில்... புவனேஸ்வரியின் பிரஷர் அதிகமாகி மயக்கமாகி... அதே ஹாஸ்பிடலில் அனுமதிக்கப் பட்டாள்.

அவள் பிழைத்து வரும்வரை கோகுல் உயிர் அவனிடம் இல்லை.

அத்தனைபேர் உதடுகளிலும் தொக்கி நின்ற கேள்வி ஒன்றேதான்.

தற்கொலைக்கு போகும் அளவிற்கு வர்ஷினிக்கு என்ன பிரச்சினை?

'காதலாயிருக்குமோ?' அடுத்த சந்தேகமும் உடனடியாக எழுந்தது.

'முட்டாள்... முட்டாள் இப்படியாப் பண்ணுவாள்?' நிவேதிதா பொருமினாள்.

கோகுல் அவளிடம் வந்தான்.

"சொல்லுங்க நிவேதிதா..."

"என்ன கோகுல்?"

"வர்ஷினி ஏன் இப்படிப் பண்ணினா?"

"எ... என்னைக் கேட்டால்? முட்டாள் மாதிரி பண்ணிட்டாளேன்னு நானே டென்ஷனாயிருக்கேன். லெட்டர் ஏதாவது எழுதி வச்சிருக்காளா?"

"தேடிப் பார்த்துட்டேன்... இல்லை! ஆனா, வர்ஷினி உங்களோட க்ளோஸ் பிரண்ட். அவ மனசுல என்ன இருந்ததுன்னு உங்களுக்கு ஓரளவாவது கண்டிப்பா தெரிஞ்சிருக்கும். யார் அவன்?"

"எ... என்ன?"

"வர்ஷினி காதலிச்சாளே... அவனைப் பத்திக் கேட்கிறேன்!"

✕ ✕ ✕

## 16

நிவேதிதா... திணறினாலும் சுதாரித்துக் கொண்டாள்.

"என்ன கோகுல்... வர்ஷினியைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா? காதலுக்கும் அவளுக்கும் ரொம்ப தூரம். கொடைக்கானல்ல கூட அவ ஜாலியாதான் இருந்தா. ஆனா, அப்பப்ப... தனியே போய் உட்கார்ந்துடுவா. கேட்டா, 'இப்பல்லாம் அம்மா ஞாபகம் அடிக்கடி வருது. கனவுல வர்றாங்க... எல்லாருக்கும் அம்மா இருக்காங்க... எனக்கு மட்டும் ஏன் இல்லாமப் போனாங்க? என் மேல கொஞ்சமாவது பாசமிருந்தா... அப்பா என்னைப் பத்தி அக்கறையில்லாம இன்னொருத்தியோட ஓடிப் போயிருப்பாரா'ன்னு சதா புலம்பிகிட்டே இருந்தா. அந்த ஏக்கம்தான்... இந்தளவுக்கு கொண்டு போய் விட்டிருக்கும்னு நினைக்கிறேன். மனசளவில் அவ இன்னும் குழந்தையாதான் இருக்கிறா."

"அப்படியா?" என்றான் யோசனையாக.

அவள் சொன்னதை கோகுல் நம்பி விட்டான் என்பதை நிம்மதி படர்ந்த முகம் காட்டியது.

அடுத்த நாள்...

விவரம் கேள்விப்பட்டு சசிதரன் நிவேதிதாவுடன் ஹாஸ்பிடலுக்கு வந்தான்.

அரைகுறை மயக்கத்தில் இருந்தவளிடம் எதையும் பேசவோ, விசாரிக்கவோ முடியாததால், காரில் திரும்பும் போது நிவேதிதாவிடம் கேட்டான்.

"என்ன ஆச்சு நிவி? சூசைட் அட்டெண்ட் பண்ற அளவுக்கு வர்ஷினிக்கு என்ன ப்ரச்சினை?"

"லவ் பெய்லியர்!"

"லவ் பெய்லியரா? வர்ஷினிக்கா... ரொம்ப அமைதியா, சாதுவா இருப்பாங்களே... அவங்க லவ் பண்ணாங்களா? ஆச்சர்யமா இருக்கு!"

"இதிலே என்ன ஆச்சர்யம்? அமைதியான குணம் உள்ளவங்க காதலிக்கக் கூடாதா? ஏன் நீங்க மட்டும் என்னவாம்? என்கிட்டே ரொம்ப டீஸண்ட் ஃபெல்லோ மாதிரி நடந்துக்கறது.... பொண்ணுங்களை பார்த்தா.... அட்... எ.. டைம்... கழுத்து சுளுக்கிக்குமோன்னு பயப்படற அளவுக்கு சடார்னு திரும்பி பார்த்து ஜொள்ளு விடறது...."

''ஜொள்ளு? எவ்ளோ பெரிய மோசமான வார்த்தை? ராமனுக்கு தம்பி நான்! என்னைப் பார்த்தா... பொண்ணுங்களை சைட் அடிக்கிறவன்னு சொல்றே?"

''என்ன செய்யறது? டீஸண்டா நடந்துக்கணும்னு நானும் கண்டுக்காம விட்டுடறேன். இப்பக்கூடத்தான் ஹாஸ்பிடல்ல ரெண்டு நர்ஸை பார்த்து, பார்த்து.... சார் வழிஞ்சீங்களே...!"

"சேச்சே... நிவியைத் தவிர வேற எந்தப் பொண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காத காவியத் தலைவன் நான். சந்தேகமாயிருந்தா... ஒரே ரூம்ல என்னோட பத்து நடிகைகளை விட்டு அடைச்சுப் பார்... யாரையும் என் சுண்டு விரல் கூட தீண்டாது!"

".அட.....!"

"பட்... அவங்கல்லாம் ஒண்ணா சேர்ந்து என்னை மானபங்கப் படுத்தினா...அதுக்கு நான் பொறுப்பில்லேப்பா!"

"ஓ!" அவன் முதுகில் அடித்தாள்.

"பேச்சைப் பார்.. காமரசம் வழியுது! லவ் பண்ற வரைக்கும்... தலைநிறைய எண்ணெய் தேய்ச்சு வகிடெடுத்து சீவி... அப்பாவி மாதிரி லுக் விடறதும்.... சிக்னல் கிடைச்சதும் அக்மார்க் மாடலிங் பாய் மாதிரி ஸ்டைல் காட்டறதும்தானே உங்க மாதிரி ஜெண்ட்ஸோட பொழைப்பு? ரொம்ப மாறிட்டே சசி!"

"ச்சீச்சீ... எல்லாமே ஜஸ்ட் ஃபன்! உன் மேல உள்ள லவ்வை ஆஃப்டர் மேரேஜ் புரிஞ்சுப்பே... சரி வர்ஷினியைப் பத்தி சொல்லு... யாரை லவ் பண்ணாங்க? எதனால பெய்லியர் ஆச்சு?"

''இன்டர்நெட்ல..''

''இன்டர்நெட்ல....?'' உடல் முழுக்க சூடு பரவ... திடுக்கிட்டு அவள் பக்கம் திரும்பினான்.

வாய் வரை வந்ததை... விழுங்கினாள்.

'மை காட்.... உண்மை சொல்லி விட்டிருப்பேனே... அப்புறம் பூஸ்ட் பற்றி தெரிந்து சசி என் மீது வருத்தப்பட நிறைய வாய்ப்பிருக்கிறதே!'

''சொ... சொல்லு நிவி...''

''ஏதோ விஷயமா... ப்ரவுசிங் சென்டருக்கு போயிருக்கா... அங்கே வரப்போக இருந்த ஒரு ஆணோட பழக்கமாகி இருக்கு. இப்ப ஜாதி அது இதுன்னு காரணம் காட்டி அவாய்ட் பண்றானாம்... அதனால தான்..."

''ஓ! நீ அவன்கிட்டே பேசி சால்வ் பண்ணியிருக்கலாமே!'' என்றான் நிம்மதியாக.

''செய்யலாம்தான்.... பட், அவளோட லவ் மேட்டரைப் பத்தி வர்ஷினி என்கிட்டே அதிகமா ஷேர் பண்ணிக்கிட்டதில்லை. அதனால நானும் இன்ட்ரஸ்ட் எடுத்துக்கலே. இந்த விஷயம் கூட என்னைத் தவிர யாருக்கும் தெரியாது... நீங்களும் அவகிட்டே தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதீங்க."

"சரி நிவி!"

அடுத்து வந்த ஒரு சந்தர்ப்பத்தில் அருகில் யாருமற்ற ஒரு நேரத்தில் நிவேதிதா, வர்ஷினியை திட்டினாள்.

''முட்டாளா நீ? படிச்சவ பண்ற காரியமா இது? ஊர் பேர் தெரியாத எவனோ ஒருத்தனுக்காக, கஷ்டப்பட்டு, படிச்சு, வேலைக்கு போய் சொந்த கால்ல நிக்கற ஒருத்தி உயிரை விடத் துணிவாளா? பெத்தவங்க கூட உன்னை இப்படி வளர்த்திருக்க மாட்டாங்க. வெளியே பார்... உன் மாமாவும், அத்தையும், கோகுலும் ஹாஸ்பிடலே கதின்னு கிடக்கறதை! உன்னைப் பார்த்ததும் அத்தைக்கு உடம்பு முடியாம போய் இதே ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணி... எத்தனை சிரமம்? வயசான காலத்துல ஹாஸ்பிடலுக்கும், வீட்டுக்குமா

அலைஞ்சி... உன் மாமா அவரே சமைச்சு எடுத்துட்டு வர்றார். கோகுலைப் பார்! இடி விழுந்தமாதிரி நொறுங்கிக்கிடக்கிறார். இதுக்கு மேல என்னடி வேணும் உனக்கு? இவங்க அன்பெல்லாம் உனக்கு பெரிசாத் தெரியல. ஆனா, வேண்டாம்னு ஒதுக்கறவன்கிட்டே பாசம் பொங்கி வழியுமாம்! அசிங்கமாயில்லே உனக்கு? இது வெளில தெரிஞ்சா எத்தனை கேவலம்? கோகுலுக்கும் டவுட் வந்து கேட்டான். நான் வேறமாதிரி சொல்லி சமாளிச்சேன். நீ உளறிக் கொட்டிடப் போறே? இனிமேலாவது புத்திசாலித்தனமா நடந்துக்க..."

வர்ஷினி கண்களை மூடி... உள்ளுக்குள் மருகினாள்.

அவள் கொஞ்சம் குணமானதும் புவனேஸ்வரி வர்ஷினி பக்கத்தில் அமர்ந்து தலையை கோதிவிட்டாள்.

"ஏன்டியம்மா இப்படி பண்ணிட்டே? உன்னை அந்தக் கோலத்துல பார்த்ததும் சர்க்குலையே நடுங்கிப் போச்சு. அங்காளம்மா உன்னைக் காப்பாத்திட்டா. உனக்காக அந்த ஏழுமலையான் கிட்டேயும் வேண்டிக்கிட்டேன்... என் குழந்தைய பத்திரமா திருப்பி என்கிட்டே கொடுத்துடு... உன் சந்நிதிக்கு நடந்தே வந்து... முடிய காணிக்கையா செலுத்தறேன்னு. இப்பதான் நிம்மதியா மூச்சு விடறேன். இதோ பார்... அம்மா இல்லேன்னா என்ன... உன் அத்தை இருக்கேன்டா... நாங்க எல்லாரும் இருக்கோம்... அப்புறம் எதுக்கு ஓடிப்போன அப்பனை எல்லாம் நினைச்சு உன் உசிரை விடணும்? ஒரு நிமிஷத்துல எங்களை எல்லாம் மறந்துட்டியே ராஜாத்தி!"

"திரும்ப ஏன் பழசை ஞாபகப்படுத்தறே ...வரி.... குழந்தை ரெஸ்ட் எடுக்கட்டும்... இப்படி வா!" ராமச்சந்திரன் மனைவியை கோபித்தார்.

அவர்களை பார்க்க பார்க்க... தன் மீதே வெறுப்பாய் உணர்ந்தாள்.

கோகுல் தன் மனவாட்டத்தை மறைத்து சிறு புன்னகையுடன் வளைய வந்தவன்... இரவெல்லாம் கண்விழித்து அவளை கவனித்துக் கொண்டது... வர்ஷினியின் குற்ற உணர்ச்சியை அதிகரிக்கச் செய்தது.

அடுத்த சில நாட்களில் வர்ஷினி குணமாக, டிஸ்சார்ஜ் செய்யப்பட்டாள்.

அந்த வீட்டின் மூன்று ஆத்மாக்களும் போட்டிப் போட்டுக் கொண்டு அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினர்.

எல்லாரையும் விட கோகுலின் பணிவிடைதான் பெரிதும் சங்கடப்படுத்தியது.

இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை அவளுக்கு சிரப்பும், டேப்லெட்டும் தரவேண்டியிருந்ததால்... நள்ளிரவில் அலாரம் வைத்து எழுந்து... நேரா நேரத்திற்கு கொடுத்தான்.

வயிற்றுப்புண் ஆற... அவ்வப்போது, சாத்துக்குடி, மாதுளை, ஆப்பிள் என்று ஜூஸ் போட்டுக் கொடுத்தான்.

அவளை கவனிப்பதைத் தவிர... வேறெந்த பேச்சும் பேசவில்லை.

அவளாகத்தான் பேசினாள்.

"நா... நானே இதையெல்லாம் செஞ்சுக்கறேனே... நீங்கள் உங்கள் வேலையை..."

"இப்போதைக்கு இதைத் தவிர வேறு வேலை இல்லை வர்ஷினி. எழுந்து நின்றால்... இப்போதும் தலைசுற்றல் இருக்கிறதா?" என்றான் இயல்பாய்.

"பரவாயில்லை..."

"நாளைக்கு ஒரு செக்கப் பண்ணி விடலாம்!"

"கோ.... கோகுல்!"

"என்ன வர்ஷினி?"

"நீங்கள் எ... என்னிடம் எதையும் கேட்கவில்லையே!"

"எதைப் பற்றி?"

"நான் இப்படி சூசைட் அட்டெண்ட்..." தயங்கித் தயங்கி பேசினாள்.

"எனக்குதான் தெரியுமே வர்ஷினி!"

"தெரியுமா?!" திடுக்கிட்டாள்.

"ஆமாம் வர்ஷினி...தப்பு எங்க மேலதான்... நீ எதிர்பார்த்த அளவுக்கு நாங்க அன்பை தரலையேங்கற வருத்தம் நிறைய... உன் மனசை புரிஞ்சுக்கிட்டோம். நீ இன்னும் குழந்தைங்கறதையும்....!"

அவனை ஏறிட்டுப் பார்க்கவே கூசினாள்.

'உண்மை தெரிந்தால்... என்னைப் பற்றி என்ன நினைப்பான்?'

"நீங்க சென்னை வந்து ரொம்ப நாளாயிடுச்சே... எப்ப பெங்களூரு போகப் போறீங்க? லீவு அதிகமாப் போடக் கூடாதில்லையா?" பேச்சை மாற்றினாள்.

"நான் லீவாப் போட்டேன்?"

"பின்னே?"

"வேலையை ரிஸைன் பண்ணிட்டுல்ல வந்தேன்?"

"கோ....கு...ல்!"

X X X

## 17

"என்ன சசி... பேசணும்... வான்னு கூப்பிட்டுட்டு.... அரைமணி நேரமா அமைதியாவே இருக்கே... என்ன விஷயம் சொல்லு!" என்று கேட்டான் பாலாஜி.

டென்ஷனாய் இருந்த சசிதரன் இரு கரங்களாலும் முகத்தை அழுந்த தேய்த்துக் கொண்டான்.

"மனசு சரியில்லை பாலாஜி!"

"பார்த்தாலே தெரியுதே.. சொல்லு!"

"நான் ரொம்ப மரியாதை வச்சிருந்த லோட்டஸ் என்னை... என்னை... திட்டிட்டா..."

"உன்னையா... ஏன்?" வாய்க்கு கொண்டு போன சிவப்பு திரவம் தளும்பிய கிளாஸை மறுபடி டேபிள் மீது வைத்தான்.

"ஆமாம் பாலாஜி. இந்த ஜாஸ்மின் பத்திதான் ஏற்கனவே சொன்னேனே! அவ ப்ரபோஸ் பண்ணியதை நான் ரிஜக்ட் பண்ணினதால... சூசைட் பண்ணிக்கப் போய் கஷ்டப்பட்டு காப்பாத்தியிருக்காங்க. நான் தான் ஏதோ சொல்லி அவ மனசைக் கெடுத்து இந்த நிலைமைக்கு கொண்டு வந்தேன்னு லோட்டஸ் என்னை குற்றம் சொல்றா. நான் சொல்றதை நம்பலே... இனி உன் நட்பே வேண்டாம்னு கட் பண்ணிட்டா!"

"சே.... இதான்டா பொம்பளைங்க புத்தி. வேணும்னா தலைமேல தூக்கி வச்சி ஆடுவாளுங்க. தேவை இல்லன்னா தூக்கி கடாசிடுவாளுங்க. கொழுப்பெடுத்து அலையற ஜாஸ்மினை போய் கேட்கறதை விட்டு உன்கிட்ட எதுக்கு எகிறணும்? போதும்டா.... இந்த மாதிரி பிரண்ட்ஷிப்பே வேணாம். கல்யாணம் ஆகப் போகுது. உன் நிவேதிதாவுக்கு தெரிஞ்சா கஷ்டமாயிடும்."

"நான் யார்கிட்டேயும் தப்பாவே பழகலையே பாலாஜி. ஒன் சைட் லவ்வே தப்பு. இதிலே தற்கொலை முயற்சிங்கறது மிரட்டல்தானே? அவரவர்க்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்பே இருக்கக் கூடாதா? அந்த ஜாஸ்மின்கிட்ட... நான் ஒரு பொண்ணை காதலிக்கிறேன்னு சொன்ன பிறகும்... இப்படி ஒரு காரியம் பண்ணியிருக்கான்னா... என்னன்னு சொல்றது? அவளை நேர்ல வரவச்சு ரெண்டு அடி அடிச்சாதான் மனசு ஆறும்!"

அவ்வளவு கோபப்பட்டு சசியைப் பார்த்திராத பாலாஜி அயர்ந்துப் போனான்.

✕ ✕ ✕

"என்ன சசி டல்லாயிருக்கீங்க?"

"நத்திங்... வொர்க் லோடு, டி..ஆர்.பி. ரேட்டிங் தர்ற டென்ஷன்.... தட்ஸால்!"

"அது எப்பவும் இருக்கிற தலைவலி. பட், இப்ப கொஞ்ச நாளா உங்க முகத்துல வழக்கமான புன்னகை மிஸ்ஸிங்... என்ன பிரச்சினை சசி... என்கிட்ட சொல்லக் கூடாதா?"

நிவேதிதா இதமாய் கேட்டதே ஆறுதலாய் இருந்தது.

'ஆனால்... சொல்லக் கூடிய விஷயமா அது?'

"இல்லடா... நிஜமாகவே... ஆபீஸ் டென்ஷன் மட்டும்தான். ஆனா, நீ இப்படி அன்பா, அக்கறையா கேட்கறது ரொம்ப பிடிச்சிருக்கு. சீக்கிரம் கல்யாணமாகி... நீ எப்பவும் என் பக்கத்திலேயே இருக்கணும்ங்கற ஏக்கம் அதிகமாயிடுச்சி!"

## ஆளை ஆளைப் பார்க்காதே!

ரஷிய டென்னிஸ் வீராங்கனை அன்னகோர்னிகா பற்றி அறியாத விளையாட்டு ரசிகர்கள் இருக்க முடியாது. அதிரடி ஆட்டத்தால் மட்டுமல்ல அழகாலும் அனைவரையும் கவர்ந்தவர் அவர்.

இப்போது அவரைப் போலவே ஒரு அழகுப்புயல் ரஷியாவில் இருந்து புறப்பட்டு இருக்கிறது. ஆனால் இவர் டென்னிஸ் வீராங்கனையல்ல 'செஸ்' வீராங்கனை. அவரது பெயர் அலெக்சாண்ட்ரியா கோஸ்டெனிக்.

1984-ம் ஆண்டு ஏப்ரல் 23-ந் தேதி பிறந்த இந்த 24 வயது வீராங்கனை 14 வயதிலேயே கிராண்ட்மாஸ்டர் பட்டம் வென்றவர். இப்போது உலக பெண்கள் செஸ் சாம்பியனாக முடி சூடி இருக்கும் இவர் ரசிகர்களை சுண்டி இழுக்கும் கவர்ச்சி அழகியும் ஆவார். எனவே இவரது ஆட்டத்தை பார்ப்பதைவிட இவரது அழகு

நிவேதிதா அவனையே காதலுடன் பார்த்தாள்.

"சரியால மனசுல இருக்கறதை சொல்ல முடியுது. ஆனா, நீயியால சொல்ல முடியலை... என்னா... அவ...மான முன்னப் பொண்ணு!"

"அப்ப... என்னை... உன்னை என்னப் பண்றேன் பார்!"

நிவேதிதாவை விரட்டிக் கொண்டு ஓடினான் சிதரன்.

இருள் படர்ந்திருந்த கடற்கரையில், இவர்களின் காதல் விளையாட்டை ரசித்தபடி கைகொட்டி சிரித்தன அலைகள்.

× × ×

**கோ**குலின் பணிவிடைகளைக் கண்டு மலைத்துப் போனாள் வர்ஷினி.

அவன் படிப்பிற்கும், கம்பீரத்திற்கும், உத்தியோகத்திற்கும் அவன் செய்கின்ற பணிகள் எந்த ஆணுமே செய்யாதது.

புவனேஸ்வரி உடம்பிற்கு முடியாமல் பலம் குன்றி இருந்தாள். வர்ஷினி ஒரு பக்கம். ஆகவே, அந்த வீட்டின் இரண்டு ஆண்கள்தான் சமையல் உட்பட எல்லா பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ராமச்சந்திரன் காய்கறி வாங்கித் தருவது, நறுக்கித் தருவது என்று ஒத்தாசையாக இருப்பார். கோகுல் காலையில் எழுந்ததும் அம்மாவுக்கு ஓட்ஸ் தயாரித்து கொடுத்து விட்டு, அனைவருக்கும் காபி போடுவான்.

அன்றும்... ஓட்ஸ் கஞ்சியை அம்மாவிடம் கொடுத்து விட்டு காபி போட முற்பட... "கொஞ்சம் நகருங்க..." என்றபடி வந்தாள் வர்ஷினி.

''அட.... இன்னைக்கென்ன சீக்கிரமே எந்திரிச்சிட்டே?" என்றவன் அவளை கனிவுடன் ஏறிட்டான்.

மருந்து மாத்திரைகளால் களைத்து, வெளிறிப் போயிருந்தது முகம்.

"இப்ப எனக்கு எந்த சோர்வும் இல்லை கோகுல். பழையபடி தெம்பாதான் இருக்கேன்!"

"வெரிகுட்... வெரிகுட்!"

"நான் காபி போடறேன்..."

"நீயா... நோ... நோ... ரெஸ்ட் எடு!"

"என்னை ஒரேயடியா பேஷண்ட்டாவே ஆக்கிடாதீங்க. இனி நீங்களும் சரி, மாமாவும் சரி... கிச்சன் பக்கம் எட்டிக் கூட பார்க்கக் கூடாது"

"ஏன்?"

''அதான் நான் இருக்கேனே...!"

"என்ன வர்ஷினி?"

''ப்ச்... சொன்னாக் கேளுங்க.... ப்ளீஸ்!"

செல்லமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு வெளியே சென்றாள். அதே சமயம் அவளின் மாற்றம் கோகுலுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது.

இந்தளவுக்கு கூட இதற்கு முன்பு வர்ஷினி அவனிடம் பேசியதில்லையே!

காபி மட்டுமல்ல, டிபன், சாப்பாடு என்று சமைத்தாள்.

வேலையற்ற நேரங்களில் கேரம், செஸ் என அவனுக்கு பிடித்த விளையாட்டுகளில் அவள் ஈடுகொடுக்க...

கவர்ச்சியை காணவே ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

"என் அழகை கண்டு ரசித்தால் மட்டும் போதாது. ஆட்டத்தை பாராட்டு தெரிவிக்க வேண்டும்" என்று ரசிகர்களுக்கு இவர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.



அந்த மாற்றம் வானுயர பறக்க வைத்தது.

வர்ஷினிக்கே அந்த மாற்றம் புரிந்தது. தன்னை மீறி தான் இயல்பாய் கோகுலிடம் பேசுவது, பழகுவது... அது தன் மனதிற்கு பெருத்த நிம்மதி தருவதையும் உணர்ந்தாள்.

வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவானது. புவனேஸ்வரி தேறி எழுந்தாள்.

கோகுலுக்கு சென்னையிலேயே மிகப் பெரிய நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அதன் தலைமை அலுவலகம் மும்பையில் இருந்தது. அங்கு சில ஃபார்மாலிட்டீஸ் முடிக்க வேண்டி இருந்ததால் அவன் உடனே மும்பை செல்ல வேண்டியிருந்தது.

கோகுல் சென்ற பின்... அவனில்லாத வீடு வெறுமையை உணர வைத்தது. வெறுமை வீட்டில் மட்டுமல்ல... வர்ஷினியின் மனசிலும் தான்!

'எப்பேர்ப்பட்ட மனிதன்? அவனை எப்படியெல்லாம் உதாசினப்படுத்தியிருக்கேன்? ஆனால், பதிலுக்கு அவன் காட்டியதெல்லாம் அன்பை மட்டும் தானே? ஏன்? அவன் மனதில் நானிருக்கிறேன். நான் என்ன செய்தாலும் பொறுத்துப் போகிறானே.... ஏன்? அவனால் என்னை வெறுக்க முடியவில்லை... மறக்க முடியவில்லை என்று தானே?

அப்படியானால்... முகம் தெரியாத பூஸ்ட்... உயிருக்குயிராய் ஒரு பெண்ணை காதலிக்கும் போது... என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தது எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம்? முதலில்... இதை காதல் என்று சொல்வதே அபத்தம் அல்லவா? எதைக் கண்டு இம்ப்ரஸ் ஆனேன்?

புத்திசாலி என்பதாலா?

சமூக விஷயங்களை அலசும் திறமையாலா?

பெண்தானே என்று வழியாமல் பழகும் தன்மையா?

இதெல்லாமே கோகுலிடம் அளவுக்கதிக மாக இருப்பதை ஏன் உணரவில்லை?

என் திமிர்... வேறென்ன சொல்ல? அவனுக்காக உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றேனே... நானா இப்படி?

அந்த பூஸ்ட்தான் என்னை என்ன நினைப்பான்? ஒரு மாதிரியான பெண் என்று எடை போட்டிருப்பானோ?

நோ... கூடாது!

அவனிடம்... நான் நடந்துக் கொண்ட விதத்திற்காக மன்னிப்பு கேட்டுவிட்டு... அந்த நட்பிற்கு மூடு விழா நடத்தி விட வேண்டும்.'

தீர்மானித்தாள்.

கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்கு பிறகு... கம்ப்யூட்டர் முன் அமர்ந்தாள்.

தன் ஐ.டி.யை ஓபன் பண்ணியவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

இருபது நாட்களுக்கு முன்பே பூஸ்ட்டி டமிருந்து அவளுக்கு ஒரு இ-மெயில் வந்திருந்தது.

"இனிய தோழி...!

நலம் பெற பிரார்த்திக்கிறேன். லோட்டஸ் மூலமாக சில விவரங்கள் அறிந்தேன். ஏன் தோழி... எதற்கிந்த மோசமான முடிவை தேர்ந்தெடுத்தீர்கள்! இதில் நானெங்கே தவறு செய்தேன்?

தோழி.... உங்களுக்கு என் நிலையை உணர்த்துவது அவசியம். ஒரு விஷயத்தில் உறுதியாய் இருந்த நான் உங்களுக்காக அதை தளர்த்தப் போகிறேன். உங்களை சந்திக்கப் போகிறேன். ஆம்... முதலும் கடைசியுமாக சந்திக்கப் போகிறேன். சமீபத்தில் நிச்சய மான ஆல்பத்துடன் என் நிலையை புரிய வைக்கிறேன்.

உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க் கிறேன்."

ஜிவ்வென்று ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது வர்ஷினிக்கு.

'என்னைப் பார்த்தால் மனசு மாறி விட மாட்டானா?' கண்ணிமைக்கும் நேரத்தில் சபலம் எட்டிப் பார்த்தது.

அடுத்த கணமே... 'சே' என்று தன்னை நொந்துக் கொண்டாள்.

✕ ✕ ✕

18

'எனக்காக வேலையைக் கூட தூக்கி எறிந்துவிட்டு ஓடி வந்த கோகுலின் நேசத்திற்கு முன் யார் தான்... எதுதான் சமமாக முடியும்? இந்த தற்கொலை முயற்சிக் கூட நன்மைக்கு தான். இல்லாவிட்டால்... என் கோகுலைப் பற்றி புரிந்துக் கொள்ளாமலே இருந்திருப்பேன்.

என் தவறை, என் சபலத்தை, என் அவசரபுத்தியை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ பூஸ்ட்டிற்கு மன உளைச்சலைத் தந்திருக்கிறேன். அவனிடம் மனப்பூர்வமாய் மன்னிப்பு கேட்பது தான் அவன் காட்டிய உண்மையான

நடப்பிற்கு மரியாதை. அதே சமயம் இப்போது என் மனதில் கோகுலைத் தவிர வேறெந்த நினைப்பும் இல்லை என்பதை அவனிடம் உணர்த்த வேண்டும்.' வர்ஷினி தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

சந்திக்கும் நாளும் வந்தது.

வர்ஷினி.... கோகுல் ஆசையாய் வாங்கித் தந்த உடைகளில் இளநீலநிற சுடிதாரை அணிந்துக் கொண்டாள். மறக்காமல் ஹேண்ட் பேகில் கோகுலின் போட்டோவை எடுத்து வைத்துக் கொண்டாள்.

நகரத்தின் பிரசித்திப் பெற்ற ஓட்டலை மீட்டிங் ஸ்பாட்டாக பூஸ்ட் தேர்ந்தெடுத்திருந்தான்.

அவள் தன்னை அடையாளம் தெரிந்துக் கொள்வதற்காக சில விஷயங்களையும் தெரியப்படுத்தியிருந்தான்.

ஐந்தாம் எண் மேஜையை ரிசர்வ் செய்திருக்கிறான். கறுப்பு பேண்ட், வெள்ளை உடை. பிரெஞ்சு தாடி. ஆனால் வர்ஷினி, அவன் கேட்டும் கூட தன்னை அடையாளம் காட்டும் விஷயங்களை கூற மறுத்து விட்டாள்.

அவனை அறிந்து... தானே அருகில் வருவதாகக் கூறினாள்.

தன் டூவீலரை ஓட்டலின் வாசலில் நிறுத்தியவளுக்கு எந்த படபடப்போ குறுகுறுப்போ அவளுள் எள்ளளவும் வராதது... அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது.

வண்டியை பூட்டிவிட்டு சாவியை பேகில் போட்ட போதுதான் பார்த்தாள்.

அருகில் சாம்பல் நிற சான்ட்ரோ நிறுத்தப்பட்டிருந்தது.

சந்தேகத்துடன் முன்புறம் சென்றுப் பார்த்தாள். நினைத்ததுப் போலவே அது சசிதரனின் கார்தான்.

'இங்கே எப்படி? நிவேதிதா கூட வந்திருப்பாளோ? இப்போது என்ன செய்வது? இவர்கள் முன்னிலையில் பூஸ்ட்டை எப்படி சந்திப்பது? நிவேதிதாவையும் அவன் சந்திக்க வேண்டி வருமே! சசி மட்டுமே வந்திருந்தால் கூட எப்படியாவது சமாளித்து விடலாம். நிவிக்கு போன் பண்ணிப் பார்ப்போம். அவளும் உள்ளே இருந்தால் வந்த வழியே அப்படியே போய்விட வேண்டியதுதான்.'

நிவிக்கு போன் பண்ணினாள். அவள் புரோகிராம் விஷயமாக ஸ்டுடியோவில் இருப்பதை அறிந்த பின்தான் நிம்மதியாய் இருந்தது.

'அப்படியானால் சசி மட்டும்தான் வந்திருக்கிறான். அல்லது கூட யாராவது நண்பரும் வந்திருக்கலாம். உள்ளே அவன் என்னை கவனித்து விட்டால் இரண்டு வார்த்தை பேசலாம். கவனிக்காவிட்டால் கண்டுக் கொள்ளாமல் இருந்து விடலாம்.'

உள்ளேச் சென்றாள்.

ராஜ உடை அணிந்த பணியாளர் அவளை வரவேற்று கதவைத் திறந்து உள்ளே அனுப்பினார்.

பெரிய ஹால்! கிட்டத்தட்ட ஐம்பது மேஜைகள் வரை இருக்கும். சிலவற்றை தவிர்த்து, மற்ற நாற்காலிகளில் ஆட்கள் நிரம்பியிருந்தனர். உயர்தட்டு மக்களும், பிஸினஸ்மேன்களும் அதிகம்பேர் நாடிவரும் ஓட்டல்!

சோகையாய் மஞ்சள் வெயிலை துப்பிக் கொண்டிருந்தன கொத்து கொத்தாய் விளக்குகள். ஒரு ஓரமாய் இளைஞனொருவன் கிடார் வாசித்துக் கொண்டிருக்க... காதை கிழிக்காத ஒலியில் ட்ரம்ஸ் வாசித்துக் கொண்டிருந்தான் மற்றவன்.

வர்ஷினி மெல்ல நோட்டம் விட்டாள்.

சசிதரன் இருப்பதே தெரியவில்லை.

'ஐந்தாம் எண் மேஜை எங்கிருக்கிறது?' என்று டை கட்டிய இளைஞனிடம் விசாரித்தாள். அவன் கைகாட்டிய திசையில், நடுவில் சிறு தடுப்பு வைக்கப்பட்டு வலது புறமாய் தனித்திருந்தது.

இங்கிருந்து பார்த்தபோது... அமர்ந்திருந்த நபரின் தலை மட்டுமே தெரிந்தது.

'பூ... ஸ்... ட்?'

வர்ஷினி... அந்த மேஜை நோக்கிச் சென்றாள்.

அவனின் அகன்ற முதுகும், திரண்ட புஜங்களும், வெள்ளை சட்டையை மீறி திமிறித் தெரிந்தன.

"ஹலோ... எக்ஸ்க்யூஸ்மீ..." என்றாள்.

திரும்பியவன், வியந்து, புருவம் மேலேற,

"வ...ர்...ஷி...னி?" என்றான் எதிர்பாராத சசிதரன்.

வர்ஷினிக்கோ, அவனை விட அதிர்ச்சி.

"ஹாய்... வர்ஷினி... நான் எதிர்பார்க்கவே இல்லை. கூட... நிவியும் வந்திருக்காளா என்ன?" என்றான் சிறு பதைப்புடன்.

"இ... இல்லை... இந்த ஓட்டல் வழியா க்ராஸ் பண்ணும்போது... வாசல்ல... உ... உங்க கார் பார்த்தேன். நிவியும் வந்திருப்பாள்னு நினைச்சுதான் உள்ளே... வந்தேன்...!"

"ஓ!" என்றான் சிறு நிம்மதியுடன்.



அப்போது தான் கவனித்தாள்.

வெள்ளை சட்டை, கறுப்பு பேண்ட், பிரெஞ்சு தாடி, மேஜைமேல் ஆல்பம்.

'சரிதானா பூஸ்ட்? மைகாட்!'

"சிட்டவுன் வர்ஷினி... என்ன சாப்பிடறீங்க?"

"நோ... நோ... நான் சாப்பிட்டாச்சு. சும்மா பார்க்கத்தான் வந்தேன். நீங்கதான் யாருக்காகவோ வெய்ட் பண்ணிட்டிருக்கீங்க... நான் கிளம்பறேன்."

"அ... ஆமாம்... என் பிரண்டும், அவன் சிஸ்டரும் வர்றேன்னு சொல்லியிருந்தாங்க. நிவியை அவங்க பார்க்கணும்னு சொன்னதால எங்க நிச்சயதார்த்த ஆல்பத்தை எடுத்துட்டு வந்தேன். நீங்க பார்த்திட்டீங்களா வர்ஷினி?" அவன் அவளிடம் பேசினாலும் கண்கள் வாசல் நோக்கி அலைபாய்ந்தன.

'சந்தேகமே இல்லை. இவன்தான் பூஸ்ட்!'

"ம்... நான் அப்பவே பார்த்தாச்சு. நேரமாச்சு ஆபீஸ் போகணும்... நான் புறப்படறேன்"

"ஓக்கே... ஸீ யூ லேட்டர்!"

"டைட..."

வர்ஷினி எப்படி வெளியில் வந்தாள், வண்டியில் ஏறினாள், வீட்டிற்கு வந்தாள் என்று அவளுக்கேத் தெரியவில்லை.

கட்டிலில் வந்து தொப்பென்று விழுந்தாள்.

'ஏம்மா சீக்கிரம் வந்துட்டே?' என்று கேட்ட பெரியவர்களிடம் 'தலைவலி' என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தாள்.

அவள் வாழ்நாளில் சந்தித்திராத மிகப் பெரிய அதிர்ச்சியல்லவா இது?

'மைகாட்! சசியிடம் அவசரப்பட்டு உளற வில்லை.' 'ஹலோ பூஸ்ட்!' என்று அழைத்திருந்தால்... எத்தனை அவமானம்?

சசிதரனுக்கும் சாட்டிங் ஆர்வம் இருக்கிறது என்பது ஆச்சர்யமான விஷயமல்ல. ஆனால், அவன் நட்பு விஷயத்தில் கடைசி வரை நேர்மையாகத்தானே இருந்தான்? நிவிதான்



லோட்டஸ் என்று அவனுக்குத் தெரியாது. நான்தான் ஜாஸ்மின் என்று தெரிந்திருந்தால்... என்ன நினைத்திருப்பான்?

விடாப்பிடியாக காதலிக்கச் சொல்லி வற்புறுத்திய என் அறிவீனத்தை என்னவென்று சொல்ல?

பூஸ்ட் என்ற கேரக்டர் பற்றி நிவி மறைத்ததுப் போல, லோட்டஸ் என்ற கேரக்டரை அவன் நிவியிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறான்.

இப்போது என் மூலம் சசிக்கு தெரிய வந்திருந்தால்... என்னென்னவோ நடக்க வாய்ப்பிருக்கிறதே! விரைவில் திருமண மாக உள்ள அவர்களுக்குள் ஒளிவுமறைவே இருக்கக் கூடாது என்பதும், இந்த விஷயத்தை மறைத்ததையும் காரணம் காட்டி எவ்வளவு பிரச்சினை வந்திருக்கும்? சசி, நிவியை வெறுக்கவும் காரணமாக அல்லவா அமைந்திருக்கும்?

நான் பூஸ்ட் மேல் கொண்ட காதலுக்கு நிவி என்னை வெறுக்கவோ, நட்பை துண்டிக்கவோ ஏகப்பட்ட வாய்ப்பிருக்கிறதே!

கடவுளே... ஒரு நொடி... நான் சுதாரித்துக் கொள்ளாவிட்டால்... மூன்று பேரின் நிம்மதியும் போயிருக்குமே!

இதில் ஒரே ஒரு சந்தோஷம். சசி நிவியின் மேல் வைத்திருக்கிற மாறாத அன்பு! இதுவே வேறொருவனாய் இருந்தால்.... என் காதலை பயன்படுத்தி, சீரழித்து ஏமாற்றி இருப்பான். ஆனால் சசி, இதமாய் தன் காதலை, அதன் உறுதியை எடுத்துக் கூறினானே! அதுபோதும்! என் நிவேதிதா... நிம்மதியாய், சந்தோஷமாய் இருப்பாள்.

முதலில் நிவியை சந்திக்க வேண்டும்.'

X X X

**19**

"**எ**ன்னடி ஆச்சர்ய மாயிருக்கு... திடீர்னு சர்ப்ரைஸா... வீட்டுக்கு வந்திருக்கே?" நிவேதிதா வர்ஷினியை ஆச்சர் யமும் சந்தோஷமுமாய் வரவேற்றாள்.

"சன்டே... வீட்ல போரடிச்சுது. சரி... என் நிவிக்குட்டிக்கு கல்யாண நாள் நெருங்குதே... கூடமாட கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாம்னு வந்தேன்!"

"தாங்க்ஸ் வர்ஷினி... நேத்து நைட்டுதான்.... இன்விடேஷன் பிரிண்டாகி வந்தது. கவர்ல மடிச்சுப் போட்டுக்கிட்டிருந்தேன். நல்ல வேளை... நீயும் வந்தே...!"

வர்ஷினியும், நிவேதிதாவும் எதிரெதிரே அமர்ந்து இன்விடேஷனை கவருக்குள் போட்டனர்.

"வர்ஷினி.. எப்பம்மா வந்தே?" என்றாள் அங்கு வந்த சுபத்ரா.

"இப்பதான் ஆன்ட்டி!"

"அம்மா... வர்ஷினிக்கு இன்னைக்கு லன்ச், டிபன், டின்னர் எல்லாம் நம்ம வீட்லதான்... வெரைட்டியா பண்ணு... குய்க்...!"

"ஏய்... என்ன இது... ஆன்ட்டிய போய் விரட்டிக்கிட்டு...?" அதட்டினாள்.

"நீயே பார்க்கிறேயில்லே... இவகிட்டே மாட்டிக்கிட்டு நான் படறபாடு இருக்கே... ப்பா...!"

"வர்ஷினி... உண்மைய சொல்லட்டுமா? எங்கம்மா நீ வந்தா தான்... அவங்களுக்கும் நல்லா சமைக்க வரும்னே எனக்குத் தெரியும். கொஞ்சம் நல்ல சாப்பாடு சாப்பிடுவேன்!" என்றாள் பரிதாபமாய் முகத்தை வைத்துக்

## கொய்யாப்பழ சப்ஜி

**தேவையான பொருட்கள்:**

கொய்யாப்பழம் (பழுக்காத செங்காய்) - 2. வெங்காயம் - 1. தக்காளி - 2. பூண்டு - 4 பல். சீரகம் - ½ டீஸ்பூன். பச்சை மிளகாய் - 4. எண்ணெய் - 2 டீஸ்பூன். உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

கொய்யாப்பழத்தை கழுவி பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். வெங்காயம். பூண்டு. மிளகாயை அரைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பில் எண்ணெய் விட்டு காய்ந்தவுடன் சீரகம் தாளித்து. அரைத்த விழுதைப் போட்டு வதக்கி. கொய்யாப் பழத்தை சேர்த்து வதக்க வேண்டும். பிறகு நறுக்கிய தக்காளி சேர்த்து சிறிது வதக்கி உப்பு சேர்த்து. ஒரு கப் தண்ணீர் விட்டு நன்றாக கொதி வந்தவுடன் இறக்கி பரிமாற வேண்டும்.

இது சப்பாத்தி. அடை ஆகியவற்றிற்கு தொட்டுக் கொள்ள மிகவும் நன்றாக இருக்கும். சர்க்கரைவியாதி உள்ளவர்களும் இதை சாப்பிடலாம்.

**- ஸ்ரீகாந்தி ஜெயக்குமார். காஞ்சிபுரம்.**

கொண்டு.

"ஆடுடி... இன்னும் எத்தனை நாளைக்கு ஆடப்போறே? மாமியார் வீட்டுக்கு போனாதான் தெரியும் இந்த சுபத்ராவோட அருமை என்னன்னு?"

"அங்கே எனக்கென்ன குறைச்சல்? உன்னை மாதிரி என் மாமியார் விரட்டி விரட்டி வேலை வாங்க மாட்டாங்க... அவங்க சமையலோட கம்பேர் பண்ணினா.. உன் சமையல் ஒண்ணுமே இல்லே..."

"பாரு வர்ஷினி... இப்பவே புருஷன் வீட்டுக்கு ஜால்ரா போடறதை!"

"சரி... வள வளன்னு பேசிட்டு நிக்காம சூப்பரா ரெண்டு டீ போட்டுக் கொண்டு வா..."

"நிமிருடி!" சுபத்ரா கிச்சனிற்குள் புகுந்துக் கொண்டாள்.

"என்ன நிவி... எல்லாத்துக்கும் ஒரு அளவு இல்லே? உன் வார்த்தைகள் கண்டிப்பா அவங்க மனசை காயப்படுத்தும்... ஏன் இப்படிப் பேசறே?"

"தெரிஞ்சேதான் பேசறேன் வர்ஷினி. ரித்தீஷ் குட்டியிலே அப்பா லடாக்ல. இங்கே நான் மட்டும் தான் அவங்களுக்கு. இருபது நாள்ல கல்யாணம். என்னைப் பிரிய போறதை நினைச்சு அம்மா தனிமையிலே கண்ணீர் விடறதை பலமுறை பார்த்திருக்கேன். எனக்கு மட்டும் என்ன வர்ஷினி? அம்மா தானே எல்லாம்? நானும் உருகி, மருகி அழுதுக்கிட்டிருந்தா அம்மா உடைஞ்சுப் போய்டுவாங்க. நான் உன்னை விட்டுப் பிரியறதிலே எனக்கு எந்த வருத்தமும் இல்லேன்னு காட்டிக்கறதுக்காக நடிக்கிறேன் அவ்வளவுதான். அப்ப... என்னைப் பிரியறதால உண்டாகிற வேதனை கண்டிப்பா கொஞ்சமாவது குறையும்னு நம்பறேன்!"

வர்ஷினி தோழியின் தோளில் ஆறுதலாய் தட்டிக் கொடுத்தாள்.

ஆம் பெண்களுக்கு ஏற்படுகிற, பெண்களால் மட்டுமே உணரப்படுகிற வலி!

"அப்பா எப்ப வர்றார் நிவி!" பேச்சை மாற்றினாள்.

"இன்னும் அஞ்சு நாள்ல!"

"___?"

"கோகுல் எப்படியிருக்கார்?"

"ம்___!" என்றாள் வெட்கச் சிரிப்புடன்.

"வாவ்... கோகுல் உன் மனசுக்குள்ளே வந்தாச்சுன்னு சொல்லு!"

"எப்பவோ...!"

"எப்பவோவா.... கேட்கவே சந்தோஷமாயிருக்கு. ஆமாம்... என்னமோ உளறிக்கிட்டிருந்தியே... பூஸ்ட்டை மீட் பண்ணப் போறேன்... ஸாரி கேட்கப் போறேன்னு... பார்த்தியா?"

"இ... இல்லே!"

"வெரிகுட்... நீ அப்படி சொன்னதும் எனக்கு எவ்ளோ கோபம் வந்தது தெரியுமா? இந்தப் பொண்ணு ஏன் தப்புக்கு மேல தப்பா பண்ணுதுன்னு?"

"நானும் அப்புறமா யோசிச்சேன்... நான் முட்டாள்தனமா நடந்து எல்லார் மனசையும் புண்படுத்தி இருக்கேன். கோகுல் மாதிரி ஒரு மனுஷனைப் பார்க்கறது அபூர்வம். அவருக்குத் தெரியாம இனி எந்த விஷயத்தையும் பண்ணக் கூடாதுங்கறதுதான்... நான் அவர் அன்புக்கு தர்ற மரியாதை! பூஸ்ட் இனி என் வாழ்க்கையில் எப்போதும் வேண்டாம்னு முடிவுப் பண்ணிட்டேன். கடைசியா... என் தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டுட்டு, இனி எப்பவுமே நாம சந்திக்க வேண்டாம், நட்பும் தொடர வேண்டாம்னு குட்பை சொல்லி இ-மெயில் அனுப்பிட்டேன்."

நிவேதிதா சட்டென அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''தாங்க்ஸ் வர்ஷினி... தெரிஞ்சோ, தெரியாமலோ இப்ப நீயும் என் கண்ணைத் திறந்துட்டே..."

"நானா?"

"ஆமாம்... இப்ப சொன்னியே... கோகுலுக்குத் தெரியாம இனி எந்த விஷயத்தையும் பண்ணக் கூடாதுங்கறதுதான் நான் அவர் அன்புக்கு தர்ற மரியாதைன்னு... அப்ப நானும் சசிக்கு தெரியாம இப்படியொரு பிரண்ட்ஷிப்பை உண்டாக்கினது தப்பு தானே? இனி இந்த மாதிரி நட்பெல்லாம் கூடாது வர்ஷினி. நல்ல நட்போ, கெட்ட நட்போ... நம்மள்ல சரிபாதின்னு சொல்லிக்கற ஆத்மாகிட்டே எதையும் மறைக்கக் கூடாது."

வர்ஷினி நிம்மதியாய் மூச்சுவிட்டாள்.

அவள் வந்த வேலை முடிந்து விட்டது.

X X X

நகரின் பிரம்மாண்ட திருமண மண்டபம்.

அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், நடிகர், நடிகைகள், சேனலில் பணிபுரியும் ஊழியர்கள், நண்பர்கள், உறவினர்கள் நிறைந்திருந்தனர்.

நிவேதிதாவின் அப்பா கர்னல் கருணாகரன், மிடுக்குடன், வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்.

சரளாவும், சுபத்ராவும் தேனீக்கள் போல்

சுறுசுறுப்பாய் வளைய வந்தனர்.

ஐயர் மந்திரம் சொல்ல... கெட்டிமேளம் கொட்ட சசிதரன், நிவேதிதாவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான்.

அட்சதை... நாலாபக்கமிருந்தும் மழையாய் பொழிந்தது.

ஒரு கணம் பழையவைகளை எண்ணிப் பார்த்த வர்ஷினியின் உடம்பு பயத்தில் நடுங்கி அடங்கியது.

'நோ... மற.... இப்போதுதான் எல்லாம் சுபமாக நடந்து விட்டதே!'

விழுந்த அட்சதைகளில் ஏதோ ஒன்று வர்ஷினியின் இடது கண்ணில் விழ... உறுத்தலுடன் திறக்கவே சிரமப்பட்டு... கசக்கினாள்.

அதனால் காலில் ஒயரோ, கயிறோ இடறி விழப்போக... பக்கத்தில் நின்றிருந்த கோகுல் சடாரென தாங்கிப் பிடித்தான்.

"ஏய்... ஏய்.... என்னாச்சு?"

"ஸ... ஸாரி... ஒண்ணுமில்லே!"

"வர்ஷினி... கண்ல என்ன? தண்ணியா வழியுது!"

"ஏதோ... விழுந்துடுச்சு..."

"இப்படிக் காட்டு!"

அவள் முகத்தை ஏந்தி, கண்களில் "ப்பூ" என்று ஊதினான்.

உடனே உறுத்தல் அகன்று.... தெளிவாய்த் தெரிந்தது.

"சரியாப் போச்சா?"

"ம்!" என்றவள் அன்பு பொங்கிய கோகுலின் முகத்தை வெகு அருகில் அன்றுதான் பார்த்தாள்.

முகத்தை தாங்கியிருந்த கரங்களின் ஸ்பரிசம்... இறந்துப் போன தாயின் கதகதப்பிற்கு இணையாய் இருந்தது.

கோகுலின் முகத்திலும் உணர்ச்சியின் பிரவாகம்.

இருவரின் கண்களும் மீளாத அன்புடன் கட்டுண்டன.

யாரும் அறியாதவாறு மெல்ல அவன் தோளில் தலை சாய்த்தாள் வர்ஷினி.

கோகுல் அவள் கரத்தை தன் கைக்குள் அடக்கி இருக்கினான்.

சசிதரன் மணையில் அமர்ந்திருந்தபடி இவர்களைப் பார்த்து விட்டவன் நிவேதிதாவை சீண்டி, அவர்களை காட்டினான்.

"மேடம்... இந்தளவுக்கு முன்னேறிட்டாங்களா? சசி... கிட்ட வாங்க!" என்றவள் அவன் காதில் கிசுகிசுக்க... போட்டோகிராபர் அக்காட்சியை ஷூட் பண்ண...

சசி அவரை சைகை காட்டி அருகே அழைத்து காதில் ஓத...

போட்டோகிராபரும், வீடியோகிராபரும் கோகுல், வர்ஷினியை படம் எடுத்துத் தள்ள....

ஃப்ளாஷ் வெளிச்சத்தில் நனைந்த இருவரும் திடுக்கிட்டு நிமிர... நடந்தவைகள் என்னவென்று உணர்த்த...

வெட்கத்தில் கூனிக்குறுகி வர்ஷினி அவன் மார்பில் முகம் மறைத்தாள்.

சுற்றிலும் நின்றிருந்தவர்கள் 'ஹோ'வென்று கூச்சலிட....

கேமரா... அவர்களை உள்வாங்கிக் கொண்டே இருந்தது.

என்றென்றும் இனிக்கும் நினைவுகளின் ஆரம்பமல்லவா அக்காட்சி?!

**(முற்றும்)**

## பிரட் தயிர் போண்டா

*தேவையான பொருட்கள்:*

மில்க் பிரெட் - 10 சிலைசுகள், கெட்டித்தயிர் - 2 கப், வெள்ளரி துருவல் - ½ கப், கேரட் துருவல் - ¼ கப், மிளகுத்தூள் - 1 ஸ்பூன், நறுக்கிய தக்காளி - 6 துண்டுகள், பச்சை மிளகாய் - 4, உப்பு - ருசிக்கேற்ப, உலர்ந்த திராட்சை - சிறிதளவு.

*செய்முறை:*

ரொட்டி துண்டங்களை நீரில் நனைத்து எடுத்து நீரை ஓட்ட பிழிந்து கையால் நன்கு மசித்து சிறு உருண்டைகளாக்கி கொள்ள வேண்டும். தயிரில் மிளகுத்தூள், உப்பு, நறுக்கிய பச்சை மிளகாய் சேர்க்க வேண்டும். ஒரு அகலத் தட்டில் ரொட்டி உருண்டைகளை வைத்து அதன்மீது வெள்ளரி துருவல், கேரட் துருவல், தக்காளி துண்டங்களை தூவி அதன் மீது தயிர் கலவையை ஊற்ற வேண்டும். பார்ப்பதற்கு தயிர் போண்டா போலிருக்கும் அதன் மீது உலர்திராட்சைகளை பரப்ப வேண்டும்.

திடீர் விருந்தாளிகள் வந்துவிட்டால் நொடியில் தயாரிக்கும் 'பிரட் தயிர் போண்டா' சுவையாக இருப்பதுடன், எளிதில் ஜீரணமாகும். பெரியவர்களுக்கும் மிக நல்லது.

- வத்சலா சதாசிவன், சிட்லபாக்கம்.